ANNAMALAI UNIVERSITY ECONOMIC SERIES No. 8 (B)

பொருளாதார நூல்

முதற் பாகம்

*

வி. ஜி. ராமகிருஷ்ண அய்யர், எம். ஏ.,
பொருளாதாரப் பேராசிரியர்

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

ANNAMALAI UNIVERSITY ECONOMIC SERIES No. 8 (B)

பொருளாதார நூல்

முதற் பாகம்

*

வி. ஜி. ராமகிருஷ்ண அய்யர், எம். எ.,
பொருளாதாரப் பேராசிரியர்

அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

சாது அச்சுக்கூடம்,
மயிலாப்பூர், சென்னை—4

மு க வு ரை

இப் பொருளாதார நூலானது தொடக்கத்தில் மாண வர்கள் அறிய வேண்டிய முக்கிய கருத்துக்களை மட்டும் எடுத் துரைக்கின்றது. இந்நூல் பரிட்சைக்குப் படிக்கும் மாண வர்கட்கே யன்றி, பொருளாதார சாராம்சத்தை தெரிந்து கொள்ளும் நோக்க முள்ளவர்களுக்கும் பயனுயிருக்கும். இப் புத்தகத்தை எழுதும்படி அனுமதி கொடுத்த அண்ணுமலை சர்வ கலாசாலை அதிகாரிகளுக்கு என் நன்றியறிவை வணக்க மாய்த் தெரிவித்துக் கொள்கிறேன்.

வி. ஜி. ராமகிருஷ்ண அய்யர்.

பொருளடக்கம்

அத்தியாயம் பக்கம்

1. பொருளாதாரத்தின் இயல்பும் நோக்கமும் :... 1—17

பொருளாக்க வாழ்க்கையின் மூலாதாரம் ; பொருளாதார வரையறுப்பு ; பொருளாதாரத்தின் ஆராய்ச்சி முறை ; பொருளாதார நூலின் இயல்பு ; பொருளாதாரமும், அரசியலும் ; பொருளாதாரமும், அறநூலும் ; பொருளாதாரமும், உளநூலும் ; பொருளாதாரமும், பொருள்வகைத் தொகுதியும் ; பொருளாதாரமும், சரித்திரமும் ; பொருளாதாரத்தின் பகுதிகள் ; பொருளாதாரமும், பொது நலனும்.

2. பொருள் நுகர்வு : ... 18—29

மக்களின் விருப்புப் பொருள்கள் ; பொருளியல்த் தேவை ; குறைபயன் விதி ; தனியாளின் தேவை இடாப்பு; தேவை நெகிழ்ச்சி; எஞ்சலின் விதி ; கூட்டுத்தேவை.

3. பொருளுற்பத்தி : ... 30—77

பொருளுற்பத்திச் சாதனங்கள் ; பருவக் காற்றும், விவசாயச் செழிப்பும் ; பொரு

ளுற்பத்தி விதிகள்; விரிந்து செல் பயன் முறை; மாருப் பயன்முறை; பெருவீதப் பொருளுற்பத்தி; ஓரிடத் தொழிற் செறிவு; இந்தியாவின் பொருளுற்பத்தி — நிலம், உழைப்பு, முதல், தொழில் அமைப்பு; உழவுத்தொழில், ஆலைத்தொழில் ஒப்பீடு; கிராம வாழ்க்கையும், கிராம வாசிகளின் பொருளாதார நிலைமையும்; கிராமக் கைத் தொழில்கள்; நகர வாழ்க்கையும், நகர வாசிகளின் பொருளாதார நிலைமையும்; நகரத் தொழிற்சாலைகள்; வேளாண்மை; பயிர்களின் பகுப்பு—நெல், கோதுமை, பார்லியும், ஓட்சும், தினை, சோளம், பக்வீட், பலவித பருப்பு வகைகள், எண்ணெய் விதைகள், சணல், பருத்தி, நீலம், புகையிலை, தேயிலை, காப்பி, கொய்ன, மரக்கறி, பழ வர்க்கங்கள். முதல்—பெருமுதல் தேற்றம்; சேமிப்பும், செலவும்.

4. ஜனப்பரப்பு: ... 78—86

உலக ஜனத்தொகை; ஜனநெருக்கத்தின் காரணங்கள்; மால்தஸ் வரையிட்ட ஜனத் தொகை வளர்ச்சி விதி;

5. பொருள் மாறுதல்: ... 87—100

சந்தைகள்; பிரதிதினச் சந்தை; வழக்க விலை பண்டமாற்று முறை; வருமானம்; வருமானத்தின் ஆதாரங்கள்; வருமான ஏற்றத் தாழ்வு; தேசீய வருமானம்; தேசீய வருமானத்தையும், செல்வத்தையும் அளவிடும் விதம்; வருமானப் பிரிவுகள்.

6. விபாகம் : ... 101—115

நிலவாரம் ; கூலி ; வட்டியும், இலாபமும் ; இலாபப் பிரிவினை ; இலாபக் கொள்கை.

அனுபந்தம் :

1. அரும்பத விளக்கம் ... 116—118
2. புள்ளி விவரங்கள் ... 119—126

—

அத்தியாயம் 1

பொருளாதாரத்தின் இயல்பும் நோக்கமும்
(Nature and Scope of Economics)

பொருளாக்க வாழ்க்கையின் மூலாதாரம்
(Basis of Economic Life)

மானிட வாழ்க்கையில் பொருளை அதிகரிக்கும் இயக்கம் எவ்வாறு ஏற்படுகின்றது? மனிதன் தன்னைத் திருப்தி பண்ணிக்கொள்ள அநேக பொருள்களை விரும்புகிறான். உதாரணமாக உணவு குறைந்துபோனால் உணவுப் பொருள்களாகிய அரிசி, கோதுமை முதலியன நிலத்தைப் பண்படுத்தி உண்டாக்கப்படுகின்றன. இவ்விதமான விருப்பப் பொருள்களினால்தான் மக்களின் பொருளாக்க வாழ்க்கை ஏற்படுகின்றது. ஆகையால் மனிதனுக்கு விருப்பப் பொருள்கள் இல்லாவிடின் பொருளாக்க முயற்சியும் அதனால் ஏற்படும் பொருளாக்க வாழ்க்கையும் இருக்க முடியாது. பொருளாக்க அமைப்பு முழுதும் மனிதனுடைய விருப்பப் பொருள்களை அடிப்படையாகக்கொண்டு நடைபெறுகிறது. ஆனால் மனிதன் தேவையான பொருள்களை வேலை செய்துதான் அடைதல் வேண்டும். ஆகையால் பொருள்களை விரும்புவதற்கும், அப்பொருள்களினால் திருப்தியடைவதற்கும் பொருளை அதிகரிக்கும் முயற்சி வேண்டும்.

தேவைகள் – முயற்சிகள் – திருப்தி
(Wants – Efforts – Satisfaction)

விருப்புப் பொருள்களுக்கும், பொருளை அதிகரிக்கும் முயற்சிக்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு. மனிதனுடைய தேவைகளில் சில இன்றியமையாதனவாகும். பசி, தாகம், உடை முதலியவற்றை உதாரணமாக எடுத்துக் கொள்ளலாம். இத்தகையன மானிட வாழ்க்கைக்கு முக்கியமானதாகும்.

அவைகளைத் திரட்டி திருப்தி அடைய மானிட முயற்சி அவசியம். மானிட வாழ்க்கையில் அடிப்படையான விருப்புப் பொருள்களை அடைந்தவுடன் புதிய தேவைகள் ஏற்படு கின்றன. தவிரவும் தேவைகள் பலவிதம். உணவில் திருப்தி யடைந்தவுடன் பலவித உணவுகளும், மேல்தரமான உணவு களும் அடைய விருப்பம் ஏற்படுகின்றது. இதேபோல விருப்பம் மற்றெல்லாப் பொருள்களிலும் ஏற்படுகிறது.

மக்களின் விருப்புப் பொருள்களை மூன்று கூறுகளாகப் பிரிக்கலாம் : (1) சரீர சம்பந்தமான தேவைகள்—சரீரசம்பந்த மான விருப்புப் பொருள்களில் ஒவ்வொன்றும் அளவில் அடங் கியதும், இலகுவில் திருப்தியடையக் கூடியதுமாகும். (2) வெளிப்பார்வைக்காகவும் மக்கள் சில தேவைகளை ஏற்படுத்திக் கொள்கின்றனர் – உயர்தரமான ஆடைகள், உணவுகள் முதலியவற்றை உதாரணமாகக் கூறலாம். (3) மக்களின் மனதுக்குரிய விருப்பங்கள் – இவை சாஸ்திரத் தேர்ச்சியினால் உண்டாக்கப்படும் பொருள்களாகும்.

பண்டைக் காலத்தில் மக்களின் விருப்புப் பொருள்களை தம் முயற்சியினாலே அடைவது சாத்தியமாயிருந்தது. இக் காலத்தில் விருப்புப் பொருள்கள் எண்ணிக்கையிலும், இனத் திலும் அதிகமாயிருப்பதால் அவைகளைத் தாமாகவே எளிதில் அடைவது இயலாது. ஆரம்பத்தில் மக்களின் நெருக்கடியான தேவைகளைத் திருப்திபண்ணும் பொருட்டு மானிட முயற்சிகள் அத்தேவைகளை நோக்கிச் செல்லுகின்றன. பிறகு நாகரீகம் அதிகப்பட மக்கள் முயற்சியால் புதிய விருப்பங்கள் ஏற்படு கின்றன. இப்புதிய விருப்பங்களைத் திருப்தி பண்ண மறுபடி யும் புதிய முயற்சிகள் ஏற்படுகின்றன. இக்காலத்தில் மக்களின் தேவைகளுக்கும் முயற்சிக்கும் உள்ள சம்பந்தம் இலகுவான தென்று சொல்ல முடியாது. ஆகையால் ஒவ்வொருவரும் தம் சக்தியால் உற்பத்தி செய்யும் பொருள்களைப் பிறருடைய பொருள்களுடன் பண்ட மாற்றுதல் செய்கின்றனர்.

பொருளாதார வரையறுப்பு
(Definition of Economics)

முற்காலப் பொருள் நூலாளர் பொருளாதாரம் செல்வத்தைப்பற்றி விவரிக்கும் நூலென வரையறுத்தனர். இவ்வித வரையறுப்பு அவ்வளவு போதுமானதல்ல. மார்ஷல் (Marshall) என்னும் பொருளாதார நிபுணர் பொருளாதாரத்தைப் பின்வருமாறு விளக்கி விவரித்தனர். பொருளாதாரம் மக்கள் தம் வாழ்க்கையில் கைக்கொள்ளும் பொருளாக்க முயற்சி முறையை விவரிக்கும் நூலாகும். அதாவது பொருளாதாரம் ஒரு புறம் செல்வ அறிவு நூலாயிருப்பினும், அது முக்கியமாக செல்வ வளர்ச்சியில் மக்கள் ஈடுபடும் தன்மையை எடுத்துக் காட்டுகிறது. தற்காலப் பொருள் நூலாளர் வேறு வகையாகப் பொருளாதாரத்தின் இயல்பை விளக்குகின்றனர். மக்களுக்குள்ள தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு வேண்டிய வழி வகைகள் குறைவாயுள. ஆகவே குறைவாயுள்ள பொருள்கள் பல வழிகளில் உபயோகப்பட்டு வருகின்றன. உதாரணமாக ஒரு குறிப்பிட்ட நிலத்தைப் புல்தரையாக உபயோகித்தால் அதே சமயத்தில் வேறு தானியங்களை அதில் பயிரிட முடியாது. ஆகையால் ஒவ்வொரு பொருள் விளைவிக்கும் சாதனத்தையும் இரண்டிலொரு வகையிலேதான் உபயோகப் படுத்தலாம். எனவே பொருளாதாரம் பொருளாக்க முயற்சியில் ஒவ்வொரு பொருளையும் எவ்விதத்தில் மிகச் சிறந்த முறையில் பயன் படுத்தலாமென்பதையே விளக்குவதாகும்.

பொருள் நூலாளர் பொருளாதாரத்தின் தன்மையை மேற் கூறியபடி பலவிதமாக வரையறுத்தபோதிலும், அடிப்படையாக அவ்வரையறுப்புகளில் அதிக வித்தியாசமில்லை. பழைய நூலாசிரியர் பொருளாதாரத்திற்கு அரசியல் சிக்கன முறை (Political Economy) என்ற பதத்தை அளித்துவந்தனர். ஒரு வகையில் அப்பதமே தகுந்த பதமாகும். எவ்வாறு இல்லாள் இல்லோம்பும் வகையில் இல்லத்து வருவாயை சிக்கன முறையில் நடத்துவாளோ அங்ஙனம் அரசியலறிஞர் அரசாங்க வருவாயைச் சிக்கனமாக அதிகப் பயன்படுமுறையில் உபயோகிக்க முயலுகின்றனர். இக்காலப் பொருளாதார வரை

யறுப்புப்படி பொருளாதாரத்தில் அடங்கும் விஷயங்கள் அதிக பரப்புடையனவாகும். ஆயினும் பெரும்பாலும் கைவசமுள்ள பொருள்களை மக்களின் தேவைகளுக்கு ஏற்ப எவ்வளவு பயன் படுத்த முடியுமோ அவ்வளவு பயன் படுத்துவதே பொருளா தாரத்தின் நோக்கமாகும்.

பொருளாதாரத்தின் ஆராய்ச்சிமுறை
Methods of Economic Investigation

பொருளாதார ஆராய்ச்சியில் வழங்கும் முறைகள் இருவகையாவன:— அதாவது அனுமிதம் (Deduction) அனு மானம் (Induction). அநுமிதமுறை நியாய யுக்தமானதாகும். அம்முறையானது மக்களின் சமூக வாழ்வு, பிரபஞ்ச காரண காரிய தத்துவம் இவற்றின் சாதாரணமான சில விஷயங்களி லிருந்து யூகிக்கும் சில உண்மைகளேயாம் – உதாரணமாக இவ் விஷயங்களில் சிலவற்றை நாம் குறிப்பிடலாம்.

1. மக்கள் எப்பொழுதும் தம் சிறிய முயற்சியால் பெரிய பலனை அடைய விரும்புகின்றனர். (Law of Least Sacrifice)
2. குறை பயன் விதி (Law of Diminishing utility)
3. ஜனத்தொகை விதி (Law of Population)
4. தடையில்லாப் போட்டி (Free Competition)

இவ்விதப் பொது தத்துவங்களை அடிப்படையாகக் கொண்டு சில அநுமிதப் பிரமாணங்கள் ஏற்படுத்துகின்றனர். பழைய பொருளாதார நூலாசிரியர் மேற்கண்ட முறையை அனுஷ்டித்தனர்.

அனுமான முறை (Inductive Method) அநுபவத் தாலாயது. அதாவது சமூக வாழ்விலுள்ள நடவடிக்கைகளை, இக்காலத்தை புள்ளிவிவரங்களாலும், பழைய காலத்தை சரித்திர மூலமாயும் அறிந்துகொண்டு அவற்றிலிருந்து பொருளாதாரப் பொது விதிகளை ஏற்படுத்துவதற்கு இம்முறை சாதகமாகும்.

அநுமித முறையானது பொது விஷயங்களிலிருந்து உறுப்புறுப்பாகக் குறிப்பிட்டுக் காட்டுதலாகும் ; அனுமான முறையானது நுட்ப விஷயங்களிலிருந்து பொதுவான

உண்மைகளை ஸ்தாபிப்பதாகும். அனுமான முறையை சரித்திர வரலாற்று முறை (Historical Method)யின் ஓர் அம்சமாகக் கூறலாம்.

அநுமித முறையின் நன்மையும், தீமையும் கவனிக்கத் தக்கவை. பொருளாதார ஆராய்ச்சியில் சில பகுதிகளில் இம் முறை அதிகப் பயனை அளிக்கிறது. உதாரணமாக பொருளாதாரத்தின் முக்கிய பகுதிகளாகிய பொருள் மாற்று (Exchange) பொருள் விபாகம் (Distribution) இவற்றின் சிக்கலான விஷயங்களை ஆராய்வதற்கு இம்முறையே தகுந்ததாகும். தவிரவும் இது இலகுவான முறையாகக் கருதப்படுகிறது ஏனென்றால் நாம் எல்லோரும் ஒப்பக்கூடிய சில பொது விதிகளிலிருந்து சில நுட்பமான கருத்துக்களை தெரிந்துகொள்வது சுலபமே. அனுமிதம் மிகவும் இலகுவான முறையாயிருப்பதால் பொருளாதார நூல் வளர்ச்சியின் ஆரம்ப காலத்தில் இம் முறையே உபயோகப்பட்டு வந்தது.

ஆனல் இம்முறையின் முக்கிய குறைபாடு என்னவென்றால் குறைவுடைய உண்மைகளிலிருந்து சில விதிகளை நாம் அனுமானித்துக்கொண்டு அவற்றை எக்காலத்திலும், எவ்விடங்களிலும் ஒப்புக்கொள்ளக்கூடிய விதிகளெனக் கருதும்படி ஏற்படலாம். ஆகையால் அநுமிதத்தால் ஏற்படும் கொள்கைகளை அனுமானத்தால் ரூபிக்க வேண்டும்.

அனுமான முறையிலும் சில நன்மைகளும், தீமைகளும் உள. அனுமான முறையின் சிறப்பு என்னவென்றால் அம்முறை நமக்குப் புலப்படும் விஷயங்களையே ஆதாரமாகக் கைக்கொள்கின்றது. நமக்குப் புலப்படும் கருத்துக்களைக்கொண்டு புலப்படாத கருத்துக்களை நிர்ணயிக்கிறோம். அநுமித முறைக்கு அனுமானமுறை முக்கிய உபகருவியாகும், அனுமான முறையின் ஒரு அம்சமானது சரித்திர சம்பவங்களை ஓட்டியிருப்பதால் ஒரு காலத்தில் நிர்ணயிக்கப்பட்ட பொருளாதார விதிகள் மற்றொரு காலத்திற்கு எவ்வளவு பொருத்தமுடையன என்பதை தெரிந்து கொள்ள அனுகூலமாயிருக்கிறது. இம்முறையில் நாம் தெரிந்து கொள்ளக்கூடிய தென்னவென்றால் பொருளாதார விதிகள்

பொதுவாக எக்காலத்திற்கும் பொருத்தமுடைய தாயில்லாமல் காலத்திற்கேற்றவாறு மாறுதலடைகின்றன என்பதே யாகும்.

அனுமான முறையின் முக்கிய குறைபாடு என்னவென்றுல் அம்முறையையே கைக்கொண்டால் பொதுக் கருத்துக்களை நாம் புறக்கணிப்பதாகும். அதாவது விஷயங்களைப் பகுத்து இனப்படுத்தாமல் பெருக்கிக்கொண்டே போவதற்கு இம்முறை இடங்கொடுக்கின்றது.

எனவே இவ்விரு முறைகளும் தனித்தனியே பயனற்ற தாகும். ஆகையால் உண்மையான முறையாதெனின் இவ் விரண்டு முறைகளையும் அனுஷ்டிக்கவேண்டும் என்பதே. எவ்வாறு ஒரு மனிதன் நடந்து போவதற்கு இருகால்களும் முக்கியமோ அவ்வாறே விஞ்ஞான முறையில் பொருளாதார தத்துவங்களை ஆராய்வதற்கு இவ்விரு முறைகளும் அவசிய மாகும். சுருங்கச் சொல்லுமிடத்து, பொருளாதாரத் தத்துவங் களை ஆராய்வதில் நாம் கடைப்பிடிப்பது அநுமிதமா அல்லது அனுமானமா என்று கேள்வி கேட்காமல் இவ்விரு முறைகளை யும் சமயோஜிதம்போல் அனுசரிக்க வேண்டுமென்றே நாம் முடிவுகட்ட வேண்டியவர்களா யிருக்கிறோம்.

பொருளாதாரநூலின் இயல்பு
(Nature of Economics)

பொருளாதார நூலின் இயல்பு, நோக்கம் இவற்றை விவரித்து விளக்குவதற்கு எவ்வித விஷயங்கள் பொருளா தாரத்தில் அடங்கியுள்ளன வென்றும், அவற்றிலிருந்து பொருளாதாரம் எவ்வித தத்துவங்களைக் கற்பிக்கிறதெனவும் நாம் முதலாவதாகக் குறிப்பிடவேண்டும்.

பொருளாதாரத்தின் நோக்க முறையை விவரிக்குமுன், விஞ்ஞானம் (Science), கலை (Art) என்ற பதங்களின் பிர யோகத்தைத் தெரிந்துகொள்ளவேண்டும்.

விஞ்ஞானமென்பது எவ்விஷயத்திலும் நாம் அறிந்து கொள்ள வேண்டிய தத்துவங்களை ஒழுங்குபடுத்தி அவற்றி

லிருந்து சில பொது விதிகளை ஏற்படுத்துதலேயாம். கலை என்பதும் அம்மாதிரியே. ஆனால் கலைகள் சம்பந்தப்பட்ட விஷயத்தில் அவற்றிலிருந்து நாம் அறியும் உண்மைகள் தினசரி வாழ்க்கையில் பயன்படுத்தக் கூடியதாகும். விஞ்ஞானத்திலோ அவ்வித பிரயோகத்தை நாம் எதிர்பார்ப்பதில்லை. விஞ்ஞானம் நாம் எடுத்துக்கொண்ட விஷயங்களை விவரித்துக் கூறுகிறது. கலையோ ஏதாவது ஒரு பிரயோஜன மடைவதற் குரிய முறைகளை எடுத்துக் காட்டுகிறது.

விஞ்ஞான நூல்கள் பலவகைகளாம். அவையாவன : 1. உலகத்துப் பொருள்களை உள்ளது உள்ளவாறே கூறுகின்றவை இயற்கை விஞ்ஞானமெனப் (Positive Science) பெயர்படும்—உதாரணமாக பௌதிகநூல் (Physics) ரஸாயன நூல் (Chemistry) 2. உலகத்து நிகழ்ச்சிகளை அவை எங்ஙனம் இருக்கின்றனவோ அங்ஙனம் எடுத்துரைக்காமல் நம் மனதில் எங்ஙனம் இருக்க வேண்டுமென்று எண்ணுகிறோமோ அவ்விதம் கூறுகின்ற விஞ்ஞான நூல்களை விதிக்குரிய விஞ்ஞானமென்று (Normative Science) கூறுகிறோம்.—உதாரணமாக அறநூல் (Ethics).

பொருளாதாரமானது விஞ்ஞானம், கலை இவ்விரண்டின் அம்சங்களையுமுடையதென்றே கூறவேண்டும். பொருளாதார நிகழ்ச்சிகளை அவை எங்ஙனம் நடைபெறுகின்றனவோ அங்ஙனம் கூறுங்கால் பொருளாக்கவியல் ஒரு யதார்த்த விஞ்ஞானமென்றே கூறலாம்—அதாவது பொருளாதாரக் காரண காரியத்துவங்களை (Cause and Effect) அப்படியே எடுத்துரைத்தல் என்பதாம். 2. பொருளாதார நிகழ்ச்சிகளில் சில எவ்வாறு நடைபெற வேண்டுமென்று நாம் கூறுகிறோம். அப்பொழுது பொருளாதாரம் விதிக்குரிய விஞ்ஞானத்தின் இயல்பை உடையதாகும், உதாரணமாக, எவ்வாறு மக்களின் நல்வாழ்வு சம்பந்தமாக முயற்சி செய்யவேண்டுமென்றும், அதற்காக அரசாங்க ஸ்தாபனங்கள் எவ்வாறு செல்வ வளர்ச்சிக்கும் சமூக சுகவாழ்வுக்குமாக அமைக்கப்பட வேண்டுமென்றும் நாம் எடுத்துரைக்கும் பொழுது பொருளாதாரம் விதிக்குரிய விஞ்ஞானத்தின் இயல்பை அடைகிறது.

மார்ஷல் (Marshall) போன்ற சில பொருளாதார நிபுணர்கள் பொருளாதாரத்தை ஒரு விஞ்ஞானமா அல்லது கலையா அல்லது இவ்விரண்டின் இயல்பையும் உடையதா என்ற தர்க்கத்தை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்களின் அபிப்பிராயப்படி பொருளாதாரத்தில் நாம் அறிய வேண்டிய விஷயங்கள் என்னவென்றால், எம்மாதிரி நிகழ்ச்சிகள், எம்மாதிரி மக்கள், எம்மாதிரி பொருளாக்கத் தூண்டுகோல்கள் பொருளாதாரத்தில் அடங்கியிருக்கின்றன என்பதேயாம். பொருள் நூலாளராகிய மார்ஷல் என்பவரின் அபிப்பிராயப் படி பொருளாதாரமானது மக்கள் தம் தினசரி வாழ்க்கையில் எவ்வாறு பொருளாக்க முயற்சியில் ஈடுபடுகிறார்கள் என்பதைப் பற்றியதேயாம். இவ்வித விஷயங்களை நாம் அறிவதில் மக்கள் எப்பொழுதும் சுயநலனையே கருதுவார்களென்று காண் கிறோம். ஆயினும் அவர்கள் பொருளாக்க முயற்சிகளில் சன்மார்க்க முறையில் கலந்து கொள்வதில்லையென்ற கருத் துக்கள் தவறானதாகும். மக்களின் பொருளாக்க முயற்சிகளை நிர்ணயிக்க பெரும்பாலும் பணமே ஒரு கருவியாகும்.

பொருளாதாரத்தை ஒரு விஞ்ஞான சாத்திரமாக கருது வதால், எல்லா விஞ்ஞான சாத்திரங்கள்போல், நாம் பொருளா தாரத்திற்குரிய சில பொது விதிகளை ஏற்படுத்துவது அவசிய மாகும். பொருளாதார விதிகள் இதர விஞ்ஞானம்போல் சமய யுக்தமான (Hypothetical) விதிகளேயாம். பொருளாதார விதிகள் எக்காலத்திலும், எவ்விடத்திலும் பொருந்தக் கூடியனவென்று சொல்லமுடியாது. எல்லாச் சமூக நூல் களிலும் பொருளாதாரத்தையே கூடியவரை ஒரு யதார்த்த நூலாகக் (Exact Science) கருதலாம். ஏனெனில் பொருளாக்க முயற்சிகளை நிர்ணயிப்பதற்கு பணம் ஒரு அளவு கருவியாக உபயோகப்படுகிறது. ஆயினும், பொருளாதார விதிகளை, பௌதிகம், வானசாஸ்திரம் முதலிய நூல்களின் விதிகளைப் போல் அவ்வளவு யதார்த்தமாக எடுத்துரைப்பது கடினம். பௌதிகம் வானநூல் இவற்றின் சம்பவங்களை கவனித்து இனப்படுத்துவது சுலபம். பொருளாதார விதிகளை அவ்வாறு பகுத்து இனப்படுத்துவதோ சுலபமன்று. பொருளாதாரத்தின் விதிகளை ஆகர்ஷண சக்தியின் விதிகளுக்கு ஒப்பிடாமல்

சமுத்திர நீரோதத்துக்குரிய விதிகளுக்கு (Laws of the Tides) ஒப்பிடலாம். நீரோதத்துக்குரிய விதிகள் பிற சிக்கலான நிலைமைகளைச் சார்ந்து இருப்பதால் அவைகளை திட்டபடுத்தல் சுலபமன்று. திட்டப்படுத்த முடியாத பொருளாதார விதிகள் சாதாரண திட்டமான ஆகர்ஷணசக்தி விதிகளோடு ஒப்பிடப் படாமல் திட்டமற்ற நீரோதத்துக்குரிய விதிகளோடு ஒப்பிடப் படுகின்றன.

பொருளாதாரமும் இதர சாத்திரங்களும்
Economics in relation to other Sciences

இக்காலப் பொருளாதாரம் மனிதனின் தினசரி வாழ்க்கையிலும், சமூக வாழ்க்கையிலும் முக்கியமான பெரும் பகுதிகளைத் தழுவியுளது. ஆகவே, இதர விஞ்ஞான சாத்திரங்களுடன் இது ஏறக்குறைய நெருங்கிய சம்பந்தமுடையது. இதர சாத்திரங்களில் ஏற்படும் வேறுபாடுகளும், வெளிப்படும் தத்துவங்களும் பொதுமக்களின் பொருளாக்க வாழ்க்கையைத் தீவிரமாகத் தாக்குகின்றன. உதாரணமாக பௌதிக நூலில் (Physics) வெளிப்படுத்தப்பட்ட புதிய கருத்துக்களாகிய மின்சாரம், நீர் வீழ்ச்சியின் சக்தி, ரஸாயன நூல் (Chemistry) ஆராய்ச்சிகளால் வெளிப்படும் விவசாயம், கைத்தொழிலுக்குரிய புதிய கருத்துக்கள் முதலியனவெல்லாம் ஒரு தேசத்தாரின் பொருளாக்க வாழ்க்கையில் பலமாறுபாடுகளை உண்டாக்கு கின்றன. பொருளாதாரத்திற்கும் இதர நூல்களுக்குமுள்ள சம்பந்தத்தை சுருக்கமாக கீழ்கண்டவாறு குறிப்பிடலாம்.

1. பொருளாதாரமும், அரசியலும்
Economics and Politics

இவ்விரண்டு நூல்களும் ஜனசார நூல்கள். பொருளாதாரம் மக்களின் பொருளாக்க முறைகளை விவரிக்கின்றது. அரசியல் நாட்டு ஆட்சி முறையை விவரிக்கின்றது. பொருளாதாரத்திற்கும், அரசியலுக்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு. ஏனெனில் (1) ஒரு தேசத்தாரின் பொருளுற்பத்தி, பொருள் விபாகம் முதலியன அத்தேசத்தின் அரசியல் முறையை பொருத்

திருக்கின்றன. பெரும் பொருள் உற்பத்தியும் நியாயமான பொருள் விபாகமும் ஒழுங்கான அரசியல் நிர்வாகத்தில்தான் ஓங்கும். ஒழுங்கற்ற நிர்வாகத்தில் குன்றும். மற்றும் பொருளுற்பத்தி, பொருள் விபாகம், கைத்தொழில் இவை அரசாங்க உடைமையாக நிர்வகிக்கப்படும் முறைக்கும், அவை ஜனங்களுக்கு சொந்தமாயும், தடையற்ற உடன்படிக்கை தன்மையில் நிர்வகிக்கப்படும் முறைக்கும் அதிக வித்தியாச மிருப்பதைக் காணலாம். 2. ஒரு தேசத்தின் பொருளாதார நிலைமையானது அத்தேசத்தின் அரசாங்க முறையைப் 'பாதிக்கிறது. ஆடுமாடு மேய்க்கும் தொழிலை அடிப்படையாகக் கொண்டுள்ள தேசத்தாரின் அரசியல் முறைக்கும், பயிர்த் தொழிலையுடைய தேசத்தாரின் அரசியல் முறைக்கும் கைத்தொழிலில் அமர்ந்துள்ள தேசத்தாரின் அரசியல் முறைக்கும் இடையே பல வேறுபாடுகளைக் காணலாம். 3.பொருளாதார அம்சங்களும், அரசியல் அம்சங்களும் அநேகமாய் இணைக்கப்பட்டிருப்பதை சில விஷயங்களில் நன்கு காணலாம். உதாரணமாக பொருளுற்பத்தி, தொழிற்கல்வி, போக்குவரவு சீர்திருத்தங்கள், வெளிநாட்டு வியாபாரம், கூலி வேலைக்காரரின் உரிமைகளைப் பாதுகாத்தல், வேலையில்லாத் திண்டாட்டம், முதியோரின் உபகாரச் சம்பளம் முதலியவைகளைக் குறிப்பிடலாம். சோவியத் ரஷ்யாவில் பொதுமக்களின் பொருளாக்க முயற்சிகளெல்லாம் அரசாங்க அதிகாரத்துக்குள் அடங்கியிருக்கின்றன.

பொருளாதாரமும் அறநூலும்
(Economics and Ethics)

பொருளாதாரம் விஞ்ஞான முறையில் பொருளாதார சம்பவங்களின் காரணங்களை ஆராய்ந்து விளக்குகின்றது. ஆகவே நாகரீகமடைந்த நாடுகளில் ஒவ்வொரு மனிதனும், எவ்வாறு பொருளுற்பத்தி, பொருள் மாறுதல், பொருள் விபாகம், பொருள் நுகர்வு முதலியன நன்முறையில் நடைபெற்று வருகின்றனவென்பதைக் கவனிக்க முடிகிறது. பொருளாதார விதிகளின்படி கூலிவேலை செய்வோரின் ஊதியம் எவ்வாறு நீதிமுறையில் நிர்ணயிக்கப் படுகிறதென்பதை நாம் கவனிப்பது அவசியம். ஆனால் இவ்வித நீதிமுறை பணத்தின்

மதிப்பு, வெளிநாட்டு நாணய மாற்றுமுறை ஆகியவைகளில் அவ்வளவாக கவனிக்கப் படுவதில்லே. பொருளாதார நூலின் முக்கிய பகுதியாகிய பொருள் விபாகம் தர்ம சாஸ்திர முறையில் அமைக்கபட வேண்டுமென்று அறநூல் கருதுகிறது. ஆனல் பொருளாதார முறைப்படி இவ்விதக் கொள்கைகளே நாம் அனுஷ்டிப்பதில்லே. பொருள் விபாகம் எம்முறையில் நடத்தப் படுவது நீதி முறையாகும் என்பதில் பொருளாதார நிபுணர் களுக்குள் அபிப்பிராய பேதத்தைக் காணலாம். பகுத்தறிவில் லாத தர்மத்தை பொருளாதார நூல் கண்டனம் செய்வதுடன் அவ்வித பொருள் விபாகம் எவ்விதம் ஒழுங்காயும், பயன்படும் முறையிலும் நடைபெற வேண்டுமென்றும் எடுத்துக்காட்டு கின்றது. சில பெரிய பொருளாதார நிபுணர்களின் அபிப் பிராயப்படி பொருளாதார நூலே அறநூலின் சேடியெனலாம். அதாவது அறநூலுக்குப் பணிவிடை செய்யும் நூல் என்ப தாகும். அறநூலேப்போல் பொருளாதாரமும் மக்கள் சம்பந்த மான நூலாகும். பொருளாதார முறையில் சம்பவிக்கும் விஷயங்கள் இறுதியில் நீதி முறையைத் தழுவியிருக்க வேண்டும்.

பொருளாதாரமும், உளநூலும்
(Economics and Psychology)

உளநூல் மானசீகத் தோற்றப்பாடுகளே (Mental Phenomena) விவரிக்கின்றது. பொருளாதாரம் செல்வத்தைச் சேர்ப்பதிலும் செலவிடுதலிலும் மக்களின் பொருளாக்க முயற்சிகளே விவரிக்கின்றது. பொருளுற்பத்தி, பொருள் விபாகம், பொருள் நுகர்வு முதலியன மக்களின் மனேபாவம், இச்சை முதலியவற்ருல் மாறுபாடடைகின்றன. ஆகவே பொருளாதாரமும், உளநூலும் நெருங்கிய சம்பந்தமுடையதா யிருக்கின்றன.

இக்காலப் பொருளாதாரக் கொள்கைகள் உளநூலின் உபயோகித வாத தர்சனத்தை (System of Psychology hnown as Utilitarianism) அடிப்படையாகக் கொண்டுள்ளது. அதாவது எவ்வித முயற்சிகளால் அதிகப்பயனடைய முடியுமோ அவற்றை எவ்விதத்திலும் கடைப்பிடிப்பது என்பதே மக்களின்

மனோபாவமாகும். ஆனால் இக்கால உளநூலாளர், உபயோகித வாத தர்சனம் போதாதென்றும், ஒருதலைத் தவறான வழியான தென்றும் கருதுகின்றனர்.

பொருள் நூலாளர் உளநூலின் மூலக் கருத்துக்களை நிர்ணயிக்க வேண்டியதில்லை. உளநூலின் விதிகளைப் பொருளாதார ஆராய்ச்சிக்கு மூல சித்தாந்தங்களாகக்கொண்டு அவற்றின் மூலம் பொருளாதாரக் கருத்துக்களை அனுமானம் பண்ணுகின்றனர். உதாரணமாக பொருளாதாரத்தின் ஒரு பகுதியான பொருள் நுகர்வு, அத்யான்ம வித்தைக்குரிய குறை பயன் விதியை (Psychological Law of Diminishing Satisfaction) அடிப்படையாகக் கொண்டுள்ளது. இதேபோல் மதிப்பு விதிகளும் (Law of Value) அத்யான்ம வித்தைக்குரிய குறை பயன் விதியையே அடிப்படியாகக் கொண்டுள்ளன. பொருளுற்பத்திக்கு சாதனமாகிய கூலிவேலையின் திறமை வேலையை மேன்மேலும் செய்யுங்கால் அதனாலுண்டாகும் களைப்பு வேலைத்திறனை குறைக்குமென்ற சித்தாந்தம் பொருளாதாரத்திற்கும், உளநூலுக்குமுள்ள சம்பந்தத்தை நன்கு விளக்குவதாகும்.

பொருளாதாரமும், பொருள்வகைத் தொகுதியும்
(Economics and Statistics)

புள்ளி விவரங்களின் விசேஷ லக்ஷணம் என்னவென்றால் எண்ணாலாகிய தத்தாமிசங்களை (Numerical Data) எல்லா ஆராய்ச்சிகளிலும் பிரயோகிப்பதேயாம். சில எழுத்தாளர் பொருள் வகைத் தொகுதியை ஒருதனி விஞ்ஞானமாகக் கருத வேண்டுமென்று அபிப்பிராயப் படுகின்றனர். வேறு சிலர் அதைத் தனி நூலாகக் கருதாமல் விஞ்ஞான முறையில் எண்ணைக் குறிக்கிற தத்தாமிசங்களைப் பரிசோதனை செய்யும் ஒரு விஞ்ஞான முறையென்றும், ஆகவே அனுமான தர்க்க சாஸ்திரத்தின் ஒரு பகுதியென்றும் கருதுகின்றனர். புள்ளி விவரமுறையானது எல்லா விஞ்ஞான சாஸ்திரங்களிலும் பிரயோகப்படுகிறது. புள்ளி விவரமுறையானது பொருளாதார ஆராய்ச்சியில் கீழே கண்டபடி அதிகமாக உபயோகப்பட்டு

வருகிறது. 1. 'ஒரு தேசத்தின் பொருளுற்பத்தி, கூலி வேலைகள், ஏற்றுமதி முதலியவற்றைப் புள்ளி விவரங்கள் மூலம் விளக்குதல். 2. அனுமித நியாயப்படி(Deductive Reasoning) நாம் அறியும் உண்மைகளைப் புள்ளி விவரங்கள் மூலம் உறுதிப்படுத்துதல் 3. புள்ளி விவரங்கள் மூலம் சில உண்மைகளைப் பரிசோதித்து அவற்றிலிருந்து அனுபவத்தினலாய பொருளாதார விதிகளை தெரிந்து கொள்ளல்.

பொருளாதாரமும், சரித்திரமும்
(Economics and History)

பொருளாதார ஸ்தாபனங்கள், பொருளாதார வாழ்க்கை முதலியவற்றின் வரலாற்றைக் கூறும் சரித்திரப் பகுதியே பொருள் நூலாளருக்கு அதிக பயனளிப்பதாகும். பொருளாதாரத்திற்கும், சரித்திரத்திற்குமுள்ள நெருங்கிய சம்பந்தத்தைக் கீழே கண்டபடி விவரிக்கலாம். 1. பொருளாதாரக் கொள்கைகளை சரித்திர மூலமாய் உறுதிப்படுத்தலாம். உதாரணமாக பதினெட்டாவது நூற்றுண்டு பிரஞ்சு புரட்சி (French Revolution)யில் பிரான்ஸிலும், அமெரிக்க ஐக்கிய நாட்டு (U. S A.) உள்நாட்டுப் போர் காலத்திலும், இதர யுத்த காலங்களிலும் செலாவணியிலிருந்த தாள் நாணயத்தின் நிலைமை தாள் நாணயத்தின் சில பொதுக் கொள்கைகளை விளக்குகின்றது. சரித்திர மூலமாய் உறுதிப்படாத சில பொருளாதாரக் கொள்கைகளை நாம் நிராகரிக்கவேண்டும். சரித்திர மூலமாய்ப் பல தேசங்களில் கூலி வேலைக்காரரின் கூலி எவ்வாறு நிர்ணயிக்கப் படுகிறதென்ற கருத்துக்கள் பொருளாதாரத்தில் வழங்கிவரும் கூலி நிதிக்கொள்கையை (Wages Fund Theory) மறுக்கின்றது. 2. புதிய பொருளாதாரக் கொள்கைகள் சரித்திர ஆதாரத்தால் ஒப்புக்கொள்ளப் படுகின்றன. உதாரணமாக யந்திர வகைகளும், அவற்ருல் கூலி வேலைக்கு ஏற்படும் விளைவுகளும், வாணிபத் தளர்ச்சி வளர்ச்சிக் கொள்கைகளும் (Theories of the Trade Cycle) சரித்திர மூலமாய் விவரித்து விளக்கப்படலாம். சுருங்கக்கூறின் சரித்திர ஆதாரமின்றிப் பொருளாதாரம் வேரற்றது; பொருளாக்க வரலாற்றின் உதவியின்றிப் பொருளாதாரம் பயனற்றது.

கீழ்க்கண்ட வடிவரேகையால் இதர விஞ்ஞான நூல்களுடன் பொருளாதார நூலின் சம்பந்தத்தை விளக்கலாம்.

மக்களைப்பற்றிய அறிவியல்
(Study of Man)

- மக்களின் விஞ்ஞான நூல்கள். தனிப் பிரகிருதியாக (Sciences of Man as Individual)
  - உளநூல் (Psychology)
  - அங்கநூல் (Physiology)
- சமூக நூல்கள். (Sciences of Man as a Social being)
  - பொருளாதாரம் (Economics)
  - அரசியல் (Politics)
  - அறநூல் (Ethics)
  - சமயம் (Religion)

பொருளாதாரத்தின் பகுதிகள்
(Divisions of Economics)

பொருளாதாரத்தில் அடங்கிய விஷயங்கள் பழைய முறைப்படி—பொருளுற்பத்தி, பொருள்மாற்று, பொருள் விபாகம், பொருள்நுகர்வு என்ற முக்கிய வகுப்புக்களாம். இவ்விதப்பிரிவு இலகுவாயும் தெளிவாயுமுள்ளது. ஆனால் விஞ்ஞான முறையில் இது ஒழுங்கற்றது. பிரயோகத்தில் மேற்கூறிய பிரிவுகள் தனித்தனியாயில்லாமல் ஒன்றோடொன்று இயைந்திருக்கின்றது.

பொருளாதாரப் பிரச்சினைகள் ஒன்றோடொன்று இயைக்கப்பட்டிருப்பதால் ஒழுங்கானமுறையில் எடுத்துரைப்பதற்காக இக்காலப் பொருள் நூலாளர் அவற்றை இரண்டுவகையாகப் பிரித்துள்ளனர்—அதாவது சமநிலைக் கொள்கை (Theory of Equilibrium) மாறுந்தன்மைக் கொள்கை (Theory of Variation). பழைய பொருளாதார வியாக்கியானத்தின்படி மக்கள் எவ்வாறு பொருளுற்பத்தி பண்ணுகின்றனரென்றும், அச்சமூகப் பொருள் விளைவு எவ்வாறு முயற்சிக்குத் தக்கபடி

விபாகிக்கப்படுகிற தென்றும் விளக்கிக் காட்டுவதேயாம். இக்கால வியாக்கியானத்தின்படி பொருளாக்க முறையானது மக்களுக்கும், அவர்களுக்குத் தேவையான பொருள்களுக்கு முள்ள தொடர்புகளை ஆராய்வதும், அவ்வித சம்பந்தம் எப்பொழுது சமநிலையிலிருக்குமென்றும், எப்பொழுது சமநிலை யிலிருந்து மாறுபடுகிறதென்றும் எடுத்துக்காட்டுவதாகும். இவ்விதமாகப் பொருளாதாரப் பிரச்சினைகளை வியாக்கியானப் படுத்தல் மிகவும் கடினமாகத் தோன்றுவதால் பழையமுறையை அனுஷ்டிப்பதே இலகுவானதாகும். பொருளுற்பத்தி, பொருள் மாற்று, பொருள் விபாகம் இவற்றைத் தனித் தனியே எடுத்துக் கூறியபோதிலும் அவை ஒன்றோடொன்று நெருங்கிய தொடர் புடையனவென்ற சித்தாந்தத்தை நாம் மறக்கமுடியாது.

பொருளாதாரமும், பொதுநலனும்
(Economics and Welfare)

பொருளாதார நூலைக் கற்பதால் அந்நூலின் விஞ்ஞானக் கருத்துக்களை நாம் அறிவது ஒருபுறமிருக்க சமூக வாழ்க்கைக் குரிய நல்வழிகளை நாம் அறியலாம். சில பொருளாதார நிபுணர் அந்த விஞ்ஞானப் பகுதியின் ஒளிதரும் பகுதிகளைச் சிறப்பித்துக் கூறுவர். பிறர் அதன் ஒளிதரும் அம்சத்தோடு அதன் பயன்தரும் அம்சத்தையும் அதாவது சமூக நன்மையை அது பெருக்கும் விதத்தில் விசேஷக் கருத்தைச் செலுத்து கின்றனர். சமூகத்தின் பொருளாதாரப் பெருக்கம், பொது நலன் என்ற இந்த இரண்டுவகையில் நிகழும் பயனே பொருளாதாரத்தின் முக்கிய நோக்கமாகும்.

சாதாரணப் பேச்சு வழக்கில், பொருளையும் பொது நலத்தையும் பிரித்துப் பேசுவதில்லை. உதாரணமாக நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் என்று நாம் கூறுகிறோம். அவ்வாறு கூறுங்கால் மனிதன் ஈட்டித் தொகுக்கும் பெரும் பொருளைக் கூறுகின்றோமா அல்லது அவன் துய்க்கும் நல்வாழ்வைக் குறிக்கின்றோமா என்பதை நாம் தெளிவாக அறிவதில்லை. செல்வம் துய்க்கும் சாமான்களின் தொகுதியே. ஆனால் பொதுநலம் என்று குறிக்கப்படுவது மனநலம். ஒரு

வனது தேவையைப் பூர்த்தி செய்வதால், பொருள் பொது நலத்தை ஒருவாறு உண்டுபண்ணக்கூடும். ஆனால் அஃது உண்மையில் நலமாகாது. வெறும் பொருட்குவியல் நலத்தை உண்டுபண்ண முடியாது. பொருள் பெருகப் பெருக மேலும் அதனிடத்தில் ஆசை உண்டாகிறது. உடல் நலம், அவகாசம், மனஅமைதி என்ற இவைகளை கவனியாமல் நாம் பொருளீட்டு வதிலேயே நமது காலத்தையும், ஆற்றலையும் செலவிடு கின்றோம். நமது உடல் நலத்தைப் பற்றிய உண்மையே சமூக நலத்திற்கும் பொருந்தக் காணலாம். மக்களுக்குச் செல்வம் எப்படி நிலைபெறாத இன்பத்தை அளிப்பதில்லையோ, அது போன்ற மக்கட்டொகுதிகட்கும் அஃது அளிப்பதில்லை. ஒரு நாட்டிற் காணப்படும் தனப் பெருக்கத்தால் அந்நாட்டினர்க்கு நலம் வளர்க்கப் படுகிறதென்று உறுதியாகக் கூறுவதற்கில்லை. சாலைகள் அமைக்கப்படலாம்; புதுவீடுகள் கட்டப்படலாம்; ஆனால் அத்தேசத்தில் மக்கள் நல்லுணவற்றும், கல்வி யின்றியும், அதிகவேலை செய்தும் துன்புறலாம். ஆகவே செல்வத்தைமட்டும் பெருக்குவதால் ஓர் நாட்டின் நலம் கெடும் எனினும் பொருட் பெருக்கம் மக்களின் பொது நலத்திற்கு ஆவன செய்யும். ஆனால் பொருட் சுருக்கம் உண்மையாக ஓர் சமூக நஷ்டமேயாகும். இந்த அடிப்படைக் கொள்கையைக் கொண்டே பொருளாதார நிபுணர்கள் தமது கருத்தைத் தொடர்ந்து வெளியிட்டுள்ளனர்.

பொருளாதாரம் என்பது பொருளைப் பற்றியும், பொது நலத்தைப் பற்றியும் விளக்கும் நூல். உண்மையான நலம் பெருகற்குரிய காரணங்களை அது ஆராய்கின்றது என்பதே பல நூலாசிரியர்களின் கருத்து. ஒரு சமூகத்தின் மொத்த நன்மையானது அது மேற்கொண்டுள்ள நீதி, அதன் உடல் நலம், பொருள்வளம் முதலியவற்றையும் பொறுத்துள்ளது. தேக ஆரோக்கியம் பெற்றுக் கல்வியறிவு பண்பாடுகள் சிறந்து, ஆடம்பரமற்ற வாழ்க்கையையும், உயர்ந்த நோக்கங் களையும் கொண்டுள்ள மக்கள் நிறைந்த ஓர் சமூகமே எல்லா வகையான நலங்களையும் பெறும். அதே சமூகம் செல்வ மிகுதியாற் சிறந்திருக்கலாம். ஆனால் நன்மை, உடல் நலம், பண்பாடு என்ற இவைகளிற் சில அமிசங்களிற் குறைந்து

காணப்படும் சாதாரணமாகச் செல்வம் ஓர் நாட்டிற் பெருக அதற்கிணங்கப் பொதுநலப் பெருக்கமும் நிகழ்தல் கூடும். சுகத்தைத் தரத்தக்க உடல், மன ஒழுக்க நிலை, கட்டுக் கடங்கியப் பொருட் பெருக்கம் ஏற்பட்டு அது பல வகுப்பாரிடமும் சரிவர விநியோகிக்கப்படின் பொது நலப்பெருக்கம் உண்டாகும். இதே பொருட் பெருக்கம் ஒரு சமூகத்தின் சுகாதாரத்தைக் குறைத்தும், அதன் ஒழுக்கம், பண்பாடு என்ற இவைகளை அழித்தும் உலோகாயதக் கொள்கையின் வளர்ச்சி காரணமாக உண்டாக்கப்படலாம். ஆனால் அதன் விளைவு பொதுநலக் குறைவும், ஊதியக்குறைவுமே யாகும். அதிகமாகச் சேர்க்கப்படும் பொருள், நீதியற்றனவும், தகாதவுமான வழிகளில் செலவிடப்படலாம். சில பணக்காரர்கள் பொருளின் பெரும் பகுதியைத் தாமேபெற்றுத் தீங்கு விளைவிப்பதுமான இன்பப் பொருள்களையே வாங்கப் பயன்படுத்தலாம். மற்றும் சாதாரண சமூகத்தில் ஒருவனுக்கு முறையாகச் சேர வேண்டிய பங்கை அவன் பெற்றுத் தீங்கு விளைவிக்கக்கூடிய வஸ்துக்களை நுகர நேரிடும். இங்கேகூடப் பொருள் பெருக நலம் குறைவதைக் காணலாம். இக்கால அரசாங்கம் பல பொருளாதார அலுவல்களைப் புரிகின்றது. பொருட் பெருக்கத்திற்கு ஈடுபடுவதுடன் பொதுநலனைப் பெருக்கும் வழிகளையும் பிரயோகிக்கின்றது. ஆகவே அஃது ஒரு காவல் அரசுமட்டுமன்று. அதனை சமூக நன்மை அரசியல் என்றே கூறலாம்.

அத்தியாயம் 2

பொருள் நுகர்வு

(Consumption)

எல்லாவிதப் பொருளுற்பத்தியும் பொருள் நுகர்வுக்கே யாம். ஒரு தார்பரியமுமில்லாமல் நாம் பொருளுற்பத்தி செய்வதில்லை. பொருள் நுகர்வில்லாவிடில், பொருளுற்பத்தி செய்வது சாத்தியமன்று. ஆகையால் பொருளுற்பத்திக்கும், பொருள் நுகர்வுக்கும் நெருங்கிய சம்பந்த மிருக்கிறது.

பொருள் நுகர்வு மக்களின் வாழ்க்கை நிலையைப் பொருத்திருக்கிறது. வாழ்க்கை நிலை ஒரே மாதிரியாக இல்லாமல் மக்களுக்குமக்கள் வித்தியாசப்படுகிறது. மேனாடுகளில் ஜீவனத்திற்கு வேண்டிய மூலாதாரங்கள் சம்பந்தப்பட்ட விஷயத்தில் வகுப்புக்குவகுப்பு அதிக வித்தியாசமில்லை. ஆனால் இதர பொருள் நுகர்வில் வகுப்புக்கு வகுப்பு அதிக வித்தியாசமிருக்கிறது. இந்தியாவில் ஜீவனத்திற்குரிய மூலாதாரங்களில் கூட, வகுப்புக்கு வகுப்பு வித்தியாசமிருக்கிறது.

வாழ்க்கை நிலையானது அளவில் மட்டு மல்ல, தரத்திலும் வித்தியாசப்படுகின்றது. சில பொருள்களை நுகர்தல் சரீர சுகத்தைக் கொடுக்கலாம். ஆனால், ஒழுக்க வாழ்விற்கு அவை கெடுதியானதா யிருக்கலாம். பொருளாதார நூலில் வாழ்க்கை நிலை சம்பந்தமாக சரீர சுகத்திற்கு வேண்டிய பொருள்களை மட்டும் கவனித்தல் சரியன்று. உண்மையான வாழ்க்கை நிலை யானது சுகஜீவியம் தவிர மக்களின் வாழ்க்கையில் உன்னத நிலை அடையக்கூடிய தன்மையிருக்க வேண்டும். மார்ஷல் (Marshall) என்னும் பொருள் நூலாளர் கூறியிருக்கிறபடி வாழ்க்கை நிலையென்றால் முயற்சியும், விருப்புப் பொருள்களும் சரியான வழியில் ஏற்படும் நிலை யென்று கூறலாம். அதாவது மக்களின் வாழ்க்கைநிலை உயர்வு அடையவேண்டுமானால்

அவர்களின் அறிவு, முயற்சி, ஆத்ம சம்மானம் முதலியன அதிகப்படுத்துவதேயாம். இவ்வித குணங்களால் மக்கள் தம் செலவுகளில் அதிகப் பொறுப்பும் நிதானமும் ஏற்படுத்துதல் வேண்டும். தேகசுகத்திற்கும், ஒழுக்க முன்னேற்றத்திற்கும் பிரயோசன மற்றதாய், மக்களின் அவாவை மட்டும் பிரியப் படுத்தும் உணவும், பானமும், நீக்குதல் வேண்டும்.

இவ்விதக் கொள்கைப்படி மிகச்செலவுள்ள வாழ்க்கை நிலை உன்னதமான வாழ்க்கை நிலையென்று சொல்லமுடியாது. ஒரு கூட்டத்தாரின் வாழ்க்கைநிலை தாழ்ந்த நிலையா அல்லது உன்னத நிலையா என்பதைத் தீர்மானிக்க அவ்வாழ்க்கை நிலையானது பொருள் வளர்ச்சியையும், ஒழுக்க முன்னேற்றத் தையும் அதிகப்படுத்துகிறதா வென்று கவனிக்கவேண்டும்.

இந்தியாவில் ஜனங்களின் வாழ்க்கைநிலை மற்ற தேசங் களுடன் ஒப்பிடுங்கால் மிகவும் தாழ்ந்த நிலைமையிலிருக்கிறது. மதக்கொள்கைகளினுலும், சமூக வாழ்வினுலும், பழைய பழக்கங் களினுலும், இந்தியரின் வாழ்க்கை நிலை குறுகியதாயிருக்கிறது. ஆனுல் சமீபகாலங்களில் அனுவசியமான விருப்புப் பொருள் கள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. விருப்புப் பொருள்கள் அதிகரிக்க, ஒரு தேசத்தாரின் முயற்சியும் அதிகப் படுமென்று சிலர் சொல்லுகின்றனர். நாகரீகத்தின் ஆரம்ப காலத்தில் இவ்விதக் கொள்கை சற்றுப்பொருத்தம் என்று சொல்லலாம். நாகரீகம் விருத்தியடைய அனுவசியமான விருப்புப் பொருள்களை நாம் அடைய முயற்சித்தால் அவ்வித முயற்சி நல்லொழுக்க வாழ்வுக்கு ஏதுவானதன்று. நாகரீகத் தின் உண்மையான பரீக்ஷாசாதனம் என்ன வென்ருல் விருப்புப் பொருள்களை அதிகரிப்பதின்றி சுவஸ்த முயற்சிகளை அதிகரிக்கப் பண்ணுவதேயாம்.

நுகரும் பொருள்களை வாழ்க்கைக்கு இன்றியமையாதவை யென்றும், பெரும்போக நுகர்ச்சிப் பொருள்கள் என்றும் பிரிக்கலாம். மறுபடியும் இன்றியமையாத பொருள்களை உயிர் வாழ்வுக்கு இன்றியமையாத பொருள்கள் என்றும், வல்லமை யுள்ள வாழ்வுக்கு வேண்டியவை யென்றும் பிரிக்கலாம்.

இன்னமும் சில பொருள்கள் வழக்கமான இன்றியமையாப் பொருள்களென்றும் வழங்குகின்றன.

இந்தியாவில் பொருள் நுகர்வு சம்பந்தமாக நம்பத்தக்க புள்ளி விவரங்கள் இல்லை. வரிக்குட்பட்ட பொருள்களை எடுத்துக்கொண்டு பார்ப்போமானால், அவற்றின் சராசரி நுகர்வை நாம் எளிதில் தெரிந்து கொள்ளலாம். ஆனால் நாம் இவ்வித விசாரணையினால், சாதாரண ஜனங்களின் பொருளாக்க நிலைமையைத் தெரிந்து கொள்ள முடியாது தெரிந்தெடுத்த கிராமங்களிலும், நகரங்களிலும் ஜனங்களின் பொருளாக்க நிலைமையைப் பற்றிப் பரிசோதனை செய்ய வேண்டியது அவசியம்.

வாழ்க்கைக்கு இன்றியமையாதவைகளைப் பற்றிச் சற்றுக் கவனிப்போம். முதலாவது உணவு இன்றியமையாதது. இந்தியாவில் ஜனங்களின் சராசரி வருமானம் மிகவும் குறைவாகவேயிருக்கிறது. பெரும்பான்மையோர் சரிவர உணவில்லாமலிருக்கின்றனர்.

இந்தியாவிலுள்ளோருக்கு ஐரோப்பா, அமெரிக்கா கண்டங்களிலுள்ளோரைப் போல் அவ்வளவு ஆடைகள் அவசியமன்று. கோடைக் காலங்களில் குறைந்த ஆடைகள் இருந்தால் போதும். ஆனால் குளிர்காலங்களில், முக்கியமாக, வட இந்தியாவில், கம்பளித்துணிகள் அவசியம் வேண்டியிருக்கிறது. பொதுவாக நடுத்தர நிலைமையிலுள்ளவர் ஆடைகளில் தம் தகுதிக்கு மேல் செலவிடுகின்றனர். ஆடை ஆபரணத்திற்காக மற்ற முக்கிய செலவைக்கூடக் குறைக்கின்றனர். இந்தியாவில் பெரும்பான்மையோர் ரம்மியமான வீடுகளில் வசிக்கவில்லை. அனேகர் குடிசைகளிலே வசிக்கின்றனர். உயர்வாழ்க்கு வேண்டிய பொருள்கள் இல்லாமலிருத்தல் தேசத்தின் பொருளாக்க முயற்சிக்கு ஒரு பெரிய தடங்கலாயிருக்கிறது. பொருளுற்பத்தி அதிகப்பட வேண்டுமானால் ஜனங்கள் திறமையுள்ளவர்களாய் இருக்கவேண்டும். சரியான போஷணையில்லாமல் ஜனங்கள் திடனற்றவர்களாயும் இலகுவில் வியாதிக்கும் உட்படுகின்றனர். சரீர சீரழிவு அதிகப்படுதலானது ஒழுங்கு நிலை குறைவதற்கும் ஏதுவாயிருக்கிறது.

வேலையாட்களின் திறனும் படிப்படியாகக் குறைந்து கொண்டே வருகிறது.

ஜீவனத்திற்கு இன்றியமையாத பொருள்களை ஒடுக்குதல் பொருளாக்க முறையில் மிகவும் கெடுதலென்றே சொல்ல வேண்டும். இந்தியாவில் ஜனங்களின் பொருளுற்பத்தி சக்தி அதிகப்படவேண்டுமானுல் அவர்கள் நுகரும் பொருள்கள் அதிகப்பட வேண்டும். திறனளிக்கும் பொருள்களையே அதிகமாக உண்ண வேண்டும். ரம்மியமான உணவைவிட பலத்தை அதிகரிக்கும் உணவே சிலாக்கியமானது. மது பானமும், மயக்கத்தக்க பொருள்களை உண்ணுதலும், பணத்தைப் பரிப்பதுடன் மக்களின் மனத்தையும், தேகத்தையும் கேவலப்படுத்துகிறது. பெரும்போக நுகர்ச்சியானது பணத்தையும், சுகத்தையும், அறிவையும், குறைக்கும் தன்மையுள்ளது. முடிவாக ஜீவனத்திற்கு உணவும், ஆடையும், இருப்பிடமும் இன்றியமையாதவை. ஆனுல் உயர்தர ஜீவனத்திற்குக் கல்வியும், விடுதி நேரமும், இளைப்பாறுதலுக்குரிய சாதனங்களும் வேண்டும். இவைகள் எல்லாவற்றிற்கும் வருமானம் அதிகமாயிருத்தல் அவசியம்.

மக்களின் விருப்புப் பொருள்கள்
(Human Wants)

மக்களின் விருப்புப் பொருள்களின் சில அம்சங்கள் கவனிக்கத்தக்கவை ;

(1) மக்களின் விருப்புப் பொருள்கள் அளவிறந்தனவாயிருக்கின்றன. விலங்கினத்தைப் போலன்றி, மக்களுக்கு நானுவித தேவைகள் இருக்கின்றன. மக்களின் பலவிதத் தேவைகளினுல் நாகரீகமும், முன்னேற்றமும் வளர்ந்து கொண்டே வருகிறது. காட்டுத்தனத்திலிருந்து இக்கால நாகரீகம் அடைந்திருப்பதற்கு முக்கிய காரணம் மக்களின் விருப்புப் பொருள்கள் அதிகரித்து வருவதேயாம். மானிட வாழ்க்கையில் விருப்புப் பொருள்களைக் கூடிய வரையில் குறைத்து வாழ்வதே ஒழுங்கான நிலைமை யென்று சிலர் கூறுகின்றனர். மகாத்மாகாந்தியும் இக்கொள்கையைக் கடைப்பிடித்து

வந்தனர். இந்தியாவிலுள்ள எளிய ஜனங்களுக்கு இக் கொள்கை சில விஷயங்களில் பிரயோஜனமுள்ளதாகச் சொல்லலாம். ஆனல் தற்கால நாகரீகம் அதிகரித்துக்கொண்டு வருவதால் உணவிலும், உடையிலும் நானுவித தேவைகள் அதிகரித்துக் கொண்டே வருகின்றன. மேனுடுகளில் இவ்வித மாய்ப் பலவித தேவைகள் ஏற்படுவதே நாகரீகத்திற்கு ஒரு பரீக்ஷா சாதனமாகக் கருதப்படுகிறது.

(2) மக்களின் விருப்புப் பொருள்களில், ஒவ்வொரு விருப்புப்பொருளும் ஒரு திட்டத்திற்கு மேல் திருப்தியாகி விடுகிறது. ஏதாவது ஒரு பொருள் எடுத்துக் கொள்வோ மாகில் அப்பொருள் அதிகப்பட அதனல் உண்டாகும் திருப்தி குறைவாகவே இருக்கிறது. உதாரணமாக, தாகத்தினல் வருந்துவோனுக்கு தண்ணீரைக் கொஞ்சம் சாப்பிட்ட பிறகு தண்ணீரின்பேருள்ள அவா குறைகிறது. இவ்விதத் தன்மையி லிருந்து குறை பயன் (Diminishing Utility) என்னும் விதியை நாம் ஏற்படுத்தலாம்.

(3) மக்களின் விருப்புப்பொருள்கள் போட்டித்தன்மை யுடையன. மக்களின் நானுவிதத்தேவைகள் ஒன்றுக் கொன்று போட்டி போடுகின்றன. ஒரு பையனுக்கு ஒரு அணுக் காசு கிடைக்குமாகில் அதற்குப் பண்டம் வாங்கவா அல்லது படங்கள் போய்ப் பார்க்கவா என்று பலவித தேவைகளினல் பாதிக்கப்படுகிருன்.

(4) மக்களின் விருப்புப் பொருள்கள் ஒன்றுக்கொன்று நிரப்பும் தன்மையுள்ளன. உதாரணமாக பெட்ரோல் எண்ணெ இல்லாமல் மோட்டார் வண்டி பிரயோஜனமில்லை. வண்டியும் குதிரையும், தாளும் பென்சிலும், இவைகளெல்லாம் ஒன்றுக்கொன்று நிரப்புந்தன்மை யுள்ளன.

பொருளியல் தேவை (Demand)

எல்லா மக்களும் இச்சிக்கும் பொருள்களெல்லாம் பொருளியல் தேவையாகச் சொல்லமுடியாது. பொருளியல் தேவை யென்பது இச்சிக்கும் பொருளைப் பொருளாக்கும்

திறமையால் அடைவதேயாம். எல்லாப் பொருள்களையும் மக்கள் இச்சிப்பதில்லை. பயனுள்ள பொருள்களையே மக்கள் விரும்புகின்றனர்.

பொதுவாக மக்களின் தேவைகள் ஒரு தொகுதியாகவே யிருக்கின்றன. உதாரணமாக, உணவு, உடை, இருப்பிடம் முதலியவற்றை எடுத்துக் கூறலாம். ஒரு மாணாக்கனின் தேவையாவன :—புஸ்தகங்கள் விளையாட்டுச் சாமான்கள், சமாசாரப் பத்திரிகை முதலியவாம்.

குறை பயன் விதி (Law of Diminishing Utility)

மக்களின் ஒவ்வொரு தனித்த விருப்புப்பொருளும் திருப்தி யடையும் தன்மையுடையது. ஒவ்வொரு தனித்த விருப்புப் பொருளும் வரையறுக்கத்தக்கது. பொதுவாக மற்ற விஷயங்கள் சரியானபடி இருக்கும்பட்சத்தில் மனிதனுக்கு ஒவ்வொரு விருப்புப் பொருளும் அதிகப்பட அப்பொருளின்பேரிலுள்ள இச்சை குறைகிறது. இவ்விதியைப் பின் வருமாறு விளக்கிக் காட்டலாம்.

மொத்தப் பொருள் (Total Quantity)	முதல் பவுண்டின் பயன் (Utility of the 1st pound)	கடைநிலைப் பயன் (Marginal Utility)	மொத்தப் பயன் (Total Utility)
1 பவுண்டுப் புகையிலை	100	100	100
2 பவுண்டுப புகையிலை	100 + 80 (இரண்டாவது பவுண்டின் பயன்)	80	180
3 பவுண்டுப் புகையிலை	100 + 80 + 60 (மூன்ருவது பவுண்டின் பயன்)	60	240
4 பவுண்டுப் புகையிலை	100 + 80 + 60 + 40 (4-வது பவுண்டின் பயன்)	40	280

மேற் கண்ட திருஷ்டாந்தத்திலிருந்து நாம் கவனிக்கக் கூடிய விஷயங்களாவன :—

(1) ஒரு மனிதனின் மொத்தக் கொள்விலை 1 பவுண்டு புகையிலையாயிருக்கும்போது, 1 பவுண்டு அவனுடைய கடைசிப் பாகத்தின் கொள்விலை (Marginal purchase). ஒரு மனிதனின்

கொள்விலை 2 பவுண்டாயிருக்கும் பொழுது இரண்டாவது பவுண்டு அவனுடைய கடைசிப் பாகக் கொள்விலை. ஒரு மனிதனின் கொள்விலை 3 பவுண்டாக இருக்கும்பொழுது மூன்ருவது பவுண்டு அவனுடைய கடைசிப் பாகக் கொள்விலை. கடைசிப் பாகத்தின் கொள்விலையின் பயனை கடைசிப் பாகப் பயன் அல்லது கடைநிலைப் பயன் (Marginal Utility) என்கிருேம்.

ஒவ்வொரு பொருளையும் நாம் அதிகமாகப் பெறுங்கால் மேலதிகமான பொருளின் கூடிய பயன் குறைவாகவேயிருக்கும். ஒருவனிடம் இருக்கும் பொருள்கள் அதிகப்பட அப் பொருளின் கடைசிப் பாகப்பயன் (Marginal Utility) குறைவு அடைகிறது. ஆனல் மொத்தப் பயனுனது அதிகரித்துக் கொண்டே வருகிறது. இக்காலத்தில் பொருளியல் தேவையை நாம் பணத்தின் சார்பாகவே எடுத்துக் காட்டுகிருேம். அதாவது பொருள்களின் தேவை அவற்றின் விலையைப் பொருத்திருக்கிறது.

தனியாளின் தேவை இடாப்பு
(Demand Schedule of an Individual)

ஒரு மனிதன் பின்வருமாறு புகையிலை வாங்குவதாக நினைப்போம்.

2	பவுண்டு புகையிலை	1 பவுண்டுக்கு	ரூ.	3	வீதம்
4	,,	,,	,,	2	,,
6	,,	,,	,,	1	,,
9	,,	,,	அணு	8	,,

விலை குறைந்தால் வாங்கும் சரக்கு அதிகப்படுகிறது; விலை அதிகப்பட வாங்கும் சரக்குக் குறைகிறது.

ஒரு சந்தையின் இடாப்பு
(Demand Schedule of a Market)

ஒரு சந்தையில் 100 நபர் இருப்பதாக வைத்துக்கொள்வோம். சிலர் அதிகப் பணமுள்ளவர்களாயும், சிலர் அதிகப்

பணமில்லாதவர்களாயும் இருக்கலாம். சிலருக்குப் புகையிலே யில் பிரியம் அதிகமாகவும், சிலருக்குக் குறைவாகவும் இருக்க லாம். ஆனால் சராசரித் தேவையானது மேற்கண்ட தனி யாளின் தேவையைப் போலிருப்பதாக வைத்துக்கொள்வோம். பிறகு அச்சந்தையின் இடாப்பைக் கீழ்க் கண்டபடி எடுத்துக் காட்டலாம்.

200	பவுண்டு	புகையிலே	1	பவுண்டுக்கு	ரூ.	3	வீதம்
400		,,		,,	,,	2	,,
600		,,		,,	,,	1	,,
900		,,		,,	அணா	8	,,

நாம் மேற்கூறிய விஷயங்களிலிருந்து தேவையின் ஒரு விதியை ஏற்படுத்தலாம். அதாவது பொருள்களின் விலே குறைய பொருளியல் தேவை அதிகப்படும் ; பொருளின் விலே ஏற்றமடைய பொருளியல் தேவை குறையும்.

தேவை நெகிழ்ச்சி
(Elasticity of Demand)

விருப்புப் பொருளின் நெகிழ்ச்சியானது விலேக்குத்தக்கபடி வேறுபடுகிறது. விருப்புப் பொருள்களின் நெகிழ்ச்சி எல்லாப் பொருள்களுக்கும் ஒரே மாதிரியாயில்லாமல் பலவிதப் பொருள் களுக்குப் பலவிதமாயிருக்கிறது.

(1) பெரும் போக நுகர்ச்சி (Luxuries) :—உயர்தரப் பழங்கள், ஆடைகள், ஆபரணங்கள் முதலியன விலே இறங் குங்கால் இப்பொருள்களுக்குப் பணமுடையவர்களின் தேவை அதிகப்படும் ; எளியவர்களுக்கு ஒருவித வேறுபாடும் ஏற்படு வதில்லே.

(2) இன்றியமையாதவை (Necessaries) :—உப்பு, சர்க் கரை முதலியன இன்றியமையாதவை. இவைகளின் விலே வேறுபடுவதால் இப்பொருள்களின் தேவை அதிக நெகிழ்ச்சி யடைவதில்லே.

(3) பழக்கம் :—ஒரு பொருளைப் பலநாளாக உபயோகித்து வந்தால் அப்பொருளின் தேவை விலை வேறுபடுவதால் அதிக நெகிழ்ச்சி அடைவதில்லை.

(4) நானுவித உபயோகங்கள். (Variety of uses) :—ஒரு பொருளைப் பலவிதமாக உபயோகப்படுத்தினால் அவைகளின் தேவை அதிக நெகிழ்ச்சி யடைகின்றன. உதாரணமாக இரும்பை வீடு கட்டவும் இருப்புப்பாதை போடவும், பலவித இரும்புச் சாமான்கள் செய்யவும் உபயோகப்படுத்துகிறோம்.

(5) பிரதிப் பொருள்கள். (Substitutes) :—இப்பேர்ப்பட்ட பொருள்களின் தேவை அதிக நெகிழ்ச்சி அடைகின்றன. ஆவி விளக்கு அதிகச் செலவுள்ளதாயிருந்தால், அதற்குப் பதிலாக மின்சார விளக்கை உபயோகிக்கலாம்.

தேவை நெகிழ்ச்சி என்னும் கருத்து அப்பியாசத்திற்குரிய வழிகளில் உபயோகமாயிருக்கிறது. உதாரணமாக நிதி மந்திரி வரிகள் விதிக்கும் முறையில் பண்டங்களின் நெகிழ்ச்சித் தன்மையைக் கவனித்து வரி விதிக்கவேண்டும். இல்லாவிடில் மதிப்புக்குத் தக்கபடி வருமானம் கிடைப்பதில்லை.

எஞ்சலின் விதி
(Engel's Law)

பொருள் நுகர்வு சம்பந்தமாக மேனாடுகளில் பல ஆராய்ச்சிகள் பண்ணப்பட்டு வருகின்றன. எஞ்சல் என்பவர் சாக்ஸ்னி என்னும் மாகாணத்தில் சில குடும்பங்களின் வரவு, சிலவுத் திட்டத்தை ஆராய்ச்சி செய்து சில பொது விஷயங்களைக் கூறியிருக்கின்றனர். அவர் வெளியிட்டிருக்கும் விஷயங்கள் சாக்ஸ்னி (Saxony) என்னும் மாகாணத்தின் ஜனங்கள் சம்பந்தமாக ஆராய்ச்சிப் பண்ணப்பட்ட போதிலும் அவ் விஷயங்கள் எல்லாத் தேசத்தாராலும் கவனிக்கத்தக்கவை. எஞ்சலின் ஆராய்ச்சியைக் கீழ்கண்டபடி விளக்கலாம்.

	கூலி வேலைக்காரர் குடும்பம் (Labourer's family)		நடுத்தரக் குடும்பம் (Middle class family)		செழிப்பான குடும்பம் (Well-to-do family)	
உணவு	62	95%	55	90%	50	85%
வஸ்திரம்	16		18		18	
வாடகை	12		12		12	
விளக்குச் செலவு	5		5		5	
படிப்பு	2		3·5		5·5	
வரி	1		2		3	
தேகசுகம்	1		2		3	
இதரச்செலவு	1		2·5		3·5	
	100		100		100	

மேற்கண்ட சூசிகையிலிருந்து எஞ்சல்ஸ் சில சித்தாந்தங்களை நிதானித்திருக்கின்றனர்.

(1) குறைந்த வருமானங்களில், உணவுச் செலவின் நூற்று வீதம் அதிகமாயிருக்கிறது.

(2) உடைச் செலவின் நூற்று வீதம் எல்லாத் தரத்திலுள்ளவர்களுக்கும் அனேகமாக ஒன்றுபோலிருக்கிறது.

(3) வீட்டு வாடகை, விளக்குச் செலவு முதலியன எல்லாத் தரத்திலுள்ளவர்களுக்கும் அனேகமாக ஒன்றுபோலிருக்கிறது.

(4) வருமானம் அதிகப்பட, படிப்பு, தேக சௌக்கியம் முதலிய செலவின் நூற்று வீதம் அதிகமாயிருக்கிறது. சந்தேகமின்றி ஒவ்வொரு வகுப்பினரின் செலவு எல்லாத் தேசத்திலும் ஒன்றுபோலிருக்க முடியாது. பெல்ஜியத்தில ஒரு கூலி வேலைக்காரனின் குடும்பச் செலவில் 60% உணவிற்கும், 15% உடைக்கும், 10% வாடகைக்கும் செலவு ஏற்படுவதாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. அமெரிக்கா ஐக்கிய நாடுகளில் உணவுச் செலவு 43·4% ஆகவும், உடைச்செலவு 10·6% ஆகவும், வாடகைச் செலவு 9·4% ஆகவும் கணக்கிடப்பட்டிருக்கிறது. இந்தியாவில் கூலிவேலைக்காரர் குடும்பத்தில் மேற்கூறிய தேசங்களைவிட உணவுச் செலவு அதிகமாயும், உடை, படிப்பு,

முதலிய செலவுகள் குறைவாயுமிருக்கின்றன. இவ்வித வேறுபாடுகளிலிருந்த போதிலும், எஞ்சலின் சித்தாந்தங்கள் எல்லாத் தேசங்களுக்கும் பொருத்தமாயிருக்கின்றன. அதாவது :

(1) குறைவான வருமானமுள்ளவர்கள் பெரும்பாலும் உணவு, உடை முதலியவற்றிற்கு அதிகமாகச் செலவு செய்யும்படியிருக்கிறது.

(2) அதிக வருமானமுள்ளவர்களுக்கு உணவு, உடை முதலியனவற்றின் செலவு குறைவாகவும், இதரச் செலவு அதிகமாயுமிருக்கிறது.

இந்தியாவில் கூலிவேலைக்காரர்களின் வாழ்க்கைநிலை சம்பந்தமாக சில ஆராய்ச்சிகள் செய்யப்பட்டிருக்கின்றன. அப்பேர்ப்பட்ட ஆராய்ச்சிகளின் சில புள்ளி விவரங்களைக் கீழ்க்கண்டபடி குறிப்பிடலாம்.

செலவின் விபாகம் (நூற்று விகம்)

இனம்	பம்பாய் 1932-33	ஆமதாபாத் 1933-35	சோலாப்பூர் 1925	நாகப்பூர் 1928	மதராஸ் 1938
உணவு	46·60	49·31	49·25	64·10	52·63
விளக்கு, விறகு, செலவு	7·11	6·65	9·60	·9·62	6·67
உடை	7·75	9·12	11.86	10·70	4·50
வீட்டு வாடகை	12·81	10·97	6·27	1·92	11·14
இதரச்செலவு	25·73	23·95	23·02	13·66	25·06

வாழ்க்கை நிலையானது ஒவ்வொரு குடும்பத்திலுள்ள நபர்களையும், வருமானத்தையும் பொருத்திருக்கிறது. இது விஷயமாய்க் கீழ்க்கண்ட புள்ளி விவரங்கள் கவனிக்கத்தக்கவை.

	பம்பாய்			ஆமதாபாத்			சோலாப்பூர்			நாகப்பூர்		
சராசரி ஒரு குடும்பத்திலுள்ள நபர்களும்,	3·70			4·05			4·57			6·03		
	ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை.	ரூ.	அ.	பை.
சராசரி மாத வருமானமும்.	50	1	7	46	5	0	39	14	10	37	5	11

முதலாவது சூசிகைப்படி இதரச் செலவானது மற்றச் செலவுடன் ஒத்துப்பார்க்குமிடத்து சிறிது கூடுதலாயிருக்கிறது.

இதரச்செலவு என்னும் தொகுதியில் கடனுக்குக் கொடுபடும் வட்டியும் முதலும் சேர்க்கப்பட்டிருக்கின்றன.

கூட்டுத் தேவை (Joint Demand)

சில பொருள்கள் ஒன்று சேர்ந்து உபயோகப்படுகின்றன. ஆகையால் அவற்றுள் ஒன்றில்லாமல் மற்றொன்று அதிக பிரயோஜனமில்லை. ஒன்றோடொன்றுகூட உபயோகப்படும் பொருள்களின் தேவையானது கூட்டுத் தேவையென்று சொல்லலாம். உதாரணமாக கோதுமைக்குத் தேவை ஏற்பட்டால் அதை விளைவிப்பதற்குரிய நிலமும், விதையும், உழைப்பும், போக்குவரவுச் சாதனங்களும் வேண்டியிருக்கின்றன.



இவ்விதமாக அனேக பொருளுற்பத்தி சாதனங்களுக்கு ஏற்படும் தேவையானது கூட்டுத் தேவையாகவே இருக்கிறது.

சினைத் தேவை (Composite Demand)

ஒரு பொருளானது பலவிதமாக உபயோகப்பட்டு வருகிறது. அவ்வித உபயோகங்களில் சேர்வையான தேவையை சினைத் தேவை என்று கூறலாம்.

உதாரணமாக உருக்கு இரும்பானது இருப்புப் பாதைக்கும், வெட்டுக் கருவிக்கும், பாலங்கட்டவும், வீடு கட்டவும் உபயோகப்படுகிறது.



அத்தியாயம் 3

பொருளுற்பத்தி

(Production)

பொருளுற்பத்தி என்பது பொருள்களின் உபயோகத்தை அதிகரிக்கச் செய்தலேயாம். உதாரணமாக ஒரு மரக்கட்டையைத் தச்சு வேலையால் மேஜை, நாற்காலி முதலிய சாமான்களாகச் செய்ய முடியும். மரக்கட்டையாயிருப்பதன் பயனைவிட மேஜை நாற்காலி முதலிய சாமான்களாக மாறினவுடன் அவை அதிக உபயோகமடைகின்றன. ஆகையால் இப்பேர்ப்பட்ட உற்பத்திச் சக்தி பொருளுற்பத்தி என்று சொல்லப்படுகிறது.

பொருளுற்பத்தி பலவிதமாயிருக்காலம் :—(i) சில பொருள்களின் உருவத்தை மாற்றுதலினால் உண்டாகும் பயன். உதாரணமாக ஒரு மரக்கட்டையை மேஜை நாற்காலி முதலிய சாமான்களாகச் செய்யலாம். பஞ்சை நூலாக நூற்று பிறகு துணியாக நெய்யலாம். இத்தகையான செயல்கள் உருவம் மாறுதலால் அதிகப் பயனடைகின்றன.

(ii) காலத்தினால் பொருள்களுக்கு பயன் அதிகரிக்கச் செய்யலாம். பஞ்சை நூலாக நூற்றுப் பிறகு துணியாக நெய்யலாம். இத்தன்மையான செயல்கள் உருவம் மாறுதலால் அதிகப் பயனடைகின்றன. காலத்தினால் பொருள்களுக்குப் பயன் அதிகரிக்கச் செய்யலாம். உதாரணமாகப் பழங்கள், மீன் முதலிய உணவுப் பொருள்களைக் கெடுதல் அடையாமல் பாதுகாத்து வைத்தலால் அவை அதிகப் பயனடைகின்றன.

(iii) இடம் மாறுதலினால் பொருள்களின் பயனை அதிகரிக்கலாம். நிலத்தை உழுது தானியங்களை உண்டாக்குதலும், கடலிலிருந்து மீன் முதலிய விசேஷமான பொருள்களை எடுப்பதும் பூமியிலிருந்து தாதுப் பொருள்களை வெட்டி

எடுத்தலும், விளைவு பொருள்களை விற்பனையாகும் இடங்களுக்கு எடுத்துச் செல்லலும் பொருளுற்பத்திச் செயல்களேயாம்.

பொருளுற்பத்திச் சாதனங்கள். (Agents of Production) பொருளுற்பத்திக்குள்ள சாதனங்கள் பொருளாதார நூலில் நான்காக வகுக்கப்பட்டிருக்கின்றன :—நிலம், உழைப்பு, மூலதனம், தொழில்முயற்சி.

நிலமும் பொருளுற்பத்தியும் :—பொருளுற்பத்திக்கு நிலம் இன்றியமையாதது. நிலம் என்றால் பூமியின் மேற்பரப்பை மூடியிருக்கும் தரைமட்டுமல்ல. நிலம் செழிப்படைவதற்கு வேண்டிய உஷ்ணம், மழை, காற்று, முதலியவைகளுக்கும் நிலத்திற்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு. விவசாயநிலம், புல் பிரதேசம், கட்டிடங்களுக்குரிய நிலம், காட்டு நிலம், ஜல சக்தி, காற்றுச் சக்தி இவைகளெல்லாம் பொருளுற்பத்திக்குச் சாதனமாகிய நிலத்தில் அடங்கியனவாகக் கருதப்படுகிறது. விவசாய நிலம் சம்பந்தப்பட்ட விஷயத்தில் அது இயற்கையிலேயே செழிப்புள்ளதாய் இருக்கவேண்டும். மண்ணின் இயல்பே நிலத்தின் செழிப்புத் தன்மைக்கு ஒரு முக்கிய காரணம். மண்ணில் கல், மணல், களிமண், ஆம்பி முதலிய பொருள்கள் கலந்துள்ளன. இப் பொருள்களின் கலவை விகிதத்திற்கேற்ப மண்ணின் இயல்பும் வித்தியாசப்படும். பூமியின் மேற்றரை இடத்துக் கேற்றவாறு, அமைப்பிலும், ஆழத்திலும் வேறுபட்டுளது. மேற்றரை சில இடங்களில் வெண்ணிறமாகவும், சில இடங்களில் செந்நிறமாகவும் சில இடங்களில் கருநிறமாகவும் இருக்கும். மணலுள்ள தரை வெண்ணிறமாகவும், இரும்புள்ள தரை செந்நிறமாகவும், தாவர வஸ்துக்கள் சேர்ந்த தரை கருநிறமாகவும் இருக்கும். மேற்றரைக்கு கீழேயுள்ள கீழ்த் தரை உஷ்ணம், மழை, காற்று என்பவற்றால் நேரே தாக்கப்படாமையால், மேற்றரையிலும் பார்க்கக் கெட்டியாகவும், ஈரலிப்புள்ளதாகவுமிருக்கும். அதில் தாவர வஸ்துக்களில்லை.

நிலத்திற் காணப்படும் எவ்வகையான மண்ணும் கற்பாறையின் சிதைவெனக் கருதப்படுகிறது. கற்பாறையி

லிருந்து மண்ணுக மாறும் மாற்றம் காற்று, நீர், உஷ்ணம் குளிர் முதலிய இயற்கைச் சக்திகளினுல் ஏற்படுகின்றது. இவைகளைச் கற்பாறை தாக்கி அரிப்பதனுல் அது சிறு சிறு அணுக்களாகத் தகர்கின்றது. இவ்வணுக்களே மண்ணுகும். இப்படியாக உண்டாக்கப்பட்ட மண்ணிற் சில பகுதி உற்பத்தி யான இடத்திலேயே தங்குகின்றது. அது நாளடைவில் பல பொருள்களுடன் கலக்கின்றது.

மண்ணிற் சில பகுதி காற்றினுலும், வெள்ளத்தினுலும், ஆறுகளினுலும் உற்பத்தியான இடத்திலிருந்து வேறு இடங் களுக்குக் கொண்டு செல்லப்படுகின்றது. இத்தகைய மண் அதிகமாக மலையடிவாரங்களிலும், கடற்கரைகளிலும், நதி முகத்துவாரங்களிலும் காணப்படும், தண்ணீர் ஓடும்போது களிமண், மணல், சிறு கற்கள் முதலியவற்றையும் கொண்டு செல்லும் நீரோட்டம் குறைந்ததும் அவைகள் அடிப்படையில் விடப்படுகின்றன. முதலாவதாகக் கற்களும், பின் மணலும், அதன்பின் மண்ணும் விடப்படும், இதனுல்தான் நதி முகத் துவாரத்தில் மண் அதிகமாகக் காணப்படுகிறது. நதி முகத் துவாரத்தில் விடப்பட்ட மண் மிகவும் செழிப்பானது.

நாம் உபயோகித்து வரும் பூமியின் மண் கற்களின் சிதைவேயாகும். கல்லானது பற்பல சாதனங்களினுல் மண்ணுக மாறுகின்றது. காற்று, நீர், உஷ்ணநிலை, ஜீவஜெந்துக்கள் இவைகளால் தாக்கப்படுகின்றது. கற்பாறைகளும் காற்றினுல் தாக்கப்பட்டுப் படிப்படியாகத் தேய்ந்து மண்ணுக மாறு கின்றன. உஷ்ணநிலை எப்பொழுதும் மாறுபட்டுக்கொண்டே இருக்கிறது. இதனுல் கற்பாறைகள் வெடித்து மண்ணுக மாறுகின்றன. கற்பாறைகளில் பல தாது வஸ்துக்கள் கலந் துள்ளன. ஒவ்வொரு வஸ்துவும் சூட்டினுலும் குளிரினுலும் விரிந்து சுருங்கும் தன்மையுள்ளது. இப்படியாகத் தாது வஸ்துக்கள் விரிந்து சுருங்குவதால் கற்பாறைகள் சிறு சிறு துண்டுகளாக வெடிக்கின்றன. இத் துண்டுகள் நாளடைவில் அரிபட்டு மண்ணுக மாறும்.

நமது கண்ணுக்கு புலப்படாத லட்சக்கணக்கான ஜீவ அணுக்கள் மண்ணிலிருக்கின்றன. சில தரைகளிலுள்ள

ஜீவ அணுக்கள் பயிர்களுக்கு உபயோக முள்ளன. சில தீங்குள்ளன. பண்படுத்தப்படாத தரைகளில் தீங்குள்ள ஜீவ அணுக்களுண்டு. இவற்றைத் திறமையாக கிருஷிக முயற்சி யால் இல்லாது செய்து விடலாம். உபயோகமான அணுக்கள் செழிப்பான தரைகளிலுண்டு. இவை ஆகாயத்திலுள்ள உப்பு வாயுவைப் பிரித்தெடுத்துப் பிராண வாயுவுடன் கலக்கச் செய்து பயிர்களுக்கு உதவுகின்றன. நெற் பயிர்களின் வேற் களில் மணி போன்ற சிறு முடிச்சுக்களிருப்பதை நாம் பார்க்க லாம். இவை ஜீவ அணுக்களால் ஆக்கப்பட்டவை.

தாவரங்கள் தரையிலிருந்து தம் உணவாகிய பசளேயை இடைவிடாது பெற்றுக் கொள்கின்றன. இதனுற்ருன் மேற்ற ரைப் பயிர்கள் செழித்து வளர்ந்து பசளேயினளவுக்குத் தக்க தாகப் பலனேத் தருகின்றன. ஆனுல் பசளேயுள்ள மேற்றரை மண் ஓரிடத்தில் அல்லது ஓர் பயிர்த்தாளில் நிலேயாயிராது. மழை நீருடன் போய் நதிகளிலும் குளங்களிலும் அடை கின்றது. இப்படி மண் நீரினுல் அறிக்கப்படுதல் பயிர் வர்க்கங் களுக்குக் கெடுதியானதாகும். மண்ணரிப்பைத் தடுப்பதற்குக் கிருஷிகப் பகுதியார் பலவகையான முறைகளே ஆராய்ச்சி செய்து வருகின்றனர்.

பொருளுற்பத்திக்கு நிலத்தை நன்ருகப் பண்படுத்தல் வேண்டும். தரையைப் பண்படுத்திப் பயிர் செய்யாவிடின் அது வயிரித்துக் கடினமாகிவிடும். ஆகையினுல் தரையைப் பல முறைகளிலும் பண்படுத்திப் பவனம், நீர், வெளிச்சம் முதலியன புகச் செய்தல் வேண்டும்.

ஒரே தரையில் வருஷா வருஷ மாற்றுப் பயிரிடலேக் கைக் கொண்டு பயிர் செய்து வந்தாலும், அத்தரையிலுள்ள சில மூலப்பொருள்களற்று, தரையின் செழிப்புக் குறைவடையும். ஆதலால் அத் தரையில் வளரும் பயிர்கள் நற்பலனேக் கொடுப் பதற்குத் தரையின் செழிப்பு அதிகரிக்கச் செய்யவேண்டும். தரையின் செழிப்பைப் பசளேகள் மூலம் அதிகரிக்கச் செய்ய லாம்.

இலைப் பசளை தரைக்கு மிகவும் விசேஷமானது. இது நிலத்தின் கசிவைக்கூட்டுகின்றது. ஒரு கிடங்கில் இலைகள், வைக்கோல், உமி, சாம்பல், எரு முதலியவற்றைக் குவித்துக் காற்றும் வெயிலும் படாதபடி காப்பாற்றி இடையிடையே நீர் ஊற்றி ஈரலிப்பாக்கி பசளையாக உபயோகிக்கலாம். மாடு, ஆடு, கோழி முதலியவற்றின் எரு சிறந்த எருவாகும். இந்தியாவில் மாட்டெருவைப் பயிருக்கு உபயோகப்படுத்தாமல் அநேகர் அடுப்பு எறிக்க உபயோகப்படுத்துகின்றனர். மாட்டெருவை ஒருபொழுதும் கலகலப்பாய்க் குவித்து வைத்தல் கூடாது. சத்துள்ள எருவும் பக்குவக் கேட்டினுல் குறையும். ஆதலின் எருவைப் பக்குவப் படுத்தல்வேண்டும்.

வியாபாரிகளிடத்தில் விலைக்கு வாங்கும் பசளைகள் அநேகமிருக்கின்றன. உப்புவாயுவுள்ள பலவகை உப்புக்கள், பிரகாசித அமில உப்புக்கள் (Phosphatic Manures) சாம்பற் காற உப்புக்கள், எலும்புத்தூள், பிண்ணுக்கு, சுண்ணும்பு முதலியன வியாபார பசளைகளெனப்படும். உப்பு வாயு பயிர்களின் வளர்ச்சியை அதிகரிக்கச் செய்கின்றது. சாடதலவண அமில உப்பு (Sodium Nitrate) கெந்தக நவச்சார உப்பு, (Sulphate of Ammonia), சுண்ணதலவணசார அமில உப்பு (Calcium Cyanamide) முதலிய உப்புக்கள் மிகவும் விசேஷமான பசளைகளாகும். சாடதலவண அமில உப்பு தென் அமெரிக்காவிலுள்ள சில்லி, தேசத்தில் தரையில் அடைபொருளாக ஏராளமாய்க் காணப்படுகிறது. இதில் உப்பு வாயு 15% உண்டு. இப்பசளை நீரில் அதிக விரைவாகக் கரையுந் தன்மையுள்ளது. இது வறண்ட நிலங்களிலுள்ள மணற்றரைக்கு அதிக வாய்ப்பானது. கீரை, புகையிலைக் கன்று போன்ற இலை உதவும் பயிர்களுக்கு விசேஷமான பசளையாகும்.

கெந்தக நவச்சார உப்பு பயிர்களுக்கு நேரே உபயோகப்படுவதில்லை. உபயோகமாவதற்கு முன் தரையின் மேற்பகுதியில் பல மாற்றங்களடைகிறது. ஆகையினுல் இப்பசளை ஆழத்திற்குச் செல்லாத வேர்களையுடைய பயிர்களுக்கே ஏற்றது.

சுண்ணுதலவணசார அமில உப்பு தென்னை முதலிய விருக்ஷங் களுக்கு விசேஷமானதாகக் காணப்படுகின்றது. எலும்புப் பாளையை உபயோகிக்கும்போது நன்ருக மாவாக்கப்பட வேண்டும். சாம்பற் கார உப்புகள் நெல் முதலிய பயிர்களுக்கு மிகவும் விசேஷமானவை. மணற்றரைகளில் இவ்வுப்புக் களிருப்பதால் உப்பு வாயு அதிகரிக்கின்றது. சாம்பற் கார உப்புள்ள பசளைகளிற் கயினிற் (Kainite), மியூறையிற் சாம்பற்கார உப்பு (Muriate of Potash), கெந்தக சாம்பற்கார உப்பு (Sulphate of Potash) என்பன விசேஷமானவை.

பருவக்காற்றும் இந்தியாவின் விவசாயச் செழிப்பும்

(Indian Agriculture and the Monsoons)

இந்தியாவின் விவசாயம் பருவக்காற்றினுல் உண்டாகும் மழையைப் பொருத்திருக்கிறது. கோடை காலத்தில் அரபிக் கடலிலிருந்தும், வங்காளக்குடாக் கடலிலிருந்தும், தென்மேற்கு பருவக்காற்று இந்தியாவையும், பர்மாவையும் நோக்கி அடிக் கிறது. இக்காற்று கடலில் உண்டாகும் ஏராளமான நீராவியை கிரகித்துக்கொண்டு வருகிறது. அரபிக் கடலிலிருந்து இந்தியாவை நோக்கி அடிக்கும் இக்காற்று மேற்குத் தொடர்ச்சி மலையால் தடுக்கப்பட்டு உயரச் செல்லுகிறது. அங்குள்ள உயரத்தில் குளிர்ச்சி அதிகம். ஆதலால் இக்காற்றில் உள்ள நீராவி ஜலமாக மாறி மழையாகப் பெய்கிறது. அதனுல் இந்தியாவின் மேற்குக் கடற்கரையிலுள்ள மேற்குத் தொடர்ச்சி மலையின் மேற்குப் பாகத்தில் மழை பெய்கிறது. இது கோடை கால மழையாகும். இம் மாதிரியே பர்மாவில் வங்காளக்குடாக் கடலிலிருந்து அடிக்கும் தென்மேற்குப் பருவக்காற்று பர்மாவின் மேற்குக் கரையிலுள்ள அரக்கான், யோமா, ஷான் முதலிய மலைகளால் தடுக்கப்பட்டு உயரச் சென்று குளிர்ச்சியடைவதால் அதன் மேற்குக் கரையில் அதிக மழை பெய்கிறது.

இந்தியாவில் அக்டோபர் மாதத்தில் குளிர் காலம் ஆரம்பிக்கிறது. இக்காலத்தில் இமயமலைப் பிரதேசங்களி லிருந்து வடகிழக்குப் பருவக்காற்று தென்மேற்குத் திசையை நோக்கி வீசுகிறது. இது இந்தியா முழுவதும் அடிக்கிறது. இது தரைப் பாகத்திலிருந்து அடிக்கும் காற்றானபடியால் நீராவியில்லாது வறண்டிருக்கிறது. இக் காற்றினால் இந்தியா விற்குப் பெரும்பாலும் மழையில்லை. ஆனால் இக் காற்றின் ஒரு பாகம் வங்காளக்குடாக் கடலைத் தாண்டித் தென் இந்தியாவின் கிழக்குக் கடற்கரையை நோக்கி அடிக்கிறது. இது வங்காளக் குடாக் கடலைத் தாண்டி வரும்பொழுது கொஞ்சம் நீராவியை உட்கொள்ளுகிறது. பிறகு இது கிழக்குத் தொடர்ச்சி மலை களால் தடுக்கப்பட்டுக் கோதாவிரி நதியிலிருந்து திருநெல் வேலி ஜில்லா வரையிலுள்ள கடற்கரைச் சமவெளியிலும், இலங்கைத் தீவின் வடக்கு கிழக்கு ஆகிய பாகங்களில் மழையைப் பெய்விக்கிறது.

கவர்ன்மென்டாரின் முக்கிய வருமானம் நிலவரியே ஆகும். நிலவரியானது விவசாயத்தின் செழிப்பைப் பொருத்திருக் கிறது. நிலத்தின் விளைவு பருவக்காற்றைப் பொருத்திருக் கிறது. நில விளைவு குறைந்தால் கவர்ன்மென்டார் வசூலிக்கும் நில வரியும் குறைந்துபோகிறது. நில விளைவு குறைவதால் ஏற்றுமதி குறையும். அரிசி, சணல், தேயிலை முதலிய விவசாயப் பொருள்களின் பேரிலுள்ள ஏற்றுமதிச் சுங்கம் குறைந்துபோகும். ஏற்றுமதி குறைவதால் வெளிதேசங் களிலிருந்து இந்தியாவுக்கு வரும் இறக்குமதியும் குறை யும். இதனால் இறக்குமதி வரிகளால் ஏற்படும் வருமானம் குறைகிறது. தவிரவும் விவசாயத்தினால் செழிப்பில்லாவிடில் விவசாயிகளுக்கு வெளிநாட்டுப் பொருள்களை வாங்கும் திறனும் குறைந்து போகின்றது. மேற்கூறிய விஷயங்களினால் இந்தி யாவின் வியாபாரமும், பொருளுற்பத்தியும் குறைந்து, ஜனங் களின் வருமானமும் குறைந்து விடுகின்றது. இதனால் வருமான வரியினால் கவர்ன்மென்டார் அடையும் வருமானமும் குறைந்துவிடும். வியாபாரமும் பொருளுற்பத்தியும் ஒடுங்கு வதால் ரெயில் வருமானமும் குறைகின்றது. துறைமுக வரி,

வருமானவரி, ரெயில் வருமானம் இவைகள் மூன்றும் இந்திய கவர்ன்மெண்டாரின் மொத்த வருமானத்தில் 75% ஆக கணக்கிடலாம். இவ்வாறு இந்திய கவர்ன்மெண்டாரின் வரவு செலவு மதிப்புத் திட்டம் பருவக்காற்று மழையைப் பொருத்த ஒரு வட்டாட்டம் என்று கூறுவது உண்மையே.

நிலத்தில் மக்கள் நெருங்கி அமைதல் :—

இந்தியாவில் நிலத்தைப் பிழைப்பு வழியாகக்கொண்டு வசிக்கும் ஜனங்கள் அநேகர். பத்து வருஷத்திற்கு ஒரு தரம் ஏற்படும் மக்கட்டொகை அறிக்கை (Census Report) யிலிருந்து நிலத்தினல் வசிக்கும் ஜனங்களின் எண்ணம் கீழே குறித்திருப்பது கவனிக்கத்தக்கது.

1891	62%
1901	68%
1911	72%
1921	72%
1931	73%
1941	
1951	70%

இந்தியாவில் வெகு ஜனங்கள் விவசாயத்தினற் பிழைப்பதற்குக் பல காரணங்களிருக்கின்றன. ஸ்வதேசத்தொழில்கள் இப்காலப் பொறித்தொழில்களின் போட்டியினல் க்ஷீணமடைந்து போயின. ஜனத்தொகையும் நாளடைவில் அதிகரித்துக் கொண்டே வருகின்றது. இந்தியாவிலுள்ள மொத்த நிலத்தில் பயிரிடப்பட்ட நிலத்தின் தகவுப் பொருத்தமும் பயிரிடப்பட்ட ஒரு 100 ஏகராவிலுள்ள ஜனத்தொகையும் பின்வருமாறு கணக்கிடப்பட்டிருக்கிறது.

மாகாணம்	மொத்த நிலத்துக்கும் பயிரிடப்பட்ட நிலத்துக்கும் உள்ள தகவுப் பொருத்தம். (சதவீதம்) Proportion of Cropped to total area (Percent)	பயிரிடப்பட்ட 100 ஏகராவிலுள்ள ஜனத்தொகை (Populataion per 100 acres of cropped-area)
அஸ்ஸாம் (Assam)	18	131
வங்காளம் (Bengal)	47	188
பம்பாய் (Bombay)	55	56
மத்திய மாகாணம் (Madhya Pradesh)	37	59
மதருஸ் (Madras)	38	125
பஞ்சாப் (Punjab)	42	80
உத்ரப் பிரதேசம் (Uttar Pradesh)	42	127

பொருளுற்பத்தி விதிகள்

(Laws of Production)

குறைந்து செல் பயன் முறை (Law of Diminishing Return) ஒரு குடியானவன் ஒரு ஏக்கர் நிலத்தில் கரும்பு பயிரிடுவதாக வைத்துக் கொள்வோம். பயிரிடுவதற்காக ரூ. 10 செலவழிப்பதாக வைத்துக்கொள்வோம். அச் செலவினுல் நிலத்திலிருந்து கொஞ்சம் கரும்பு உண்டாகிறது. மறுதடவை பயிரிடுவதில் ரூ. 20 செலவழித்து நிலத்தை சரியானபடி பயிர் செய்தால் விளைச்சல் முன்னைவிட அதிகமா யிருக்கலாம். செலவு செய்த பணத்தைவிட அதிக பயன் கிடைக்கலாம். அதாவது

வரவர வரும்படி கூடுகிற நிலை ஏற்படலாம். ஆனால் அதே மாதிரியாக இன்னும் செலவு செய்து கொண்டிருந்தால் விளைச்சல் செலவுக்குத் தக்கபடி இருக்குமென்று சொல்ல முடியாது. அதிக பணம் செலவழித்து நிலத்தைப் பயிரிடுவதால் செலவுக்குமேல் விளைச்சலில்லாமல் செலவைவிடக் குறைவாக விளைச்சல் ஏற்படலாம். அப்படி ஏற்படும் சமயத்தில் நிலத்தில் அதிக முயற்சி பண்ணிப் பயிரிடுவது இலாபகரமாயிருக்காது. ஏனெனில் வரவர வரும்படி குறையும் நிலை ஏற்படுகிறது. இதை ஒரு புறநிலை எண்ணால் விளக்கலாம்.

ரூ. 10 பெருமான சிலவு	4 மணங்கு சர்க்கரை
ரூ. 20 பெருமான சிலவு	4+5 ,,
(20=10+10)	(வரும்படி அதிகமாகும் நிலை)
ரூ. 30 பெருமான சிலவு	4+5+2 மணங்கு சர்க்கரை
(30=10+10+10)	(வரும்படி குறையும் நிலை)

ஷை பொருளுற்பத்தி விதியானது ஒவ்வொரு குடியானவனும் அனுபவத்திலிருந்து தெரிந்துகொண்டிருக்கிற விஷயமே. இதை பொருள் நூலாளர் குறைந்து செல் பயன்முறை என்று குறித்திருக்கின்றனர்.

2. விரிந்து செல் பயன்முறை
(Law of Increasing Return)

ஒவ்வொரு தொழிலுக்கும் தொழிலுக்கு தக்கபடி ஒரு பரிமாணம் இருக்கிறது. சாதாரணமாக ஒரு தொழிலின் ஆரம்பத்தில் அதிக முதலும் முயற்சியும் இல்லை என்று வைத்துக் கொள்வோம். தகுந்த முதலும் முயற்சியும் ஏற்பட்டால் அதனால் உண்டாகும் பயன் ஏற்பட்ட செலவைவிட அதிகமாயிருக்கலாம். அநேக கைத்தொழில்களில் இவ்வித முறையை நாம் பார்க்கலாம். அவ்விதமாக 'வர வர வரும்படி அதிகப்படுகிற தொழில்கள் பெருவீதத் தொழில்களாக ஏற்படுகின்றன. தொழில் சம்பந்தமான அறிவினாலும், தொழில் அமைப்பு சீர்திருத்தங்களினாலும் அநேக கைத்தொழில்களில் வரவர வரும்படியை அதிகப்படுத்த முடியும்.

மாருப் பலன் முறை
(Law of constant Return)

ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஒரு தொழிலில் உழைப்பும் முதலும் அதிகமாக பிரயோகப்படுத்துவதால் கிடைக்கும் பலன் அதிகமாகப் பிரயோகப்படுத்தின பரிமாணத்திற்கு தக்கபடி இருக்குமாயின் அவ்வித சம்பவத்தை மாருப்பலன் முறை என்று கூறுகிருேம். உதாரணமாக கம்பள வியாபாரம் அதிகமாக வளர்ச்சி யடையாத ஒரு நாட்டில் கம்பளத்திற்கு தேவை ஏற்பட்டால் கம்பளமானது பெருவீத முறையில் உற்பத்தி பண்ணப்படும். பெருவீத முறையை அனுசரிப்பதால் அத்தொழிலில் மிகுபலன்கள் ஏற்படலாம். ஆனுல், அவ்வித பெருவீத பொருளுற்பத்திக்கு வேண்டிய மூலப் பொருள்களாகிய ஆட்டு ரோமம் முதலியன அதிகமாக வேண்டும். அப்பேர்ப்பட்ட மூலப்பொருள்களே பெருவீத முறையில் உற்பத்தி செய்யத் தொடங்கினுல் கடைசியில் அம்மூலப்பொருள்களே குறை பலன் முறையில்தான் பெறுகிருேம். ஆகையால் கம்பளி வியாபாரம் விரிவு அடைவதால் உண்டாகும் மிகு பலன்கள் அவ்வியாபாரத்திற்கு வேண்டிய மூலப்பொருள்களின் குறைபலனுல் சமநிலேயே இருக்கும்.

பொருளுற்பத்தி சாதனங்களே ஒழுங்குபடுத்தும் ஏற்பாட்டில் (Organisation) அடங்கியவை.



பெருவீதப் பொருளுற்பத்தி
(Large Scale Production)

தொழிற் புரட்சியின் ஆரம்பகாலமுதல் பெருவீத பொருளுற்பத்தி எல்லா தேசங்களிலும் விருத்தியடைந்து கொண்டே வருகிறது. மேனுடுகளில் எல்லாப் பொறித் தொழில்களும் பெருவீத முறையில் நடைபெற்று வருகிறது. இந்தியாவில் சில முக்கியமான தொழில்களாகிய சணல் தொழில் சாலைகளும், இரும்புத் தொழில்சாலைகளும், நூல் நூற்கும் பொறிச்சாலைகளும் பெருவீதமுறையில் அமைக்கப்பட்டிருக்கின்றன. பெருவீத பொருளுற்பத்திக்கு ஏராளமான மூலதனமும், எந்திரங்களும் வேண்டியிருக்கின்றன. சென்ற 150 வருஷங்களாகப் பெருவீதப் பொருளுற்பத்தி அதிக மேன்மை யடைந்திருக்கிறது. வேலைப் பிரிவினையாலும் எந்திரங்களினுலும் பெருவீதப் பொருளுற்பத்தியை சிக்கனமுறையில் நடத்துவது சாத்தியமாயிருக்கிறது. பெருவீதப் பொருளுற்பத்தியை நிர்வகிப்பதற்குச் சரியான விற்பனைப் பிரதேசம் அவசியமாயிருக்கிறது. போக்கு வரவு வசதிகளும் பெருவீதப் பொருளுற்பத்திக்கு அனுகூலமாயிருக்கின்றன. விளைவிப்பவனுக்கும் விற்பவனுக்கும் பெருவீதப் பொருளுற்பத்தி அதிக இலாபத்தை அளிக்கின்றது. பொருள் நுகர்வோருக்கும், வேலையாட்களுக்கும் அதிக பலன் கிடைக்கின்றன, பெருவீதப் பொருளுற்பத்தியில் பொருள்களின் ஆக்கச்சிலவு மிகவும் குறைவாகவே யிருக்க முடியும். ஆகையால் உண்டாக்கும் பொருள்களை குறைந்த விலைக்கு விற்கமுடியும். ஆயிரக்கணக்கான கூலி வேலைக்காரர் பொறிச்சாலைகளில் வேலைசெய்து பிழைக்கின்றனர். பெருவீதத் தொழில் முறையில் ஒரு பொறித் தொழிலுக்கு வேண்டிய மூலப்பொருள்களை வாங்குவதிலும், அப்பொருள்களை செய்பொருள்களாக ஆக்குதலிலும், அவற்றை விற்பதிலும் அநேக அனுகூலங்கள் இருக்கின்றன.

ஆனல் பெருவீதப் பொருளுற்பத்தியானது எல்லையில்லாமல் நடத்தமுடியாது. ஒரு தொழிலை பெருவீதமுறையில் அமைத்தலானது அத்தொழிலை நடத்துபவரின் திறனைப்

பொருத்திருக்கிறது. உண்டாக்கப்படும் பொருள்களுக்கு சரியான விற்பனைப் பிரதேசமில்லாவிடில் பெருவீதப் பொருளுற்பத்தி நடைபெற முடியாது.

இந்தியாவில் அநேக தொழில்கள் சிறுவீத முறையிலே நடைபெற்று வருகின்றன. சில தொழில்களைப் பெருவீத முறையில் அமைப்பது இலகுவான காரியமன்று. உதாரணமாக விவசாயத் தொழிலைப் பொறித்தொழிலைப்போல் அவ்வளவு பெருவீத முறையில் அமைக்கமுடியாது. இன்னும் அநேக கைத்தொழில்களில் பெருவீதப் பொருளுற்பத்தி பயன்படுவதில்லை. இந்தியாவில் அநேக குடிசைத் தொழில்களாகிய கைநெசவு, தங்க வெள்ளி ஆபரணங்கள் செய்தல் முதலியன சிறிய தொழில்களாகவே இருக்கின்றன. இக்காலத்தில் மின்சார சக்தியால் சிறிய கைத்தொழில்களை நாட்டுப்புறங்களில் நவீன முறையில் நடத்துவது மேன்மையானதென்று சிலர் அபிப்பிராயப்படுகின்றனர். இந்தியாவில் தற்காலத்தில் ஏற்பட்டிருக்கும் தொழில் புரட்சியில் கைத் தொழில்களை எம்முறையில் அமைப்பது நலமென்பதைப் பற்றி அதிக அபிப்பிராய பேத மிருக்கிறது. சிலரின் கொள்கைப்படி எல்லாத் தொழில்களும் பெருவீத முறையிலேயே அமைப்பது நலமென்று சொல்லப்படுகிறது. ஆனால் வேறு சிலர் இந்தியாவின் குடிசைத் தொழில்களையே முன்னேற்ற மடையச் செய்ய வேண்டுமென்று சொல்லுகின்றனர். ஏற்கனவே அநேக பொறித் தொழில்கள் பெருவீதமுறையில் நடைபெற்று வருகின்றன. அவற்றால் பொருளுற்பத்தியும் அதிகரித்து வந்து கொண்டிருக்கிறது. இவ்விதத் தொழில்களினால் இந்தியர்கள் பெரும்பலன் அடைகின்றனர். ஆனால் தற்காலத்தில் வழங்கி வரும் அநேகக் குடிசைத் தொழில்களையும் நவீன முறையில் கூடியவரை சீர்திருத்தம் பண்ணுவோமாகில் பொதுமக்களின் க்ஷேமலாபம் அதிகரிக்குமென்று நிச்சயமாகச் சொல்லலாம்.

ஓரிடத் தொழிற் செறிவு

(Localisation of Industry)

கைத்தொழில்கள் ஓரிடத்தில் சேர்ந்திருத்தல் முக்கியமாக பூகோள நிலையும், பொருளாக்க நிலையும் பொருத்திருக்கிறது. முதன்மையாக பூகோள நிலையைச் சற்று கவனிப்போம். மூலப் பொருள்கள் கிடைக்கக்கூடிய இடங்களின் சமீபத்திலே கைத் தொழில்கள் அமைக்கப்படுகின்றன. உதாரணமாக பம்பாய், ஆமதாபாத் முதலிய இடங்களில் பஞ்சு நெசவுத் தொழில்கள் ஏற்பட்டிருப்பதற்கு முக்கியக் காரணம் என்னவென்ருல் பம்பாய் மேட்டுப் பரப்பு நிலங்களில் பஞ்சு ஏராளமாய் விளை வதேயாம். இதேமாதிரியாக வங்காளத்தில் சணல் உற்பத்தி யாவதால் இந்தியாவிலுள்ள சணல் தொழிற்சாலைகள் வங்கா ளத்திலேயே கல்கத்தாவை சுற்றிவர ஸ்தாபிக்கப்பட்டிருக்கின் றன. இரும்பு, உருக்குத் தொழிற்சாலைகள் முக்கியமாக வங்கா ளத்திலும் பீஹாரிலும் இரும்பு நிலக்கரி களங்களின் சமீபத்தில் அமைக்கப்பட்டிருக்கின்றன. சில நெசவுத் தொழில்களில் சாயம் போடுவதற்கும், சுத்தம் செய்வதற்கும் நல்ல தண்ணீர் வேண்டியிருப்பதால் அக்கைத்தொழில்கள் சாதாரணமாக நதிகள் உற்பத்தியாகும் உயர் பாகங்களிலே அமைக்கப்படு கின்றன. கடிதாசுகள் செய்யும் தொழிற்சாலைகள் பெரிய நதிகள் ஓடிவரும் மலையடிவாரத்திலே அமைப்பது விசேஷமா யிருக்கிறது. இரும்பும், இரும்பைப்போல் பளுவான சாமான் கள் செய்யப்படும் தொழிற்சாலைகள் அவைகளுக்கு வேண்டிய மூலப்பொருள்கள் கிடைக்கும் இடங்களுக்குச் சமீபத்தில் ஸ்தா பிக்கப்படுகின்றன. இங்கிலாந்து தேசத்தில் தொழிற் புரட்சி ஆரம்பகாலத்தில் நிலக்கரியும் இரும்பும் கிடைக்கக்கூடிய இடங் களில் தொழிற்சாலைகள் ஏற்பட்டன. ஆனால் தற்காலத்தில் நிலக்கரிக்குப் பதிலாக ஜல சக்தியினுல் இயந்திரங்கள் ஓட்டப் படுவதால் ஜலசக்தி வசதியுள்ள இடங்களில் தொழிற்சாலைகள் ஏற்படுகின்றன. தாள் தொழிற்சாலைகள் அவைகளுக்கு வேண்டிய மூலப் பொருள்கள் கிடைக்கும் இடங்களிலேயே காணப்படுகிறது.

கப்பல்கள் மரத்தினுல் செய்யப்பட்டுவந்த காலங்களில் மரங்கள் கிடைக்கும் தேசங்களின் துறைமுகங்களிலே கப்பல் கட்டுதல் வழக்கமாயிருந்தது. உதாரணமாக நார்வே, ஸ்வீடன் தேசங்களில் மரங்கள் ஏராளமாயக் கிடைப்பதால் மரக் கப்பல்கள் அத் தேசத்தின் துறைமுகங்களில் கட்டப்பட்டு வருகின்றன.

ஓரிடத் தொழிற் செறிவு சரியான தொழிலாளர் கிடைப்பதையும் பொறுத்திருக்கிறது, கைத்தேர்ந்த தொழிலாளர் கிடைக்கக்கூடிய இடங்களில் சில தொழில்கள் ஏற்படுகின்றன. லங்கிஷார் (Lancashire) நெசவுத்தொழிற்காரர் கைத்தேர்ந்த வேலைக்காரராயிருந்ததால் பஞ்சு நெசவுத் தொழிற்சாலைகள் அவ்விடம் முதன்மையாக அமைந்தன. ஸ்காட்லண்டின் கீழ் ஜில்லாக்களில் சணல் தொழிற்சாலைகள் ஏற்பட்டிருப்பதற்கும் ஷெவ்வீல்ட் (Sheffield) நகரில் உருக்கு வேலைகள் கீர்த்தியடைந்திருப்பதற்கும் ஷை கூறிய காரணங்களேயாம்.

ஓரிடத்தொழிற் செறிவு விற்பனை பிரதேசத்தையும் பொறுத்திருக்கிறது. எல்லாத் தொழிற்சாலைகளுக்கும் செய்பொருள்களை உற்பத்தியாகுமிடமிருந்து விற்பனையாகுமிடங்களுக்கு கொண்டு போவது அவசியம். மூலப் பொருள்களுக்கும் துறைமுகங்கள் சமீபமாயிருத்தல் வேண்டும். பளுவான சாமான்கள் சம்பந்தப்பட்ட விஷயத்தில் உண்டாக்குமிடமிருந்து விற்பனையாகுமிடங்களுக்கு எடுத்துச் செல்லுதல் சிக்கனமாகவும் லாபகரமாகவும் இருக்கவேண்டும்.

ஓரிடமிருந்து மற்ற இடங்களுக்கு ரெயில் மூலமாய் அனுப்பப்படும் பொருள்களுக்கு ரெயில் வீதக்கூலிகள் குறைவாயிருத்தல் நலம். அப்படியில்லாவிடில் சந்தைகளில் சரக்குகளைக் குறைந்த விலைக்கு விற்கமுடியாது. முக்கியமாக விவசாயப் பொருள்கள் விளையுமிடமிருந்து விற்பனையாகுமிடங்களுக்கு அனுப்ப ரெயில் கூலி குறைவாகவே யிருத்தல்வேண்டும். தவிரவும் காய்கறிகள், பழவர்க்கங்கள் முதலியன நகரங்களுக்கு அனுப்புவதற்கு ரெயில் கூலி சகாயமாயிருத்தல் வேண்டும்.

ஓரிடத் தொழிற் செறிவுக்கு சீதோஷ்ண நிலையும் ஒரு முக்கிய காரணமாகிறது. இதற்கு உதாரணமாக லங்கஷார் பஞ்சுநெசவுத் தொழிற்சாலைகளும், அமெரிக்காவிலுள்ள காலி போர்னியா சலனப்படத் தொழிலையும் எடுத்துக் கூறலாம்.

கைத்தொழில்கள் ஓரிடத்தில் சேர்ந்திருப்பதால் அநேக அனுகூலங்கள் உண்டாகின்றன :—(1) ஒரு தொழில் ஒரே இடத்தில் பலகாலமாக நடந்துவருவதால் அத் தொழிலுக்கு மேன்மை ஏற்படுகிறது. அத்தொழிலின் பொருளுக்கு ஓர் கீர்த்தி ஏற்படுகிறது. டாக்கா (Dacca) மஸ்லின்களும், காஷ்மீர் கம்பளிப் போர்வைகளும் ஷெவ் வீல்ட (Sheffield) வெட்டுக் கருவிகளும் இத்தன்மையாலே மேன்மையாக விளங்குகின்றன. (2) கைத் தேர்ந்த வேலைக்காரர்களுக்கு இது ஒரு பெரிய அனு கூலமாயிருக்கிறது. பெரியத் தொழிற்சாலைகள் அமைந்திருக் கும் இடங்களில் சென்று தங்கள் திறமைக்குத் தக்க வேலை களில் அமர்ந்துகொள்ளலாம். தவிரவும் ஓரிடத்தில் வேலைக் காரர்கள் வேலை செய்வதால் அவர்களின் திறமை பரம்பரை யாக ஏற்படுவதற்குள்ள வசதிகள் உண்டாகின்றன. வேலைக் காரர்களின் மக்கள் தினசரிப் பழக்கத்தால் தங்கள் பெரியோர் செய்யும் வேலைகளின் நுட்பங்களைத் தெரிந்துகொள்கிறார்கள். (3) பெரிய தொழில்கள் ஓரிடத்தில் சேர்ந்திருப்பதால் அவை களுக்கு அனுகூலமாக உபதொழில்கள் அநேகம் ஏற்படுகின் றன. பெரிய தொழில்களின் உபபொருள்கள் வீணுகாமல் வேறு சில சிறிய தொழில்களுக்கு உபயோகப்பட்டு வரு கின்றன.

ஓரிடத் தொழிற் செறிவினால் உண்டாகும் சில தீமை களைக் கவனிப்போம் :—ஓரிடத்தில் கைத்தொழில் அமைவ தால் அத்தொழிலுக்குரியவர்களுக்கு மட்டும் வேலை கிடைக் கிறது. உதாரணமாக இரும்புத் தொழிற்சாலைகள் ஓரிடத் தில் அமைவதால் அத்தொழிலுக்குரியவர்களுக்கு மட்டும் வேலைக் கிடைக்கிறது. உதாரணமாக இரும்புத் தொழிற் சாலைகள் ஓரிடத்தில் சேர்ந்திருப்பதால் தேக பலமுள்ள வேலைக்காரர்களுக்கு மட்டுமே வேலைக் கிடைக்கிறது. அவ் வேலைக்காரர்களைச் சேர்ந்த பெண் பிள்ளைகளுக்கும் வாலிப

ருக்கும் வேலை கிடைப்பதில்லை. ஒருவர் சம்பாத்தியத்தை வைத்துப் பலர் ஜீவனம் பண்ணும்படி ஏற்படுகிறது. இவ்வித இடையூறுகளை நீக்கச் சில சேர்க்கைத் தொழில்களும் நடத்துவது நலம். (2) கைத்தொழில்கள் ஓரிடத்தில் சேர்ந்திருப்பதால் அவ்விடத்தில் ஜனநெருக்கம் அதிகமாக ஏற்படுகிறது ; நிலப்பிரியம் ஏற்படுகிறது ; விலைவாசிகளும் கூடுகின்றன. கைத்தொழில்களுக்கு தளர்ச்சி ஏற்படுங்கால் தொழிலாளரில் அநேகர் வேலையிலிருந்து நீக்கப்படுகிறார்கள். வேலையில்லாத் திண்டாட்டம் அதிகப்படுகிறது. இதற்காகவே ஓரிடத்தில் பலவிதமான தொழில்கள் அமைந்திருப்பது நலமாகும்.

இக் காலத்தில் போக்கு வரவு வசதிகளினாலும், மின்சார சக்தியினாலும் கைத்தொழில்கள் ஓரிடத்தில் சேர்ந்திருப்பதை விட வெவ்வேறு இடங்களில் அமைக்கப்பட்டு வருகின்றன.

இந்தியாவின் பொருளுற்பத்தி (Production)

1. பொதுக்குறிப்புகள் :

நிலம் (Land)

இயற்கை வசதியே உற்பத்திச் சாதனங்களுள் முக்கியமானது. இந்தியா இயற்கை வசதியில் மேன்மையான நிலையில் இருக்கிறதென்பது, நாம் கண்ட உண்மை. வளமிகுந்த நிலங்களும், தாதுப் பொருட்கள் மிகுந்த இடங்களும் இங்குண்டு. நிலங்களின் உற்பத்தி மழையின் செழுமையைப் பொறுத்தே இருக்கிறது. ஆனால் நிலம் நீர்ப்பாசன வசதியின்மையாலும் ஆயிரக்கணக்கான சிறு துண்டுகளாக்கப்பட்டு எண்ணற்ற விவசாயிகளால் பயிரிடப்பட்டு வருகிறதாலும் உற்பத்தி குறைகிறது. உற்பத்திக்கு உபயோகிக்கிற எல்லா நிலங்களும் குத்தகை (Rent) கொடுப்பதற்கு உட்பட்டாகவேண்டும்.

உழைப்பு (Labour)

இந்தியாவில் தொழிலாளிகள் மிகுதியாக இருக்கின்றனர். வேலையாட்களின் சம்பளம் மிகவும் குறைவு. ஆனால் வேலையாட்கள் கல்லாதவராயும் திறமையில்லாதவராயும் இருப்பதால்

பொருளுற்பத்தியானது இதர தேசங்களுடன் ஒப்பிடின் மிகவும் குறைந்திருக்கிறது. ஆகையால் உழைப்பு நயமென்று மிக எளிதில் கூறிவிடமுடியாது. உழைப்பாளிகள் இடம்விட்டு இடம் மாறும்போதும், ஒரு தொழிலை விட்டு மற்றொரு தொழிலை மேற்கொள்ளும்போதும் நிலையற்றவராகவும் ஒழுங்கு குலைந்தவராகவும் இருக்கிறார்கள். கிராமத் தொழிலாளிகள் சாதுக்களாகவும் முயற்சியுடையவராகவும் இருக்கின்றனர். ஆனால் இலாபத்தை பெருக்கும் வசதியற்றவர்களாகவும் இருக்கிறார்கள். இந்தியத் தொழிலாளி ஆய்ந்தறியும் ஆற்றலுடையவனாக இருந்துங்கூட, கல்வியறிவு இல்லாத காரணத்தால், எவ்வழி நல்வழி என்றறியும் இயல்பற்றவனாக இருக்கிறான். மேலும் அவன் ஏழை மட்டுமல்லன், பெருங்கடனாளியுங்கூட. செய்து முடிக்கும் தகுதியற்றவனாக இருந்துங்கூட முதலாளி போன்றவர்களது வேலைகளையும் பார்த்துக் கொள்கிறான். உழைப்பின் மேன்மையை உணராத மேல் வகுப்பார் இன்னும் இருந்து வருகிறார்கள். பகுத்துழைத்தல் (Division of Labour) மேல் நாடுகளைப்போலன்றி இங்கு சிறிய அளவிலேயே கையாளப்பட்டு வருகிறது.

முதல் (Capital)

உள்நாட்டு முதல் மிகவும் குறைவாக இருப்பதுமன்றி, சிறிது நாட்களுக்குமுன் வரையிலும் அது வளர்ச்சியடையாமலுமிருந்தது. செல்வம் செழித்திருக்கும் இடங்களில்கூட "எதுவறினும் அஞ்சேன்" என்ற துணிவின் அவசியத்தை உணராத காரணத்தால், ஊக்கம் குறைந்து தன் முதலை ஆதாயம் தரும் தொழிலில் முடக்க தயங்குகிறான். பின் வருங்காலத்தை நிருணயிக்கும் சக்தியைப் பூரணமாகப் பெறமுடியாதவனாகிறான்.

தொழில் அமைப்பு (Organisation)

தொழிலமைப்பு தற்பொழுதுள்ள கைத்தொழில்களின் வெற்றிக்கு மிகவும் இன்றியமையாததாக இருக்கிறது. ஆனால் அவைகள் இந்தியாவில் தேவையான அளவிலும், திருப்தி அளிக்கக் கூடிய விதத்திலும் வளர்ச்சியடையவில்லை. உலக அனுபவம் வர்த்தகத்தில் நல்லதொரு திறனைப்பெறச் செய்

கிறது. அனுபவமுள்ள ஒரு சிலரே இங்கு உற்பத்தியாளரின் சிக்கல் நிறைந்து சிதைவுற்ற வேலைகளை எவ்விதம் திறன்படச் செய்ய வேண்டுமென்று உணர்ந்தவராக உள்ளனர். கைத் தொழிற் பயிற்சியும் வர்த்தக அறிவு பெருதலும் வருந்தத்தக்க விதத்தில் புறக்கணிக்கப்பட் டிருக்கின்றன. கூட்டுறவின் பெருமையை இது வரையிலும் சரிவர உணரவில்லை. உண்மைத் திறன் படைத்துச் செவ்வனே செயலாற்றும் வன்மைபெற்ற உற்பத்தியாளர்கள் நாட்டில் மிகவும் குறைவே.

மேற் கூறியவைகளே முக்கியமான சில தடைகள். இயற்கைப் பொருள்கள் செழித்திருந்துங்கூட, இந்தத் தடங்கல்கள் வேகமாகப் பெருகும் செல்வத்தின் வளர்ச்சியை மட்டுப்படுத்து கிறது. முன்னேற்றத்தில் தலைசிறந்து விளங்கும் ஏனைய நாட்டின் வருடாந்தர உற்பத்தியோடு இந்தியாவின் உற்பத்தியை சிறிதேனும் உவமைப்படுத்த முடியாது. இந்நிலையில் இந்தியநாடு செல்வம் செழித்துச் சீர்பெற்ற நாடாக இல்லை.

இதனால் வருங்காலத்தைப்பற்றி வருந்த வேண்டியதில்லை. வருங்கால வாழ்வை வளம்பெறச் செய்து இன்பபுரியாக்கலாம். மக்கள் விழித்தெழுந்து ஊக்கமுடன் விரைந்துழைத்தால், சீர்பெற்ற பொருளாதாரத்தைப் பெறலாம் என்பது திண்ணம். நாம் இன்பபுரி நோக்கிச் செல்கிறோம் என்பதற்குப் பல அறிகுறிகள் தோன்றியிருக்கின்றன. மேலே குறிப்பிட்ட குறைகள் மக்களுடன் பிறந்தனவல்ல. சூழ்நிலை காரணமாக தோன்றியனவேயன்றி வேறில்லை. கைத்தொழில் சீர்பெற இடைவிடா நன்முயற்சி செய்யவேண்டும் என்பதை நாம் உணர்ந்து விட்டோம். வெளியுலகம் புத்துணர்ச்சி பெற்றுப் புதுவாழ்வு பெற்று வருகிறது. உழைப்பு தன்னகத்தே உள்ள அறியாமையையும் மந்தத்தையும் அறவே அறுத்தெரிய எத்தனித்து வருகிறது. இதுவரை மூலதனம் வளர்ச்சியின்றி வாடியிருந்தது. இப்பொழுது வளம் பெற்று வளர ஆரம்பித்து விட்டது. மக்கள் பூரிப்படைந்து புதியதொரு கைத்தொழில் வாழ்க்கையை அமைக்கத்தக்க தங்களைத் தகுதிப்படுத்திக் கொண்டுவருகின்றனர்.

உற்பத்தியைப் பொருத்த அளவில் பொருளாதார நிலையைக் கீழ்க் கண்டவாறு குறிக்கலாம். உற்பத்தித் தன்மையில் இந்தியா பெருமிதம் பெற்று இருக்கிறது. இயற்கை வசதிகள், மலிந்த உழைப்பு, இவை இருந்துங்கூட இந்தியா மேலே சொன்ன மூலதனம், தொழில் அமைப்பு இவைகளில் தேவைப்படுகிற அளவிற்கும் குறைந்துதான் இருக்கிறது. என்றாலும் இந்தத் தடைகள் எளிதில் ஒதுக்கி நீக்கும் நிலையிலே தானுள்ளது. சீர்கெடுக்கும் இச்சிறிய தடைகளைச் சின்னாபின்னமாக்க முயற்சி செய்யப்பட்டு வருகிறது.

2. உழவுத்தொழில், ஆலைத்தொழில்—ஒப்பீடு (Agriculture and Manufacture Compared)

(1) விவசாயமே முக்கிய தொழிலாகவுள்ள தேசங்களில் முயற்சியில் சுயேச்சை (Freedom of Enterprise) அதிகமாகக் கிடையாது. ஆனால் இப் பேர்ப்பட்ட முயற்சியில் சுயேச்சை கைத்தொழிலின் முக்கிய அம்சமாக இருக்கிறது. விவசாயி தன் தொழிலுக்காக நிலம் இருக்கும் இடத்திற்குச் செல்லுகிறான். ஆனால் கைத்தொழில் விஷயத்தில் மூலப் பொருள்கள் கைத் தொழில் ஸ்தாபிக்கப்படும் இடங்களுக்கு கொண்டுவரப்பட்டு செயற்கைப் பொருள்களாக மாறுகின்றன.

(2) விவசாயத்தொழில் இயற்கைச் சக்திகளை பொறுத்திருக்கிறது. பருவக்காலத்திற்குத் தக்கபடி விவசாயத்தை நடத்த வேண்டியிருக்கிறது. ஆனால் கைத்தொழிலில் இவ் விஷயங்களை அவ்வளவு கவனிக்க வேண்டியதில்லை.

(3) விவசாயத்தை பெருவீத பொருளுற்பத்தி முறைக்கு கைத்தொழிலைப்போல் அவ்வளவு தூரம் அமைக்க முடியாது. தவிரவும் விவசாயத் தொழிலில் கைத்தொழிலைப்போல் அவ்வளவு வேலைப்பகுப்பு சாத்தியமில்லை.

(4) விவசாயத்தின் விளைச்சல், மழை வாயுநிலை முதலிய இயற்கையில் ஏற்படக்கூடிய அம்சங்களை பொருத்திருக்கிறது.

ஆகையால் மாசூல் சிலதடவை அதிகமாயும், சிலதடவை குறை வாகவும் கிடைக்கின்றது. ஆனால் கைத்தொழிலில் இவ்வித மாறுபாடுகள் கிடையா.

(5) விவசாயத்தில் வர வர வரும்படி குறையும் நிலை (Law of Diminishing Return) ஏற்படுகிறது. கைத் தொழிலில் வர வர வரும்படி குறையும் நிலை ஏற்பட்டபோதிலும் அதற்கு கைம்மாறாக வர வர வரும்படி கூடும் நிலையும் அதிக மாகக் காணலாம்.

(6) விவசாயத்தில் கைத்தொழிலைப்போல இயந்திர வேலைக்கு அவ்வளவு அதிக இடமில்லை. சாஸ்திர ஆராய்ச்சி யினால் ஏற்படும் சீர்திருத்தங்களை விவசாயத்தைவிட கைத் தொழிலில் அதிகமாக உபயோகிக்கமுடியும். ஆனால் வேதிப் பகுப்பினாலும் மின்சாரத்தினாலும் விவசாயத்தை விருத்தி யடையச் செய்யலாம்.

(7) விவசாயப் பிரதேசங்களில் பொதுவாகத் தொழிலாளி களின் போக்குரிமை குறைவாகவே இருக்கிறது. நிலம் குடியானவனுக்கே சொந்தமாயிருக்கும் இடங்களில் குடியான வன் தன் நிலத்தைவிட்டு நகர்வதில்லை. கைத்தொழில் விருத்தி யடைந்த தேசங்களில் கூலி வேலைக்காரர் சுயேச்சையாய் பரவுவதற்கு ஒருவிதமான தடங்கலும் கிடையாது.

(8) விவசாய நடவடிக்கைகள் எல்லாரும் எளிதில் தெரிந்துகொள்ளக்கூடிய தன்மைகள் உடையன. ஆகையால் விவசாயத்திற்குக் கைத்தொழிலைவிட உழைப்புப் பகுப்பு குறைந்த பட்சமாயிருக்கிறது.

(9) கைத்தொழிலில் கிடைக்கும் இலாபம் விவசாயத்தில் கிடைக்கும் இலாபத்தைவிட அதிகமாகவே இருக்கிறது. இதனால் ஒரு தேசத்தின் மூலப்பொருள்களை மற்றொரு தேசத் தின் செயற்கைப் பொருள்களுக்காகப் பண்டமாற்றுதலில் இரு தேசத்தாரும் பரஸ்பரம் நன்மையடைந்தபோதிலும், செயற் கைப் பொருள்களை உண்டாக்கும் தேசத்தாரின் இலாபம் அதிகமாகவே இருக்கிறது.

(10) கைத்தொழில் மேன்மையடைந்த தேசத்தில் பொருளுற்பத்தி அதிகமாயிருப்பதால் அத்தேசத்தார் விவசாய தேசத்தாரைவிட அதிக ஜனங்களைக் காப்பாற்றமுடியும்.

(11) விவசாயத் தொழிலைக் கைப்பற்றுவோர் சுயேச்சை யாக வசிக்கின்றனர். தவிரவும் விவசாயத்தொழில் சுவாதந்திரி யத்தையும் மற்ற குணசம்பத்துக்களையும் விளைவிக்கின்றது. ஆனால் பெருவீத கைத் தொழிலானது கூலி வேலைக்காரரின் சுயேச்சையையும் மற்றும் சில மேன்மையான குணங்களையும் நிக்கிரகம் செய்கின்றது.

(12) விவசாயம் பிரதம தொழிலாயிருக்கின்றது. கைத் தொழில் இரண்டாம் பட்சமாகத்தான் கருதப்படுகிறது. இத னால் விவசாயம் மேலானதும் கைத்தொழில் கீழானதுமான தொழில் என்று கருதக்கூடாது. உலக சு[illegible]க்கு மிடத்து இரண்டும் இன்றியமையாதது. ஆனால் முன்னேற்ற மடைந்த சில தேசத்தார் கைத்தொழிலுக்கு விவசாயத்தைவிட அதிக பிரதான்யம் அளித்திருக்கின்றனர்.

கிராம வாழ்க்கையும்,
கிராம வாசிகளின் பொருளாதார நிலைமையும்

இந்தியாவில் ஆயிரக்கணக்கான கிராமங்களிருக்கின்றன. ஒவ்வொரு கிராமத்திலும் விவசாயமே முக்கிய தொழிலாக இருக்கிறது. நன்செய் நிலங்களில் நெல், கரும்பு முதலிய பயிர்களும், புன்செய் நிலங்களில் கேழ்வரகு, கம்பு, சோளம் முதலான பயிர்களும் செய்யக்காணலாம். இக்குடியானவர் களுக்குப் பயிரிடவேண்டிய கருவிகளைச் செய்யவும், வாழ்க் கைக்கு வேண்டிய பாத்திரங்கள், இரும்புச் சாமான்கள், தோல் சாமான்கள் முதலியனசெய்யவும் வீடு கட்டுவதற்கு வேண்டிய செங்கல், ஓடு முதலியவற்றைத் தயாரிக்கவும், சில தொழிலாளி கள் கிராமத்திலேயே வசிக்கின்றனர். கிராமவாசிகளுக்கு வேண்டிய பொருள்களை விற்கவும் இவர்களது விளைபொருள் களை வாங்கவும் சில வியாபாரிகள் இருக்கின்றனர். விவசாயி களுக்குப் பயிரிடும் தொழில் செய்வதற்கு அநேக ஹரிஜனங்கள் இருக்கின்றனர். இவர்கள் கிராமத்தினருகில் வசிக்கின்றனர்.

ஒவ்வொரு கிராமத்திலும் பெரும்பான்மையோர் விவசாயிகளும், மற்றவர் வியாபாரிகள், கருமான், தச்சன், குயவன்' கன்னன், அம்பட்டன் முதலானோரும் இருக்கக் காணலாம், நமது தேசத்தில் மேற் கண்ட பல தொழில்களைச் செய்யும் ஜனங்களும், அவரவர் செய்யும் தொழிலுக் கேற்ப பல ஜாதியராக வகுக்கப்பட்டிருக்கின்றனர். இவர்கள் அனைவரும் கூடி ஐக்கியமாக ஒவ்வொருவரின் நலம் பொருட்டு மற்றவர் உழைத்து வருகின்றனர். ஆகவே கிராமவாசிகளின் வாழ்க்கையை ஒரு கூட்டுறவுச் சங்கத்திற்கு ஒப்பிடலாம்.

கிராமவாசிகளின் வருமானத்தை கவனிப்போம். நிலத்தில் வேலை செய்பவர்களின் வருமானம் மிகக் குறைவேயாகும். பொரும்பாலும் ஒவ்வொரு விவசாயியின் நிலம் சொற்பமாதலால் அதில் வரும் வரும்படியில் அதிக மீதம் கிடையாது. அதிக நிலமுடையவரை செல்வந்தர் எனக் கூறலாம். மற்ற குடிகள் வருஷா வருஷம் மாடு வாங்கவும் விதை வாங்கவும் இதர செலவுகளுக்கும் கடன் வாங்கவேண்டியிருக்கிறது. கிராமக் லேவாதேவிக்காரரிடம்(Village Money lenders)அதிக வட்டிக்கு கடன் வாங்கிவருவதால் விவசாயிகள் க்ஷீணமடைந்து வருகின்றனர். தற்காலத்தில் கவர்ன்மெண்டார் குடிகளுக்குச் சொற்பவட்டியில் கடன் கொடுப்பதற்கு ஐக்கிய நாணயச்சங்கங்கள் ஏற்படுத்தியிருக்கின்றனர்.

நமது தேசத்தில் பெருபான்மையோர் பயிர்த்தொழிலில் ஈடுபட்டுக் கிராமங்களிலேயே வசிப்பதால் கிராம முன்னேற்றமடையும் முயற்சிகளை (Rural uplift) அரசாங்கத்தார் செய்து வருகின்றனர். விவசாயிகளுக்குப் புதுமுறைகளைப் போதிக்கவும் சிறந்த விதைகளை விற்கவும் கவர்ன்மெண்டார் விவசாய இலாகா ஏற்படுத்தி இருக்கிறார்கள். மேலும் விவசாயிகளுக்குக் கூலிவேலை செய்து பிழைக்கும் ஏழைக்குடிகளையும், ஹரிஜனங்களையும் ஒவ்வொரு கிராமத்திலும் காணலாம். இவர்கள் முன்னேற்றம் அடையும் பொருட்டும், கல்வி பயிலும் பொருட்டும் ஏழைக் குடிகள் முன்னேற்றதற்குரிய இலாகா (Labour Department) ஏற்படுத்தி இருக்கின்றனர்.

கிராமக் கைத் தொழில்கள்

சில கிராமங்களில் விவசாயிகள் பயிர்த்தொழில் செய்வதோடு ஆடு மாடு வளர்த்தல்,கோழி வளர்த்தல் ,தோட்டக்கால் பயிர்களாகிய காய்கறிகள், வாழை வெற்றிலை முதலிய பல தொழில்களையும் செய்கின்றனர்.

நகரங்களுக்கருகிலுள்ள கிராமங்களில் பசு, எருமை, முதலியவைகளை வளர்த்து அவைகளின் பாலிலிருந்து தயிர், வெண்ணெய் முதலியன தயாரித்து பட்டணங்களுக்குக் கொண்டுபோய் விற்கின்றனர். ஆடுகள் வளர்ப்பவர் அந்த ஆடுகளைக் கசாப்புக் கடைக்காரர்களுக்கு விற்று விடுகின்றனர். அவர்கள் ஆட்டிறைச்சியை விற்று ஜீவிக்கின்றனர். கோழி வளர்ப்பவர் கோழி முட்டைகளையும் கோழிகளையும் பட்டணங்களில் விற்று இலாபமடைகின்றனர்.

சில கிராமங்களில் பானை செய்தல், களிமண்ணால் அழகான பொம்மை செய்தல், கூடை முடைதல், ஜரிகை வேலை தந்த வேலை, பித்தளைப் பாத்திரங்கள் செய்தல், பாய் பின்னுதல், பருத்திப் பட்டு நூல்களால் துணிகள் நெய்தல் முதலான பல வ்கைத் தொழில்கள் நடைபெறுவதைக் காணலாம். நமது நாட்டில் பெரும்பாலும் ஸ்திரீகள் உடுக்கும் சேலைகள் நாட்டுப்புறங்களில் கைத்தறியில் நெய்தவைகளேயாகும். மகம்மதியர் உடுக்கும் லுங்கி என்ற ஆடைகள் கைத்தறியில் நெய்யப்பட்டதேயாகும். சென்னை இராஜதானியில் அநேக கிராமங்களில் லுங்கி நெய்யப்பட்டு சிலோன், சிங்கப்பூர், முதலிய வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகின்றது. ஒவ்வொரு கிராமத்திலும் கதர் நூல் நூற்கும் தொழிலையும் கதர் துணி நெய்யும் தொழிலையும் காங்கிரஸ் சபையார் அபிவிருத்தி செய்து வருகின்றனர்.

பொருளாதார நூல் கற்பவர் தங்கள் கிராமத்தில் கைத்தொழில் நடக்கும் இடத்திற்குப் போய்ப் பார்வையிடவேண்டும். அங்கு அக்கைத்தொழில் நடப்பதற்குரிய வசதிகள் என்னவென்று தெரிந்து கொள்ளுங்கள். அங்கு உற்பத்தியாகும் பொருள்களை எங்கு கொண்டு போய் விற்கிறார்கள் ?

அப்பொருள்களை உற்பத்தி செய்ய எவ்வளவு செலவாகிற தென்றும் அவைகளை என்ன விலைக்கு விற்கிறார்கள் என்றும் அவர்களுக்கு என்ன லாபம் கிடைக்கிறதென்றும் விசாரிக்க வேண்டும்.

நகர வாழ்க்கையும் நகர வாசிகளின் பொருளாதார நிலைமையும்

பட்டணங்களில் வசிக்கும் ஜனங்கள் பயிரிடும் குடிகளல்லர். அவர்கள் உத்தியோகத்தின் பொருட்டோ அல்லது வியாபாரத்தின் பொருட்டோ அல்லது கூலிவேலை செய்து பிழைக்கும் பொருட்டோ அங்குவந்து சேர்ந்தவர்களாவர். பலர் கைவண்டி இழுத்தல், குதிரைவண்டி மாட்டுவண்டி ஓட்டுதல், முதலிய தொழில்களைச் செய்கிறார்கள். அன்றியும்;பட்டணத்தில் பல தொழில்கள் நடைபெறும் சாலைகள் இருப்பதால் அநேக ஜனங்கள் கூலிவேலை செய்து பிழைப்பதற்கு ஏதுவாயிருக்கிறது. நமது நாட்டில் உள்ள பட்டணங்களில் அநேகர் வியாபாரம் செய்து ஜீவிக்கின்றனர். சுற்றுப் பக்கத்துக் கிராமங்களில் விளையும் பொருள்களை வாங்கி வெளிதேசங்களுக்கு அனுப்புவதும் வெளிதேசத்திய சரக்குகளை வாங்கி கிராமவாசிகளுக்கு விற்பதும் இவர்களுடைய முக்கிய தொழிலாகும். பட்டணங்களில் அநேகத் தொழிற்சாலைகள் தவிர அநேக கவர்ன்மெண்ட் உத்தியோகச் சாலைகள் இருக்கின்றன. இந்த ஆபீசுகளில் வேலைசெய்யும் உத்தியோகஸ்தர்கள் அங்கே வசிக்கின்றனர். பட்டணத்தில் வசிக்கும் ஜனங்களுக்கு வேண்டிய காய்கறிகளைப் பயிர் செய்து அங்கு கொண்டுபோய் விற்பது அதனருகில் உள்ள கிராமவாசிகளின் தொழிலாகும். உதாரணமாக சென்னையைச் சுற்றியுள்ள பல கிராமங்களிலுள்ள ஜனங்கள் காய்கறிகளையும் பால், தயிர், வெண்ணெய் முதலியவற்றையும் சென்னைக்குக் கொண்டு வந்து விற்கின்றனர். ஆகவே ஒரு பட்டணத்தைச் சுற்றியுள்ள கிராமவாசிகள் அப்பட்டணத்து ஜனங்களுக்கு இன்றியமையாத பொருள்களைத் தந்து அவர்களுக்கு வேண்டிய பொருள்களைப் பெற்று ஜீவிக்கின்றனர்.

பட்டணங்களில் நடைபெறும் தொழிற்சாலைகள் பெரிய செல்வந்தர்களுக்குச் சொந்தமாகும். இவர்கள் தொழிற்சாலைகளில் ஏற்படும் இலாபத்தில் பெரும் பகுதியை எடுத்துக் கொண்டு சிறுபகுதியையே தொழிலாளர்க்குச் சம்பளமாகக் கொடுக்கின்றனர். இக்காரணத்தால் பட்டணங்களிலுள்ள தொழிற்சாலைகளில் முதலாளிகளுக்கும் தொழிலாளர்களுக்கும் சச்சரவு உண்டாகி வேலைநிறுத்தம் ஏற்படுகிறது.

பட்டணங்களில் வசிக்கும் ஜனங்களின் தினசரி வருமானம் கிராமவாசிகளின் வருமானத்தைவிட அதிகமாகும். ஆனால் நகரவாசிகள் வீட்டுக்குடிக்கூலி கொடுக்கவும், காய்கறிகள், பால், தயிர், முதலான உணவுப் பொருள்கள் வாங்கவும் அதிக செலவு செய்ய வேண்டியிருக்கிறது. பட்டணங்களில் உள்ள ஜனங்களின் வருமானத்தை உத்தேசமாய்க் கணக்கிட்டுப் பார்ப்போம். மாதம் 200 ரூபாய்க்கு மேல் வருமானம் உள்ளவர்கள் மிகவும் சிலரே யாவர். ரூ. 100 முதல் ரூ. 200 வரை வருமானமுள்ளவர் பலர். ரூ 100க்கு குறைந்த வருமானமுள்ளவர் அநேகர். ஒருவிதத் தொழிலுமின்றி இருப்பவர்களின் எண்ணிக்கையும் அதிகமாயிருக்கிறது. பட்டணங்களிலுள்ளவர்களின் சராசரி மாத வருமானத்தைக் கணக்கிட்டுப் பார்த்தால் மிகவும் குறைவாகவே யிருக்கும். ஆகவே நம் நாட்டிலுள்ள ஜனங்களில் பெரும்பாலோர் மிகவும் ஏழை மக்களே என்று திண்ணமாய்க் கூறலாம்.

நகரத் தொழிற்சாலைகள்

நகரங்களில் இயந்திரங்களுதவியால் பல கைத்தொழில்கள் நடைபெறுகின்றன. தோல்பதனிடுதல், சோப்பு செய்தல், பென்சில் செய்தல், கண்ணாடி சாமான்கள் செய்தல், துணிநெய்தல் முதலிய தொழில்கள் நடைபெறுகின்றன. ஒரு நகரத்தில் நடைபெறும் தொழிலுக்கு அந்நகரத்தைச் சுற்றியுள்ளகிராமங்களில் உற்பத்தியாகும் விளைபொருள்களுக்கும் நெருங்கிய சம்பந்தமுண்டு. இதற்குப் பல உதாரணங்கள் கூறலாம். கல்கத்தாவுக்கருகில் சணல் விசேஷமாகப் பயிர்

ஆவதால் பம்பாயில் அநேக நெசவுச்சாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. பம்பாயைச்சுற்றிப் பருத்தி விசேஷமாய்ப் பயிராவதால் பம்பாயில் அநேக நெசவுச்சாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. மைசூரில் சந்தன மரங்கள் அதிகமாக இருப்பதால் அங்கே சந்தன சோப்பு செய்யும் தொழிற்சாலைகள் காணப்படுகின்றன.

நமது நாட்டில் இரும்பு, நிலக்கரி முதலியன ஏராளமாகக் கிடைக்கவில்லை. தவிரவும் நம் நாட்டு நீர்வீழ்ச்சிகளும் பூரணமாக உபயோகிக்கப்படவில்லை. அதிக முதல் வைத்து இயந்திரங்களை வெளிநாடுகளிலிருந்து வாங்க வேண்டியிருக்கிறது. இக்காரணங்களினால் இச்சாலைகளில் உற்பத்தியாகும் பொருள்களின் விலை அதிகமாகிறது. நீர்வீழ்ச்சிகளின் சக்தியாலும் நிலக்கரியின் சக்தியாலும் வெளிநாடுகளில் ஓட்டப்படும் இயந்திரங்களின் உதவியால் தயாரிக்கப்படும் சாமான்கள் நமது நாட்டில் குறைந்த விலைக்கு விற்கப்படுகின்றன. நம்மவர்களும் குறைந்த விலைக்குக் கிடைக்கும் வெளிநாட்டுச் சாமான்களை வாங்குகிறார்களே ஒழிய தேசாபிமானங்கொண்டு உள்நாட்டுச் சாமான்களை ஆதரிப்பதில்லை. இக்காரணத்தினால் நம் தேசத்தில் ஏற்பட்ட தொழிற்சாலைகள் நாளுக்கு நாள் க்ஷீணித்துக் கடைசியில் எடுக்கப்பட்டன.

உங்கள் கிராமத்துக் கருகிலிருக்கும் பட்டணத்திலுள்ள ஏதாவதொரு தொழிற்சாலைக்குப் போய் பாருங்கள். அத் தொழிற்சாலை நடைபெறுதவற்கேற்ற வசதிகள் யாவை? அதற்கு வேண்டிய உற்பத்திப்பொருள்கள் எங்கிருந்து கிடைக்கின்றன? இயந்திரங்கள் ஓட்டும் சக்தி எதனின்றும் கிடைக்கின்றது? இத்தொழிற்சாலைகளில் உற்பத்தியாகும் பொருள்களின் விலை என்ன? இப்பொருள்கள் வெளி நாட்டில் உற்பத்தியாகும் அதே பொருள்களைவிட உறுதியாயிருக்கிறதா? இவைகளில் விலை அதிகமா அல்லது குறைவா? அத்தொழிற்சாலைகள் நாளுக்கு நாள் அபிவிருத்தியடைந்து வருகிறதா? அல்லது க்ஷீணித்து வருகிறதா? இதற்குக் காரணம் என்ன? இவ்விஷயங்கள் பொருளாதார நூல் கற்போர் ஒவ்வொருவரும் கவனிக்க வேண்டியது அவசியம்.

வேளாண்மை (பயிர்த்தொழில்)

இந்தியாவில் வேளாண்மை மிக முக்கியத் தொழிலாகக் கருதப்படுகிறது. மக்கள் தொகையில் மூன்றில் இரண்டு (2/3) பாகம் இத்தொழிலேயே கையாண்டு வருகிறார்கள். கிராம மக்கள் 90 சதவிகிதம் பல விதத்திலும் இவ்வேளான்மையே கதி எனக் கிடக்கின்றனர்.

இந்தியாவைப்போன்ற பெரியதொரு நாட்டில் நிலத்தின் உற்பத்தி மறுக்க முடியாத முறையில் மாறுபட்டிருக்கிறது. நமக்கு ஒரு புறத்தில் நல்ல வளமுள்ள பருத்திவிளையும் கரிசல் நிலமும் (Black Cotton Soil) கங்கைநதி முகத்திலுள்ள வண்டல் நிலங்களும், மற்றொரு புறத்தில் விந்தியமலையிலுள்ள பாறைக்குன்றுகளும், மேற்கு இராஜபுதனத்தில் அதிக மணல் நிறம்பிய நிலமும் உள்ளன. இந்த இரண்டு பெரும் பாகு பாட்டிற்கு மிடையில் சிறிது சிறிது வளமுள்ள நிலங்களும் காணப்படுகின்றன. பொதுவாக இந்தியா நல்ல வளம் பெற்ற நிலப்பரப்பை உடையது எனலாம்.

நிலங்களை நாம் பல வழிகளில் பகுக்கலாம். சாகுபடி செய்யப்படும் நிலம், சாகுப்டி இல்லாத நிலம், பண்படுத்தக் கூடியநிலம், பண்படுத்த முடியாத நிலம், நீர்ப்பாசன நிலங்கள், நீர்ப்பாசனமல்லாத நிலங்கள், ஒருபூ நிலங்கள், இருபூ நிலங்கள் என்பவைகளே பகுப்புக்களில் முக்கிய மானவை.

உண்மையான வருடாந்திர விளைவு மழையின் மொத்த அளவை பொருத்திருக்கிறது. பருவத்தின் கோளாற்றினால் சில இடங்களில் வருடத்திற்கு இருமுறை பயிர் செய்யப்படுகின்றது. ஆனால் நீர்ப்பாசன வசதியுள்ள நதிமுகம் போன்ற இடங்களில் மும்முறை அறுவடை செய்கிறார்கள். இந்தியாவில் மொத்தச் சாகுபடி நிலங்களில் ஏழில் ஒருபாகம் இரட்டை விளைவுக்கு வசதி யளிக்கிறது.

கோடைகாலப் பயிர், கார்காலப் பயிர் என வருடத்தில் இரண்டு முக்கிய அறுவடைகள் உள்ளன. அவைகளில் கோடைகாலப் பயிருக்கு அதிகத் தண்ணீர் தேவை. ஆகவே தென்மேற்கு பருவக்காற்று ஆரம்பிக்கும்போது இப்பயிரை நடுவதற்கு ஆரம்பித்து விடுவார்கள். செப்டம்பர், நவம்பர் மாதங்களுக்கிடையில் அறுவடையும் முடிந்துவிடும்.

கார்காலப் பயிர் தன் பெயருக்கு ஏற்றவாறு அதிகமாக மழையை நாடாது. அக்டோபர் நவம்பர் மாதங்களில் பயிராக்கி மார்ச்சு, ஏப்பிரல் மாதங்களில் அறுவடைக்குத் தகுதியாக்கி விடுவார்கள். இந்த இரண்டு பயிர்களின் தன்மையும் இவைகளுக்குத் தேவையான காலநிலையும் மாறுபட்டுத் தானிருக்கின்றன. இவைகளில் மாறுபட்ட தன்மையை வடஇந்தியாவில் தான் சிறப்பாகக் குறிப்பிடலாம். மேற்கு வங்காளம் சென்னை போன்ற இடங்களில் இப்பயிர்களின் கால நிலையின் மாறுபாடு குறைந்திருக்கிறது. பயிர்கள் வளர்ச்சியடையும்போது மிக்க குளிரினால் உற்பத்தியானது மிதப்படுகிறது. ஆனால் ஒரே விதமான பயிரைக் கோடைக் காலத்திலும், கார்காலத்திலும் சென்னை, மேற்கு வங்காளம் போன்ற இடங்களில் பயிராக்கலாம்.

தென்மேற்குப் பருவக் காற்றுத்தான் பம்பாய் மாகாணத்தில் மிகுந்த மழையைப் பொழிவிக்கிறது. ஆகையால் அங்கு கோடைகாலப் பயிரே முக்கியமாக பயிராக்கப்படுகிறது. ஆனால் சென்னை மாகாணத்திற்குக் கார்காலத்தில் வடகிழக்குப் பருவக் காற்று வீசி மழையைப் பொழிவிக்கிறது. ஆகவே இங்கு கார் காலப் பயிரே பிரதானமாயுள்ளது. வடஇந்தியாவில் தென் மேற்குப் பருவக்காற்றினால் உண்டாகும் மழை பலதரப்பட்டக் கோடைக்காலப் பயிருக்கு வேண்டிய வசதியளிக்கிறது. மேலும் அந்நாட்டினுடைய சீதோஷ்ணஸ்திதி கார்காலப் பயிருக்கு ஏற்றதாகவுமுள்ளது.

பயிர்களின் பகுப்பு

இந்தியாவிலுள்ள பயிர்களைப் பலவிதமாகப் பகுக்கலாம். தானியங்கள், பருப்புவகைகள், எண்ணெய் விதைகள், நார்ச் செடிகள், சாயம், மருந்துவகை, வாசனைத்திரவியங்கள், மரக்கறி வகைகள், கீரை, பழவர்க்கம், கால்நடை உணவு, கிழங்கு, கரும்பு, இன்னும் நானுவிதப் பயிர்கள் எனப் பலவகைகளாகப் பிரிக்கலாம். பல பயிர்கள் இப்பகுப்பில் அடங்கினுலும் சில பயிர்கள் இப்பகுப்பில் அடங்கா. எனவே இந்தப் பகுப்பை மிகப் பொருத்தம் எனக் கூறுவதற்கில்லை.

நெல்

சாகுபடி செய்யப்படும் பூமியில் 100க்கு 80 வீதம் உணவு உற்பத்திக்கே பயன்படுத்தப் படுகிறது. நல்ல மழையுள்ள பிரதேசங்களிலேயே நெற்பயிர் செய்யப்படுகிறது. எடுத்துக் காட்டாகக் கூறினுல் மேற்கு வங்காளம், அஸ்ஸாம் முதலிய பிரதேசங்களும், சென்னை, பம்பாய் முதலிய கடற்கரைப் பிரதேசங்களும் ஏற்றவைகளாகும். மேற்கு வங்காளத்தில் மட்டும் நெல் கிருஷி மிகப் பிரதானப் பயிராக இருந்தாலுங்கூட இந்தியாவில் மொத்த சாகுபடி நிலத்தில் 1949–50ல் 31 சதவிகிதம் நெற் பயிருக்கு உபயோகப்படுத்தப்பட்டது.

நெற் பயிரில் எண்ணற்ற வேறுபாடுகள் உள்ளன. மேற்கு வங்காளத்தில் முந்திய பயிர் (Aus) பிந்திய பயிர் (Aman) என இரண்டு முக்கிய பிரிவுகள் உண்டு. முந்தியபயிருக்குப் பிந்திய பயிரைப்போன்று ஏராளமாக மழை தேவையில்லை. ஆனுல் முந்திய பயிரிலுள்ள அரிசியானது மென்மையாக இராது. கட்டியாக இருப்பதால் ஏழை மக்களால் மட்டுமே உபயோகப் படுத்தப் படுகிறது. ஆனுல் நாட்டில் பஞ்சம் தலைவிரித்தாடும் போதும், மழை மக்களை ஏமாற்றும் போதும், இதுவே மக்களை காப்பதாகும். வங்காளத்தில் சிற்சில மாவட்டங்களில் போரோ (Boro) என்ற மற்ருெரு விதப் பயிரும் விளைவிக்கின்றனர். 1936-37ல் இந்தியாவில் 845 லக்ஷம் ஏக்கரா நிலத்தில் நெற்

கிருஷி செய்து 330 லக்ஷம் டன் அரிசி உற்பத்தி செய்யப் பட்டது. இந்திய பாக்கிஸ்தான் பிரிவினை நெற்பயிர் செய்யும் நிலத்தையும் அதன் விளைவையும் குறைத்து விட்டது. தற் பொழுது மொத்தம் நெற்பயிர் செய்யப்படும் நிலம் 616 லக்ஷம் ஏக்கரென்றும் மொத்த விளைவு சுமார் 20 லட்சம் டன்கள் அரிசி என்றும் கணக்கிடப் பட்டிருக்கிறது. இந்தியாவில் ஏக்கருக்கு 684 பவுண்டு அரிசி உற்பத்தி செய்கின்றனர். வங்காளம், குடகு போன்ற இடங்களில் உற்பத்தியைக் கண்ணுற்றால் முறையே 652 பவுண்டு அரிசியும், 1622 பவுண்டு அரிசியும் விளைவிக்கப் படுகிறது. சென்னை பம்பாய் மாகாணங் களிலும் நெற்கிருஷி அதிக உன்னத நிலையை அடைந் துள்ளது. உத்தரப் பிரதேசம், பீகார் போன்ற மாகாணங் களில் நீர்கசிவான பிரதேசத்திலும் நீர்ப்பாசன வசதி கொண்டு நெற் கிருஷி செய்கின்றனர். நதிமுக சதுப்பு நிலங்களில் நெற்பயிரே மிக மேம்பட்ட பயிராக இருக்கிறது.

கோதுமை

உத்தர பிரதேசம், கிழக்கு பஞ்சாப், பீகார், மத்திய மாகாணம், ராஜபுதனம் போன்ற இடங்களே கோதுமை உற்பத்திக்கு பெயர் பெற்றவைகள். கோதுமைப் பயிருக்குத் தேவையான பருவ நிலை நெற்பயிருக்குப் போன்றல்லாது நேர் மாறாக உள்ளது. ஆகையால் நெற்பயிர் செய்யும் இடங்கள் கோதுமைப் பயிருக்கு ஏற்றனவல்ல. கோதுமை கார்காலப் பயிராக இருப்பதால் அது உற்பத்தி செய்யப்படும் இடங்களி லெல்லாம் நீர்ப்பாசனம் செய்யப்படுகிறது. கால்வாய் நீர், நீர்ப்பாசன வசதி அதிகரிக்க கோதுமைப் பயிர் செய்யப்படும் நிலத்தின் பரப்பளவும் பெருகியது.

கழிந்த நூற்றாண்டின் இறுதியில் கோதுமைப் பயிர் செய்யப்பட்ட இடத்தின் அளவு 225 லக்ஷம் ஏக்கரேயாம் ஆனால் 1936-37ல் அப்பரப்பளவு 3 கோடியே 52 லக்ஷம். 25 ஆயிரம் ஏக்கர் வரையிலும் விரிவடைந்து விட்டது. அவ்வாண்டு 98 லக்ஷம் டன் கோதுமை உற்பத்தி செய்யப் பட்டதெனக்

குறிக்கப் பட்டுள்ளது. இந்தியா பாகிஸ்தான் பிரிவினை கோதுமை கிருஷியை மட்டும் விட்டு விடவில்லை. நெல் கிருஷியைப் போன்று கோதுமை கிருஷியும் பிரிவினையால் பாதிக்கப் பட்டது. தற்பொழுது கோதுமை கிருஷி செய்யப்படும் இடத்தின் அளவு 223 லக்ஷம் ஏகராக்கள். இதிலிருந்து 54 லக்ஷம் டன் கோதுமை உற்பத்திசெய்யப்படுகிறது. கோதுமை உற்பத்தியில் அமெரிக்க ஐக்கிய மாகாணங்கள் (U. S. A.) ரஷ்யா (U. S. S. R.) கனடா, அர்ஜன்டீனு போன்ற நாடுகளுக்கு அடுத்த படியாக இந்திய கோதுமை ஏற்றுமதியில் முதன்மை பெற்றுள்ளது. நம் நாட்டுக் கோதுமை முன்னுளில் கீழ்த்தரமாகக் கருதப்பட்டது. ஆனுல் சூடுமிதித்து செம்மைப் படுத்துவதில் செய்த திருத்தங்களும், விவசாய இலாகா செய்த நெற்பயிர் ஆராய்ச்சியும் நல்லதொரு சீர்பெற்ற விளைச்சலை உண்டு பண்ண உதவியாயிருந்தன.

பார்லியும் ஓட்சும் (Barley and Oats)

பார்லி இந்தியாவில் சிறிதளவே பயிர் செய்யப்பட்டு வருகிறது. இதை அதிகமாக உற்பத்தி செய்யும் இடம் உத்தரப் பிரதேசம் எனக் கூறலாம். பார்லி மக்களுக்குமின்றி மிருகங்களுக்கும் உணவுப் பொருளாக உதவுகிறது. ஓட்சு (Oats) உற்பத்தியை இந்தியாவில் பிரதானமாகக் கூற இயலாது.

சோளம் (Maize)

பொதுவாக இந்தியாவில் பெரும்பாலான இடங்களில் சோளம் பயிர் செய்கிருர்கள். உத்தரபிரதேசத்தில் சோளம் ஒரு பிரதான உணவாக கருதப்பட்டு வருகிறது.

தினை (Millet)

இந்தியாவில் எல்லா இடங்களிலும் ஏராளமாகக் தினை உற்பத்தி செய்கிருர்கள். தினையில் பலவகைகள் உண்டு.

அவைகளில் ஜுவார் (Juar) பசராப் (Bajra) ராகி ஜுவாற் (Ragi Juar) என்பவை முக்கியப் பிரிவுகள். ராகி ஜுவார் என்பவை தென்னிந்தியாவில் நிலைபெற்ற புன்செய் தானியமாகக் கருதப்படுகிறது. தினையை கால்நடை உணவாகவும் பயிர் செய்து வருகிறார்கள்.

பக் வீட் (Buck Wheat)

பக் வீட் என்பது தானிய வகைகளில் ஒன்றாகும். இது நல்லதொரு உணவாக உதவுகிறது. டார்ஜிலிங் மலைகளிலும், மத்திய மாகாணம், பீகார் போன்ற இடங்களிலும் பக்வீட் அதிகமாக உற்பத்தி செய்கிறார்கள்.

பலவித பருப்பு வகைள்

தானியங்களுக்கு அடுத்த படியாக முக்கிய உணவுப் பொருளாக முக்கியத்துவம் பெறுவன பருப்பு வகைகளே. இந்தியாவில் பலதரப்பட்ட நவதானியங்கள் (Pulses) பயிர் செய்யப்படுகின்றன. உத்தர பிரதேசம், பீகார் போன்ற இடங்களில் இப்பயிர் அதிகமாகப் பயிர் செய்யப்பட்டு வருகிறது. மேற்கு வங்காளத்திலும் இக்கிருஷி நல்ல முறையில் வளம் பெற்றுள்ளது. ஆனால் அம்மாகாணத்தின் நதி முகத்தில் உப்பு அதிகமாக கலந்திருப்பது இப்பயிருக்கு தீமை விளைவிப்பதால் உற்பத்திப் பொருள்கள் நல்ல சீர் பெற்றனவாயில்லை. பருப்பு வகைகளில் சிலவற்றை கால்நடை உணவாகவும் பயன் படுத்தி வருகிறார்கள்.

எண்ணெய் விதைகள் (Oil Seeds)

இந்தியாவில் பெரும்பாலும் எல்லா இடங்களிலும் எண்ணெய் விதைகள் பிரதானப் பயிராகக் கருதப்பட்டு வருகின்றன. மொத்த சாகுபடி நிலத்தில் 10 சதவிகிதம் எண்ணெய் விதைகள் பயிர் செய்து வருடத்தில் 50 லக்ஷம் டன் எண்ணெய் விதைகள் உற்பத்தி செய்கிறார்கள். இவ்

விதைகளில் பலவித முண்டு. இவைகளில் கடுகு, ஆளி விதை, ஆமணக்கு, வேர்க்கடலே போன்றவைகளே மிக முக்கியமான வைகள். பருத்தி விதை, பழ வர்க்கம், பூவினங்கள், தேங்காய், மாகுவா (Mahva) என்ெருரு செம்மரம் போன்ற வஸ்துக்களி லிருந்தும் எண்ணெய் எடுக்கப்படுகிறது. கழிந்த ஆண்டுகளில் வேர்க்கடலேயும், தேங்காயும் அதிக ஏற்றுமதிப் பொருளாக இருக்கவே அவைகள் வளர்ச்சிக்கு அரசாங்கம் ஆக்கம் அளித்து உதவியுள்ளது. எரி (Eri) என்ற பட்டுப் புழுவின் வளர்ச்சிக்கு ஆமணக்குச் செடி உதவியளிப்பதால் ஆமணக்கு விதையும் முக்கியத்துவம் அடைந்துள்ளது.

ஆளி விதையும், அதன் எண்ணெய்யும் இந்திய ஏற்றுமதிப் பொருள்களில் முக்கிய இடம் பெற்று வருகிறது. எண்ணெய் விதைகளில் எல்லேயற்ற ஏற்றுமதி நாட்டிற்கு மாபெரும் நஷ்டத்தை விளேவித்ததன்றி வேறில்லே. ஆகையால் எண்ணெயை மட்டும் வெளி நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து விட்டு அதன் பிண்ணுக்கைக் கால்நடைகளுக்கு உணவாகவோ அன்றி நிலத்திற்கு உரமாகவோ உபயோகித்தால் மிகவும் சரியான முறையாகும். ஆனல் நமது விவசாயிகள் நிலத்தை வளப்படுத்த உரத்திற்குத் திண்டாடும்போது, அளவிடற்கரிய எண்ணெய்ப் பிண்ணுக்கு நம் நாட்டினின்றும் ஏற்றுமதி செய்யப்படுகிறது.

சணல் (Jute)

நர் எனக் கருதும் பயிர்களில் சணலும் பருத்தியும் மிக முக்கியமானவைகள். பிரிவினேக்கு முன் உலகில் வங்காளம் சணலில் ஏகபோக உரிமை பெற்றிருந்தது. பின் பிரிவினேயின் விளேவால் சணல் மிகுதியாக உற்பத்தி செய்யும் முக்கிய மாவட்டங்கள் கிழக்கு பாக்கிஸ்தான் கையில் ஆகியது. ஆதலால் நமது சர்க்கார் சணல் உற்பத்தி செய்யும் பரப் பளவைப் பெருக்கவும், உற்பத்தியைக் கூட்டவும் மிகவும் முயற்சி எடுத்து வருகிறது. மிகவும் குறைந்த அளவில் பீகார், ஒரிஸ்ஸா, அஸ்ஸாம், சென்னே போன்ற இடங்களிலும் சணல்

உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றது. கார் காலங்களில் நீர் புரண்டோடும் நிலங்களே சணல் உற்பத்திக்கு மிகவும் ஏற்றனவாக உள்ளன. நெற்பயிருக்குத் தேவையான பருவ நிலையும் தன்மையும், ஏகதேசம் சணல் உற்பத்திக்கும் பொருத் தமாயிருக்கும். ஆகவே முன் நெற்பயிர் செய்த பல இடங்களில் இப்போது சணல் உற்பத்தி செய்கிறார்கள்.

வங்காள விவசாயிகளுக்கு வெகு நாட்களுக்கு முன் னிருந்தே பொற்காசுகளை அள்ளிக் கொடுக்கும் அரும்பொரு ளாகச் சணல் இருந்து வருகிறது.

சணல் முதன் முதல் ஏற்றுமதிப்பொருளாக 1828-ல் வெளி நாடுகளுக்கு அனுப்பப்பட்டது. 1948-49 இந்தியாவில் $21\frac{1}{2}$ லக்ஷம் பேல்கள் சணல் உற்பத்தி செய்தனர். ஆனால் 1949-50-ல் 29 லக்ஷம் பேல்கள் வரையிலும் உற்பத்தியைப் பெருக்கினார்கள். சணலில் செய்யப்பட்ட பொருள்கள் ஏராளமாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்திய ஏற்றுமதி யில் நல்லதொரு சதவிகிதம் சணலினால் ஆக்கப்பட்ட பொருள் களாம். பாரெங்கும் நமது ஏற்றுமதிப் பொருள்கள் செல்கின் றன. ஆனால் நமது முற்றுப்பெறாத சணலை அதிகமாக வாங்கிக்கொள்வது ஐக்கிய அரசாங்கமே (U. S. A.)

சணல் உபயோகித்து வரும் பல நாடுகளில் பலனளிக்கும் பதிலீடுகள் புதியனவாகக் கண்டுபிடிக்க முடியுமா என்ற முயற்சி நடந்து வந்தது. தற்பொழுதும் நடந்து வருகிறது. மல்டிவால் பேப்பர் பைகள் (Multiwall Paper Bags) சிஸல் (Sisal) மணிலா ஹெம்ப் (Manilla hemp) சன் ஹெம்ப் (Sun-hemp) அலோ-நார் (Aloe-fibre) மெஸ்டாபாட் (Mesta-pat) ரோஸல்லா நார் போன்ற சாதனங்களில் சணல் பதிலீட்டைப் பற்றிய பரீட்சை செய்தார்கள். மத்திய அமெரிக்கா விலும், மற்றும் சில இடங்களிலும் சணல் உற்பத்திக்கு வேண்டிய முயற்சி செய்து வருகிறார்கள். மூட்டைகட்டும் சாதனமின்றி பொருட்களைப் பெரிய அளவாகக் கையாளும் முறை பல இடங்களிலும் பரந்து வருகிறது. இவைகளே

நமது சணல் ஏற்றுமதிக்கு அபாய அறிகுறியாகலாம். இது வரையிலும் இம்மாதிரியான முயற்சிகள் ஒன்றும் சணல் வியாபாரத்தை எண்ணிப் பார்க்கும் மளவில் பாதித்து விடவில்லை. புது மாதிரியான உபயோகங்களைச் சணலுக்கு உள்நாட்டில் உண்டு பண்ணப் பெருமுயற்சி செய்யப் படவேண்டும். இதனால் அபாயம் வராமல் தடை செய்யலாம். இதுவே விரும்பத்தக்கதுமாகும்.

சணல் வகையைச் சேர்ந்த நார்வகைப் பயிர்களில் இன்னும் ஒரு சில முக்கியமானவைகள் உண்டு. அவைகளில் பாம்பே-ஹெம்ப் (Bombay Hemp) எனப்படும் (Mesta Pat) மெஸ்டா-பாட், ரீயா (Rhea) என்பவைகள் கவனிக்கத்தக்கவை. சணலையும், சன்ஹெம்பையும் (Sunhemp)விட, பாம்பே-ஹெம்ப் மிகவும் உயர்வானது என சிலர் கருதுகின்றனர். வருங்காலத்தில் இப்பயிர்கள் வளம்பெற்று வளர்ச்சியடைய இப்பொழுது பெருமுயற்சி செய்யப்பட்டு வருகிறது. அலோ-பைபர் (Aloe-fibre) என்ற ஒருவகை நார் பயிர்ப் பொருளாதார ரீதியில் மிகவும் பயனளிப்பவை. இவை உஷ்ண மண்டலத்திலுள்ள நாடுகளிலும் (Tropical) மிதமண்டலத்திலுள்ள நாடுகளிலும் (Sub Tropical) தான் அதிகமாகப் பயிராகிறது.

பருத்தி (Cotton)

இந்தியாவில் உற்பத்தி செய்யப்படும் விளைவுப் பொருட்களில், பருத்தி மிகவும் முக்கியமானது. சணல் வளர்ச்சியைப் பங்கம் செய்த இந்திய பாக்கிஸ்தான் பிரிவினை, பருத்தியை மட்டும் விட்டு விடவில்லை. பிரிவினையின் விளைவாகப் பருத்தி உற்பத்தி செய்யப்படும் நிலப்பரப்பும் விளைவும் மிகக்குன்றின. தற்பொழுது பருத்தி சாகுபடி செய்யப்படும் மொத்தம் ஏகராக்கள் 106 லக்ஷம் என்றும், இதிலிருந்து உற்பத்தி செய்யப்படும் விளைவின் அளவு 2862000 பேல்கள் என்றும் கணக்கிடப் பட்டுள்ளன. இந்தியாவில் பெரும்பாலும் எல்லாப் பாகங்களிலும் பருத்தி உற்பத்தி செய்யலாம். தக்காண மலைப் பிரதேசம், மத்திய மாகாணப் பள்ளத்தாக்கு, குஜராத், கத்தியவார் பள்ளத்தாக்கு, மதுரை, திருநெல்வேலி, சென்னையிலுள்ள விட்டுக்

கொடுக்கப்பட்ட ஜில்லாக்கள், (கடப்பை, அனந்தப்பூர், கர்னூல், பெல்லாரி) பீகார் போன்றவைகள் பருத்தி உற்பத்தி செய்யப் படும் பிரதான இடங்கள். இப்பயிரைப் பருத்தி மரம், பருத்திச் செடி என இருவகைகளாகப் பிரிக்கலாம். இவ்விரு பிரிவிலும், பருத்தி விளையும் கரிசில் தக்காணத்தில் பல மாதிரிகளும், பல வினங்களுமுண்டு. பருத்தி உற்பத்திக்கு மிகவும் பக்குவமான தாக உள்ளது. நம் நாட்டுப்பருத்தி தரத்திலும், உற்பத்தியி லும் அமெரிக்க ஐக்கிய மாகாணங் (U. S. A.) களின் பருத்தியி லிருந்து மிகவும் கீழடைந்திருகிறது. கிழக்குப் பஞ்சாப்பில் அமெரிக்கப் பருத்தியைக் கொண்டு பயிர் செய்து பரீக்ஷை பார்த்ததில் அப்பூமியின் சீதோஷ்ணத்திற் கிணங்க புதிய தொரு பயிர் பருவமடைந்தது. தற்பொழுது அம்மாதிரி பயிரை கால்வாய்க் குடியேற்றுப் பிரதேசங்களில் சாகுபடி செய்து வருகிறுர்கள். சென்னை ராஜ்யத்திலுள்ள செம்மண் பூமியில், கம்போடியா (Cambodia) அல்லது திருநெல்வேலி (Tinnevelly) என்கிற ஒருவகைப் பருத்தி செழுமையாக வளர்கிறது. இப்பருத்தியை விதை எடுத்துப் பக்குவம் செய்வதிலும், இதன் தன்மையிலும் உற்றுப்பார்க்கும் பொழுது இது அமெரிக்கப் பருத்தியைவிட மிகவும் மேலானதாகக் காணப்படுகிறது. பருத்தி உற்பத்தி இன்னும் வளர்ச்சியடையத் தகுதியுடைத்து என்று மேதாவிகள் கருதுகின்றனர். மேலும் உணவு உற்பத்திப் பெருக்கில் ஈடுபடாமல் பருத்தி விளைச்சலை இரு மடங்காக்கலாம் என்று அவர்கள் அபிப்பிராயம் கொள் கின்றனர்.

சுதேச பருத்தி உற்பத்தியில் நீர்ப்பாசன மற்ற இடத்தி லுள்ள விவசாயிகள் அதிக இலாபமடைந்தாலுங்கூட, செழுமை யான நீள் இழைப் பருத்தி (Long Staple) பருத்தி உற்பத்தி கிழக்குப் பஞ்சாப், குஜராத், தெற்குச் சென்னை, மத்திய மாகாணம் போன்ற இடங்களுக்கு அதிக அனுகூலமாக யிருக் கிறது. பிரிவினையால் மேற்குப் பஞ்சாப் சிந்து போன்ற இடங் கள், பாக்கிஸ்தானுக்கு உரிமையாயின. அதனுல் நீள் இழை பருத்தி இந்தியாவுக்குப் போதிய அளவில்லாமல் குறைய ஆரம்பித்தது. இப்பொருளுக்கு அதிக மகத்துவமிருப்பதால், மக்களும், மக்களை ஆளும் அரசாங்கமும், மகத்தான முயற்சி

எடுத்து இந்திய நாட்டைப் பருத்தியில் சுயதேவைப் பூர்த்தியுள்ள நாடாகச் செய்யவேண்டியது மிக மிக அவசியமாகும். இன்னும் 8 லக்ஷம் பேல்கள் பருத்தி அதிகமாக உற்பத்தி செய்வதற்காக இந்திய அரசாங்கம் "அதிக பருத்தி உற்பத்திப் போராட்டம்" (Grow more Cotton Campaign) என்ற தலைப்பில் லக்ஷக்கணக்கான ரூபாய் செலவிடுகிறது. மேலும் பருத்தி உற்பத்தியில் அரசாங்கம் விதித்திருக்கும் எல்லாத் தடைகளையும் எடுத்துவிட வேண்டுமென்றும் முடிவு செய்திருக்கின்றனர். நீர்ப்பாசனம், சீர்பெற்ற விதைகள், உரம் போன்ற வஸ்துக்கள் வசதியாகப் பெற வேண்டிய சலுகைகள் செய்து கொடுக்க வேண்டுமென்று மாகாணச் சர்க்கார் கேட்டுக்கொள்ளப்பட் டிருக்கிறது. வேர்க்கடலையும் பருத்தியும், சேர்த்துப் பயிர் செய்யும் முறைக்கு ஆக்கம் கொடுத்து ஊக்கமூட்ட வேண்டும்.

வெளிநாடுகளிலிருந்து இந்தியா மிகுதியாகப் பருத்தி இறக்குமதி செய்தாலும், உள் நாட்டிலுள்ள மொத்தப் பருத்தியில் 11 சதவிகிதம் பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்கிறதென்பது கவனிக்கத்தக்கது.

சைமல் – அக் (Simul and ak)

சைமல் அல்லது சில்க் பருத்தி மரம் சாதாரண அக் (ak) மரத்தைப்போன்று மணல் பிரதேசங்களில் செழிப்பாக வளர்கிறது. இது கொடுத்துதவும் மெல்லிய சில்க் நூலே மிருதுவான விலை உயர்ந்த பட்டு ஆடை செய்ய உபயோகிக்கப்படுகிறது.

நீலம் (Indigo)

நீலம் ஒரு காலத்தில் இந்தியாவில் ஒரு முக்கிய பயிராக இருந்தது. அனிலின் சாயம் (Auiline dyes) உபயோகத்தில் வந்ததிலிருந்து நீலத்தின் மகத்துவம் குறைய ஆரம்பித்து விட்டது. வங்காளத்தில் இப்பொழுது நீலம் உற்பத்தி செய்வது கிடையாது. ஆனால் பீகார், உத்திரப்பிரதேசம் போன்ற இடங்களில் இன்னும் சிறிது நீலம் உற்பத்தி செய்து

வருகிறார்கள். இரசாயனச் சாயம் (Chemical dyes) நீலத்திலிருந்தும், கந்த மூலாதி சாயத்திலிருந்தும் மிக மட்டரகமாகத்தா னிருக்கிறது. அவுரியை வளப்படுத்தி புத்துயிர் கொடுத்துப் புதுவாழ்வளிப்பது முடியாத காரியமன்று.

கசகசாச் செடி (Poppy)

கசகசாச் செடி கார்காலப் பயிராகும். இச் செடி பீகாரிலும், உத்திரப்பிரதேசத்தில் கங்கை நதிக்கு வடக்கே உள்ள ஜில்லாக்களிலும் பயிர் செய்யப்பட்டு வருகிறது. மேலும், இராஜபுதனம், மத்திய இந்தியாபோன்ற சுதேச ராஜ்யங்களிலும் இச் செடியைப் பயிர் செய்கிறார்கள். இந்தியாவில் அரசாங்கத்தின் நிமித்தமும், சீனா உடன்படிக்கையை அனுசரித்தும் தான் இச் செடி பயிர் செய்யப்படுகின்றதாம். இது பயிர் செய்யப்பட்டு வந்த பூமியின் பரப்பளவு இப்பொழுது மிகவும் குறைந்து வருகிறது.

புகையிலை (Tobacco)

இந்தியா மொத்தத்தில் ஏராளமான புகையிலை உற்பத்தி செய்கிறது. இப் புகையிலையை இந்தியாவில் பல ஜில்லாக்களில் பயிர் செய்கிறார்கள். முக்கியமாகப் பயிர் செய்யுமிடங்கள் பீகாரிலும், சென்னையில் சில மாவட்டங்கள் எனலாம்.

தேயிலை (Tea)

அஸ்ஸாம், மேற்கு வங்காளத்தில் ஜால்பாய்குறி (Jalpaiguri) ஜில்லாக்கள், டார்ஜலிங் (Darjeling) சென்னையிலுள்ள நீலகிரி, உத்தர பிரதேசத்தின் டேராடூன் (Dehra Dun), மேற்கு பஞ்சாப்பிலுள்ள கங்கராப் பள்ளத்தாக்குப் போன்ற ஸ்தலங்கள் தேயிலை உற்பத்தியில் பிரதானம் பெற்றவைகள். தேயிலைப் பயிருக்கென எடுக்கப்பட்டிருக்கும் மொத்த நிலம் ($7\frac{3}{4}$) லக்ஷம் ஏக்கராக்கள் என்றும், மொத்தத் தேயிலை உற்பத்தி 56 கோடி ராத்தல் என்றும் கணக்கெடுக்கப்பட்டுள்ளது.

மொத்த உற்பத்தியில் 70 சதவிகிதத் தேயிலை வெளிநாடு களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. மேலும் கூறினல் தேயிலை ஏற்றுமதி இன்னும் அதிகமாக வளர்ச்சி யடையும் நிலையில் தானுள்ளது. நமது தேயிலை ஏற்றுமதியைப் பூரண திருப்தி யுடன் மிகுதியாக வரவேற்கும் நாடு ஐக்கிய அரசாங்கமே யாகும் (U. S.). ஐக்கிய அரசாங்கத்தார் நமது தேயிலை ஏற்று மதியில் 80% சதவிகிதத்தையும் பரிபூரணமாக ஏற்றுக் கொள் கின்றனர்.

ஒழுங்கு கட்டுப்பாடு (Restriction Scheme)

சர்வதேச தேயிலை ஒப்பந்தத்தின்கீழ் ஒழுங்கும் கட்டுப் பாடும் இருக்க வேண்டுமென்ருெரு புத்தம் புதியமுறை சில ஆண்டுகளுக்கு முன்னிருந்து கையாளப்பட்டு வருகிறது. 1933ல் நடந்த தேயிலை ஒப்பந்தத்திற்கு முன்பு, தேயிலை அதிக உற்பத்தியினுல் மிதமிஞ்சிக் கிடந்தது. இதன் காரணமாக மட்டற்ற கையிருப்பு உண்டாகி விலைவாசி மிவுகம் குறைந்தது மட்டுமின்றி குறைந்து கொண்டேயுமிருந்தது. மேலும் 1929-33ல் ஏற்பட்ட விலைவாசி குறைவினுல் (Depression) ஏற்பட்ட அவல நிலையைச் சமாளிக்க தேயிலை உற்பத்தி செய்யும் முக்கிய நாடுகள் ஒன்றுகூடி, தேயிலை உற்பத்தியையும் ஏற்றுமதியையும் கட்டுப்படுத்த திட்டம் வகுத்தன. இதில் பங்கெடுத்த நாட்டினர், தங்கள் நாட்டு ஏற்றுமதியை மிதப்படுத்திய தோடல்லாமல், உற்பத்தி செய்யும் இடத்தின் பெருக்கத்தையும் தடைபண்ணினர். இந் நடவடிக்கைகள் பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்டிருந்த விலைவாசிகளை வெகு சீக்கிரத்தில் உயர்த்தப் பேருதவி புரிந்தன. 1933ல் உருப்பெற்ற தேயிலை உடன்படிக்கையை 1938, 43, 48ல் சிற்சில மாறுதல்களுடன் புதுப்பித்தார்கள். கடைசி ஒப்பந்தம் 1950 மார்ச்சு மாதத்தோடு காலாவதியடைந்தது, ஆனல் சர்வதேச தேயிலைக் குழுவினர் (International Tea Commission) அவ்வுடன்படிக்கையை 1955 மார்ச்சு மாதம் வரையிலும் நீடிக்க வேண்டுமென்று பிரஸ்தாபித்தனர். அக்கருத்தைப் பற்றி இந்திய பார்லிமென்ட் (Indian Parliament) அலசி ஆராய்ந்துவருகிறது.

தேயிலைச் சந்தை வளர்ச்சி சங்கம்

(Tea Market Expansion Board)

இச்சங்கம் இந்தியத் தேயிலையின் உபயோகத்தைப் பெருக்கப் பெருமுயற்சி செய்து வருகிறது. அண்மையில் மதுவிலக்குச் சட்டம் மதராஸில் நடைமுறைக்கு வந்ததால் இச் சங்கத்திற்கு இந்தியச் சந்தையில் பெருவாரி தேயிலை விற்பனை செய்யத்தக்கதொரு தருணம் வாய்த்தது.

3. காப்பி (Coffee)

இந்தியாவின் தென்பாகத்தில் மட்டுமே காப்பி உற்பத்தி செய்கின்றனர். பிரஸீல் (Brazil) இலங்கை (Ceylon) போன்ற நாடுகளிலிருந்து வரும் பெரும் போட்டியை இந்திய காப்பி எதிர்த்து நிற்க வேண்டியிருக்கிறது. 1947–48ல் 340 லக்ஷம் டன் காப்பி இந்தியாவில் உற்பத்தி செய்தனர். காப்பி செஸ் ஆக்ட் 1935ல் உருப்பெற்றது. காப்பி விற்பனையை அதிகப் படுத்த ஒரு குழு ஸ்தாபிக்க வேண்டுமென்று அச்சட்டம் கூறியது. பின் 1942ல் வெளிவந்த "காப்பி விற்பனைப் பெருக்குச் சட்டம் (Coffee Market Expansion Act) என்றொறு சட்டத்தின்படி காப்பி ஏற்றுமதியையும் விற்பனையையும் ஒழுங்குபடுத்த இந்திய காப்பி போர்ட்டு என்று ஒரு சங்கம் நிறுவப்பட்டது. வெளிநாட்டுடன் வியாபாரத் தொடர்பு கொள்ள இச்சங்கம் பெருமுயற்சி செய்து வருகிறது.

கொய்னு (Cinchona)

கொய்னு இந்தியாவில் ஏராளமாகப் பயிர் செய்யப்படவில்லை. நம் நாட்டுக் கொய்னு உற்பத்தி நமது தேவையைப் பூர்த்தி செய்யுமளவில் இல்லை. டார்ஜலிங் நீலகிரி என்ற இரண்டு இடங்களுமே கொய்னு உற்பத்திக்குப் பிரதானமானவைகள். இப்பொருள் உற்பத்தியில் அரசாங்கமே ஏகபோக உரிமை வகித்து வருகிறது. கொய்னு உற்பத்தியில் நாம் சுயதேவை பூர்த்தியில்லாதவர்களாக இருப்பதால் அதிக உற்பத்தி செய்ய உடனடி முயற்சி செய்ய வேண்டியது மிகமிக முக்கியம்.

மரக்கறி (Vegetables)

பலதரப்பட்ட காய்கறிவகைகள் இந்தியாவில் உற்பத்தி யாகின்றன. உருளைக்கிழங்கு, மரக்கறி வகைகளில் முக்கிய மானது எனக் கூறலாம். பொதுவாக நெற்பயிர், சணல் பயிர், அறுவடை செய்த பின்னரே உருளைக்கிழங்கு கிருஷி ஆரம் பிக்கப்படும். ஆனால் இக்கிழங்கைப் பிரதானப் பயிராகக் கருதும் பிராந்தியங்களில் வருடத்திற்கு ஒரே சாகுபடிதான் செய்து வருகிறார்கள். உருளைக்கிழங்கு பயிராகும் பொழுது மிகக் கவனம் செலுத்தவேண்டும். கத்தரிக்காய், கீரை, முட்டைக் கோசு, தக்காளி, முள்ளங்கி போன்றவைகளும் காய்கறி இனத்தைச் சேர்ந்தவைகளே. உருளைக்கிழங்கு போன்று தித்திப்பாக கசாவா (Cassava) என்றொரு வகைக் கிழங்கு உண்டு. இதில் செம்மையாகவும், வெண்மையாகவும், பல ரகங்கள் உண்டு. நாட்டில் பஞ்சம் தாண்டவமாடும் பொழுது இக்கிழங்கு வகைகள் முக்கிய உணவாக உதவியளிக்கும். வறட்சியை எதிர்த்து மக்களுக்கு ருசிகர உணவாக இக்கிழங்கு பயனளிக்கிறது. இக்கிழங்குகளைப் பெருவாரியாக உற்பத்தி செய்வதையும், இதுபோன்று வறட்சியையும் பஞ்சத்தையும் எதிர்த்து மக்களை மக்களாக வாழச் செய்யும் மற்றுமுள்ள பல பயிர்களையும் பஞ்சநிவாரணி என மனங்கொண்டு மக்கள் விரும்புகிறார்கள்.

பழவர்க்கங்கள் (Fruits)

உலகத்தில் வேறு எந்த இடத்திலும் இந்தியாவைப்போல் அதிகமாகப் பழவர்க்கங்களைக் காணல் முடியாது. ஆனால் இப் பழவர்க்கங்கள் பயிரிடுமுறை விஞ்ஞான ரீதியில் கையாளப் படவில்லை. புதிய ஆராய்ச்சி முறையில் பயிர் செய்தால், பழவர்க்கங்களை அதிக உற்பத்தி செய்வதுமன்றி நல்லமேலான ரகத்திலும் உண்டு பண்ணலாம். பூமியின் தன்மைக்கும் கால நிலைக்கும், தகுந்தவாறு புதுரக பழவர்க்கங்களைப் பயிரிடுவது மிக அவசியம். இந்தியா தேவைக்கு அதிகமாக உற்பத்தி செய்வதுமன்றி, மற்ற நாட்டுடன் இலாபகரமாக வியாபாரத் தொடர்பு கொள்ளவும் தகுதியுடையதாயிருக்கிறது.

சிறிது காலத்திற்குமுன் பீகாரில் சாபர் (Sabour) என்ற இடத்தில் இந்திய அரசாங்கம் பழ ஆராய்ச்சித் திட்டம் ஒன்றில் ஈடுபட்டது. ஆனால் உருப்பெற்ற முன்னேற்றம் அதில் கிடைத்தாகத் தெரியவில்லை. மாம்பழம்போன்ற மற்ற பழவர்க்கங்களும் வருங்காலத்தில் சீர்பெற்று சிறப்புறும் என்பது திண்ணம். பழவர்க்கங்களை நன்முறையில் பாதுகாத்து, தக்க போக்குவரவு வசதியுமளித்தால் இந்தியப் பழ வியாபாரம் அதிக வளர்ச்சியடைந்து வளம்பெறும் என்பதில் ஐயமில்லை.

முதல் (Capital)

இக்காலத்தில் பொருளுற்பத்திக்கு முதல் இன்றியமையாதது. பொருளாதார நூலில் முதல் என்றால் பணம் மட்டும் அல்ல ; செல்வத்தை அதிகரிக்கப் பண்ணும் தன்மையுள்ள எல்லாப் பொருள்களும், சாதனங்களும் முதலில் அடங்கியவை. மனிதனின் பொருளுற்பத்திச் சக்தி அதிகப்பட நுகரும் பொருளைத் தவிர அதிகப் பொருள் மீதமிருக்கிறது. இப்பேர்ப்பட்ட அதிகப்பொருள் மூலதனமாகிறது.

ஒரு வியாபாரியின் முதல் பின்வருமாறு விளக்கலாம்.

		ரூ. அ. பை.
1.	கையிலிருக்கும் பணம் (Cash in hand)	125-0-0
2.	பாங்கியிலிருக்கும் பணம் (Cash at Bank)	750-0-0
3.	மர சாமான்கள் (Furniture etc.)	210-0-0
4.	சரக்குக் கையிருப்பு (Stock in hand)	500-0-0
5.	வியாபாரத்தில் வரவேண்டிய பணம்	230-0-0
6.	வியாபாரத்திற் கொடுக்க வேண்டிய பணம்	450-0-0
	ஆகவே கையில் ரொக்கம்	875-0-0
	கையிருப்புச் சரக்கு முதலியன	940-0-0
	செல்லாக வேண்டிய பணம்	450-0-0

ஆகையால் வியாபாரியின் முதல் என்ன ? கணக்கு முறையில் வியாபாரியின் முதலானது அவனுக்கு வரவேண்டிய பணத்திலிருந்து கொடுக்கவேண்டிய பணத்தைக் கழிப்பதில்

வரும் மீதம் எவ்வாறு உபயோகப்படுகிறதென்பதைக் கவனிக்குமிடத்து அதை இரண்டாகப் பிரிக்கலாம் :—

(i) பல தடவை உபயோகப்படும் முதல் (Fixed Capital), நிலம்; கட்டிடங்கள், இயந்திரங்கள், ஆயுதங்கள் முதலியன.

(ii) உபயோகத்தினுல் உருமாறும் (Circulating Capital): பணம், உணவுப்பொருள் முதலியன.

ஒரு கம்பெனியின் மூலதனத்தைப் பின்வருமாறு பிரித்துக் காட்டலாம்.

(i) கம்பெனியின் சட்டப்படியுள்ள பங்குத் தொகை (Nominal Capital)

(ii) கம்பெனியின் விடப்பட்ட பங்குகள் (Issued Capital)

(iii) கம்பெனியின் பங்காளிகள் செலுத்திய பங்குத்தொகை, (Paid-up Capital)

(iv) சட்டப்படியுள்ள பங்குத்தொகைக்கும் வசூலித்த பங்குத் தொகைக்குமுள்ள வித்தியாசம் (Uncalled Capital)

(v) ரிஸர்வு பங்கு.

பெருமுதல் தேற்றம் (Growth of Capital)

தனசம்பத்துக்குரிய காரணங்களை பணத்தைச் சேமிப்பதற்குரிய வசதி, பணத்தைச் சேமிப்பதற்குரிய கருத்து என இரண்டு பகுதியாகப் பிரிக்கலாம்,

பணத்தைச் சேமிப்பதற்குரிய வசதிகள் பொருளுற்பத்தியை அதிகரிக்கக் கூடிய அம்சங்கள் எல்லாவற்றையும் பொறுத்திருக்கின்றன. முதன்மையாக ஒரு தேசத்தில் மூலாதாரங்கள் அதிகமாயிருக்கும் பட்சத்தில், அத்தேசத்தின் தனசம்பத்து விருத்தியடைய முடியும். தவிரவும் அத்தேசத்தாரின் உழைப்பும் முக்கியமாக வேண்டும். ஒரு தேசத்தின் செல்வாக்கு முறை ஒழுங்கான வழியில் நடைபெற்றுல் அது முதல் விருத்தியடைவதற்கு அனுகூல்மாயிருக்கும்.

பணத்தைச் சேமிப்பதற்குரிய கருத்தும் தனசம்பத்துக்கு ஒரு முக்கிய காரணமாயிருக்கிறது. முதன்மையாக குடும்பப் பற்றுதலுடையவர்கள் பணத்தை அதிகமாகச் சேகரிக்கின்றனர். இந்தியாவில் குடும்பப்பற்றுதல் அதிகமாக யிருப்பதால் அநேகர் தாம் சம்பாதிக்கும் பொருளைக் கூடியவரை குடும்பத்திற்காகச் சேமித்து வைப்பது சகஜமாயிருக்கிறது.

பணத்தை சேமித்துவைப்பதற்கு மக்களின் முன்னுணர்ச்சியானது ஒரு விசேஷமான காரணம். சில தேசத்தார் எதிர்காலத்தை உத்தேசித்துப் பணத்தை முன்னதாகவே சேமித்து வைக்கும் ஊக்கமற்றவராய் இருக்கின்றனர். இந்தியாவில் தனத்தைச் சேமித்து வைக்கும் ஊக்கம் அதிகமாயிருக்கிறது. ஆனால் சேமிக்கும் பணத்தைச் சடங்குகளுக்கும், மற்ற டம்பச் செலவு களுக்கும் உபயோகிக்கின்றனர். பலன் கிடைக்கக் கூடிய தொழில்களில் மூலதனத்தைச் செலவு செய்வதில்லை.

தனசம்பத்து ஏற்படுவதற்கு ஜனங்களின் வருமானத்தில் வாழ்க்கைக்கு இன்றியமையாதவை தவிர சேமித்து வைப்பதற்குரிய மீதம் இருத்தல் வேண்டும். அதிக பொருளுற்பத்தி இல்லாத தேசங்களில் ஜனங்கள் உற்பத்தி செய்யும் பொருள்கள் தம் நுகர்வுக்கு வேண்டிய அளவாய்த் தானிருக்கிறது. அப்பேர்ப்பட்ட தேசத்தாருக்கு முதலைச் சேகரிப்பது அரிது. இந்தியாவில் பெரும்பாலும் ஜனங்கள் இத்தன்மையிலிருக்கின்றனர்.

ஜனங்களின் ஆஸ்தியும், ஆயுளும் கவலையற்ற நிலைமையிலிருப்பதற்குரிய வசதிகளில்லாவிடில், தனம் சேகரிக்கும் ஊக்கம் குன்றிவிடும். உதாரணமாக இந்தியாவில் முகலாய ராஜ்யம் க்ஷீணமடைந்த காலத்தில் சண்டைகளும் சச்சரவும் எங்கும் வியாபித்திருந்ததால் ஜனங்களுக்குத் தனத்தை சேமித்து வைப்பது வெகு கடினமாயிருந்தது.

இக்காலத்தில் முன்னேற்றமடைந்த நாடுகளில் பணத்தைச் சேகரிப்பதற்குரிய வசதிகளிருக்கின்றன. பாங்குகள், இன்ஷ்யூரன்ஸ் கழகங்கள், கூட்டுறவு சங்கங்கள் இவைகளெல்லாம் தனசம்பத்துக்கு முக்கிய சாதனங்களாயிருக்கின்றன. முதலுக்குச் சரியான வட்டி கிடைக்கும் பட்சத்தில் தனசம்பத்துக்கு அதிக

ஊக்கம் ஏற்படும். இந்தியாவில் மூலதனம் அதிகமாயில்லாமலிருப்பதற்கு ஜனங்களின் வறுமையே ஒரு முக்கிய காரணம். தற்காலத்தில் இந்தியாவில் அதிக மூலதனமில்லாததால் வெளி நாட்டு மூலதனம் அநேக பிரவர்த்திகளிலும், தொழிற்சாலைகளிலும் உபயோகப்பட்டு வருகிறது. உதாரணமாக சணல் தொழிற்சாலைகளும், பஞ்சுத் தொழிற்சாலைகளும், இருப்புப் பாதைகளும், காப்பி, தேயிலைத் தோட்டங்களும் வெளி நாட்டு மூலதனத்தால் நடைபெற்று வருகின்றன. பெருவீதக் கைத் தொழில்களுக்கு வேண்டிய பெருமுதல் இந்தியர்கள் சேமித்து வைக்கும் வரை வெளி நாட்டு மூலதனத்தை உபயோகிக்க வேண்டியிருக்கிறது. வெளிநாட்டு மூலதனத்தை காரணமன்றி வெறுக்கக்கூடாது. வெளி நாட்டு மூலதனத்தால் உண்டாகும் பயன்களைக் கூடியவரை இந்தியர்கள் அடையும்படி வரையறுக்க வேண்டும். இந்தியாவிலுள்ள வெளி நாட்டு விடுமுதலைப் பொதுவாகக் கணக்கிடலாம். வெளி தேசங்களிலிருந்து இந்தியாவில் ஈடுபட்டிருக்கும் விடுமுதல் 847½ கோடி ரூபாயிலிருந்து 1,050 கோடி ரூபாய் வரை மதிக்கப்பட்டிருக்கிறது. வெளி நாடுகளுக்கு இந்தியாவிலிருந்து செல்லாக வேண்டிய கடன் தொகை பவுன் மதிப்புப்படி இரண்டாவது உலக யுத்தத்திற்கு முன்னே 363 மிலியன் பவுனுக மதிக்கப்பட்டது. கைத் தொழில்கள் சம்பந்தமாயுள்ள விடுமுதலில், அதாவது 200 மிலியன் பவுனிலிருந்து 250 மிலியன் வரையில் ஒன்றுக்குப் பாதி வியாபாரத்திலும், பொறித் தொழில்களிலுமிருக்கிறது. மேற்கண்ட மதிப்பில் ஐந்தில் ஒரு பங்கு பாங்குகளிலும், இன்ஷ்யூரன்ஸ் கம்பெனிகளிலும் அடைப்பட்டிருக்கிறது. 10% கப்பற்றொழிலிலும், இருப்புப் பாதைகளிலும் அடங்கியது. 5% தேயிலைத் தோட்டங்களிலும், சுரங்கங்களிலும் அடைபட்டிருக்கிறது. மேற்கூறிய வெளிநாட்டு முதல் அநேகமாக இங்கிலாந்திலிருந்து வந்திருக்கிறது. வடஅமெரிக்கா ஐக்கிய நாடுகளிலிருந்து வந்திருக்கும் விடுமுதல் பல மிலியன் பவுனுக மதிக்கின்றனர்.

இந்தியாவில் பொருள் ஆக்க முயற்சியில் ஈடுபடாமல் சேமித்து வைக்கப்பட்டிருக்கும் பொக்கிஷம் 500 கோடியிலிருந்து 800 கோடி ரூபாயாக மதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால்

உண்மையாக ஜனங்களின் சேமிக்கும் திறன் மிகவும் குறைவாயிருக்கிறது. விவசாயிகள் சம்பந்தப்பட்ட விஷயத்தில் நல்ல மாசூல் காலங்களிலும்கூட அதிக மீதம் கிடைப்பதில்லே. நிலச்சுவான்களின் சொத்து நிலமாகவே யிருக்கிறது. உத்தியோகங்களிலும், இதர ஜீவனோபாயங்களிலுமுள்ளவர்கள் தம்சேமிப்பை தபால் ஆபீஸ் பத்திரங்களிலும், சேமிப்பு நிதிகளிலும், கவர்ன்மெண்ட் பத்திரங்களிலும் போடுகின்றனர். உலகத்தில் உற்பத்தியாகும் தங்கத்தில் பெரும்பாகம் இந்தியாவில் அழிந்து விடுகிறதென்று ஒரு கொள்கை யிருக்கிறது. இது உண்மையான கொள்கையன்று. இந்திய பாங்கு விசாரணைச் சபையாரும் (1929) நாணய விசாரணைச் சபையாரும் இவ்விதக் கொள்கை சரியான கொள்கையில்லே யென்று எடுத்துக் கூறியிருக்கின்றனர். 1493–ம் வருடத்திலிருந்து 1924–ம் வருடம்வரை உலகத்தில் உற்பத்தியான தங்கம், வெள்ளி இவைகளில் முறையே 14%ம்– 341%–ம் இந்தியாவுக்கு ஏற்றுமாதியாயிற்று. இந்தியாவின் ஜனத்தொகை உலக ஜனத்தொகையில் ஐந்தில் ஒரு பங்காகச் சொல்லலாம். ஆகையால் இந்தியாவுக்குத் தங்கமும், வெள்ளியும் மிதமிஞ்சி ஏற்றுமதியானதாக சொல்வது சரியன்று. தவிரவும் கிட்சின் (Kitchin) என்பவர் கணக்கின்படி உலகத்தில் உற்பத்தியான தங்கத்தின் 30% ஐரோப்பா, அமெரிக்கா கண்டங்களுக்குப் போய்ச் சேர்ந்தது. இந்தியாவில் வந்து சேர்ந்த தங்கம் 44%–க்கு மேலில்லே.

சமீப காலங்களில் இந்தியாவிலுள்ள பணமானது கூட்டுறவுப் பாங்குகளிலும், மற்றும் இதர பாங்குகளிலும் விடுமுதலாக வந்து கொண்டிருக்கிறது. இவற்றை அதிகப்படுத்துவதற்குச் சேமிப்பு சங்கங்கள் ஏற்படுத்தும்படி பாங்கு விசாரணைக் கமிட்டியார் குறித்துச் சொல்லியிருக்கின்றனர். தவிரவும் உண்டியல்கள் அதிகமாக உபயோகப்படுத்தும் முறையை இந்தியர்கள் கைக்கொள்ளவேண்டும். உண்டியல் மாற்றுவதில் ஏற்படும் நிர்ப்பந்தங்களைக் கூடியவரை குறைக்க வேண்டும். விடுமுதல் சம்பந்தமாக இந்தியாவில் பொருள் அங்காடியை விருத்தியடையச் செய்யவேண்டும். இருணச்சீட்டுகள் (Debentures) கீர்த்திபெற்ற கம்பெனியாரால் வெளி

யிடப்பட்டால் அச்சீட்டுகளைப் பணமுடையவர்கள் வாங்க முடியும். ஜனனுகூல நிதிகளும் சரியான முறையில் அமைத்து நடத்துவது நடுத்தர ஜனங்களுக்கு ஒரு பெரிய அனுகூலமாயிருக்கும். சென்னை மாகாணத்தில் நிலஅடமான பாங்குகள் தாம் வெளியிடும் இருணச் சீட்டுகளால் வேண்டிய மூலதனத்தைப் பெறுகின்றன.

சேமிப்பும், செலவும் (Saving and Spending)

சேமிப்பு (Saving)	சேமிக்கப்பட்டதால் அதிகப்படுவது (Adds to)	முதல் (Capital)
முதல் (Capital)	முதலிலிருந்து கிடைப்பது (Yields)	வட்டி (Interest)
வட்டி (Interest)	வட்டியில் அதிகப்படுவது (Adds to)	வருமானம் (Income)
வருமானம் (Income)	வருமானத்திலிருந்து ஏற்படுவது (is the source of)	சேமிப்பு (Saving)

அத்தியாயம் 4

ஜனப்பரப்பு

(Distribution of Population)

உலக ஜனத்தொகையின் மதிப்பைக் கீழ்க் கண்டபடி குறிப்பிடலாம்.

உலக ஜனத் தொகை

(சர்வதேச சங்கத்தின் மதிப்பு)

		(1933) (பத்து லட்சம்)
ஐரோப்பா	...	519
வடஅமெரிக்கா	...	137
மத்தியஅமெரிக்காவும் தென்அமெரிக்காவும்	...	125
ஓஷியானியா	...	10
ஆபிரிக்கா	...	145
ஆசியா	...	1121
மொத்தம்		2057

1953ம் வருடத்தினுடன் ஒப்பிட்டால் ஜனத்தொகை அதிகரித்துக்கொண்டே வருகிறது.

ஜனங்கள் உலகம் முழுவதும் பரவியிருக்கின்றனர். ஆனல் சில இடங்களில் குறைவாயும் சில இடங்களில் நெருக்கமாயுமிருக்கிருர்கள். பொதுவாக பூமியில் வசிக்கும் ஜனங்களில் அநேகர் பூகண்டங்களின் கீழ்ப் பிரதேசங்களில் வசிக்கிருர்கள். ஜனநெருக்கமுள்ள மண்டலங்கள் பூமியின் வடபாதியிலுள்ள மிதவெப்ப நிலேயுள்ள பிரதேசங்களிற் காண்கிருேம்.

ஜன நெருக்கத்தின் காரணங்கள்

ஜனநெருக்கம் முக்கியமாக உணவின் தொகுதியைப் பொருத்திருக்கிறது. உணவுப் பொருள்கள் நிலத்திலிருந்து பொருளுற்பத்தி பண்ணும் திறனைப் பொருத்திருக்கிறது. ஆகையால் நிலங்கள் செழிப்பாயுள்ள இடங்களில் ஜன நெருக்கம் அதிகரித்துக்கொண்டே வருகிறது. விவசாயத்திற் கேற்ற நிலங்களில் செழிப்புள்ள நிலங்கள், செழிப்பில்லாத நிலங்களைவிட ஒவ்வொரு ஏக்கருக்கும் அதிக தானியத்தைக் கொடுக்கின்றன. ஆகையால் ஒரே பரப்பளவுள்ள நிலங்களில் செழிப்புள்ள நிலங்களில் ஜனநெருக்கம் அதிகப்படுகின்றது. இம் மாதிரியாகவே ஆடுகள் மேய்ப்பதற்கு வசதியுள்ள முல்லை நிலங்களில் வெள்ளாடுகள் மேயும் புல் நிலங்களைவிட அதிக ஜனங்கள் வசிக்க முடியும். ஏனென்றால் ஆடு மாடுகள் வெள்ளாடுகளைவிட அதிகப் பாலும் இறைச்சியும் தருகின்றன. ஆனால் மிகுவெப்ப மண்டலக் காடுகளில் பயிர்ப் பச்சைகள் செழிப்பாக இருந்தபோதிலும் ஜனாகாரம் குறைவாகவே இருக் கிறது. ஏனென்றால் அப்பிரதேசங்களில் உணவுப் பொருள்கள் பயிரிடமுடிவதில்லை. ஆகையால் ஜனநெருக்கம் உணவின் தொகுதியைச் சார்ந்திருக்கிறது. உதாரணமாக மீன் பிடித்து ஜீவிக்கும் ஜனங்கள் ஒடுங்கிய மிதவெப்பமுள்ள கடற்கரை களில் நெருக்கமாக வசிக்கிறார்கள். ஏனென்றால் அவ்விடங் களில் மீன்கள் செழிப்பாய்க் கிடைக்கின்றன. வேட்டையாடி ஜீவனம் பண்ணுதல் அல்லது மேய்ச்சல் பிழைப்பு இவைகளை விட விவசாயம் ஜனநெருக்கத்தை அதிகப்படுத்துகிறது. மண்ணின் செழிப்பு, பயிரின் தன்மை, சீதோஷ்ணநிலை முதலியவை ஓரிடத்தின் ஜனநெருக்கத்தை நிர்ணயிக்கின்றன. பெருவிளைவு பயிரிடுமுறையானது (Intensive Cultivation) ஆதிகாலமுதல் நதிகளின் பள்ளத்தாக்குகளில் வழங்கி வந்தது. யூப்ரடீஸ் (Euphrates), டைகிரிஸ் (Tigris), நயில் (Nile) கங்கை (Ganges) நதிகளின் பள்ளத்தாக்குகளை இதற்கு உதாரணமாக எடுத்துக் கூறலாம். இப்பிரதேசங்களில் வண்டல் சேர்ந்த மண் மழைப் பொழிவினாலாவது அல்லது நீர்ப்பாய்ச்சலினாலாவது நல்ல ஈரப்பதனும் சரியான சூரிய

வெப்பமும் பெற்றுக் கிருஷிசெய்வதற்கு முதல் தரமான நிலங்களா யிருக்கின்றன.

ஜனநெருக்கமான்து பயிரிடும் தானியத்தையும் பொறுத்திருக்கிறது. உதாரணமாக ஒருபோகப் பயிரான கோதுமை பயிராகும் பிரதேசங்களைவிட இரண்டு அல்லது மூன்று போகப் பயிரான அரிசி பயிராகும் பிரதேசங்களில் ஜன நெருக்கம் அதிகமாகக் காணப்படுகிறது. ஒருபயிரின் மாசூலைச் சரியான உரம்போட்டு நிலத்தைப் பயிரிட்டு அதிகப் படுத்த முடியும். நிலங்கள் அதிகமாயும், உரம் சொற்பமாயுமுள்ள புதிய தேசங்களில் முன் பண்படுத்திப் பயிரிட்ட நிலங்களைப் பயிரிடுவது இலாபமாயிருக்கும். இப்பேர்ப்பட்ட நடவடிக்கைகள் நாளடைவில் ஒரே நிலத்தையே ஆழப் பயிர் செய்யும் முறையையும் ஜனநெருக்கத்தையும் விளைவிக்கின்றன. சைன தேசத்திலுள்ள ஏராளமான ஜனங்களைக் காப்பாற்றுவதற்கு அத்தேசத்திலுள்ள நிலங்களில் கிடைக்கக் கூடிய உரத்தைச் சிறிதுகூட வீணுக்காமல் உபயோகித்துப் பயிரிடவேண்டியிருக்கிறது. வயல்களில் ஒரு பருவத்திற் கோதுமை அல்லது வாற் கோதுமையும், மற்றொரு பருவத்திற் புன்செய் தானியங்கள் அல்லது சோயா அவரை (Soya-Beans)யும் பயிர் செய்து வருகிருர்கள். இந்தியாவில் பயிரிடும் நிலங்களைவிட அந்நிலங்களினுல் ஜீவனோபாயம் செய்யும் ஜனங்கள் அதிகமாயிருக்கிருர்கள். ஆனுல் சாஸ்த்ர ஆராய்ச்சிகளினுல் விவசாய நிலங்களின் விளைவை அதிகரிக்க முடியும்.

நீர்ப் பாய்ச்சலும், ஜனநெருக்கமும் இயற்கையாக ஏற்படும் மழைப் பொழிவைவிட நீர்ப் பாய்ச்சலினுல் உண்டாகும் வசதிகளை நிலம் பயிரிடுவோர் இலகுவில் எதிர்பார்க்க முடியும். நீர்ப்பாய்ச்சல் வசதியினுல் அநேக வெப்பநிலையுள்ள பிரதேசங்களில் ஜனநெருக்கமுண்டா யிருக்கிறது. ஈஜிப்த் தேசத்தில் நயில் பள்ளத்தாக்கிலும் மிஸப்போடோமியாவிலும் லட்சக்கணக்கான நிலங்கள் நீர்ப் பாய்ச்சலினுல் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன. இந்தியாவில் முக்கியமாகப் பருவக்காலத்து மழையில்லாத இடங்களில் நீர்ப் பாய்ச்சலினுல் நிலங்கள் சாகுபடி செய்கிருர்கள். இந்தியாவில் பயிரிடும்

நிலங்களில் 100க்கு 15 ஏக்கர்கள் நீர்ப் பாய்ச்சலினுல் சாகுபடி யாகின்றன. அப்பேர்ப்பட்ட நிலங்களின் விஸ்தீர்ணம் 50,000,000 ஏக்கர்களாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. மேட்டூர் அணையும், சக்கர் அணையும் முக்கியமாய்க் கவனிக்கத் தக்கவை யாகும். ஏனென்றால் இப்பேற்பட்ட அணைகளினுல் நீர்ப் பாய்ச்சல் வசதி அதிகப்பட்டு ஜனங்கள் இதுவரைக் குறைவா யுள்ள இடங்களில் ஜனநெருக்கம் அதிகரித்து வருகிறது.

ஓரிடத்தில் பயிற் பொருளுற்பத்தி அதிகப்படுவதால் அவ் விடத்தில் ஜனநெருக்கமும் அதிகப்படவேணு மென்பது கட்டாயமில்லை. அநேக சிறிய வயல்களைச் சில பெரிய வயல் களாகத் திரட்டுவதால் அவைகளைப் பயிரிடுவதற்கு வேண்டிய ஜனங்கள் குறையலாம். தவிரவும் பயிரிடுவதற்கு வேண்டிய யந்திரங்களை உபயோகிப்பதால் வேலையாட்களும் சிறிது குறை யலாம். ஆனுல் அதிக விளைச்சலினுலுண்டாகும் விளைவுப் பொருள்கள் மற்ற தேசங்களுக்கு ஏற்றுமதியாவதால் அவ் விடங்களில் ஜனநெருக்கம் அதிகரிக்கின்றது.

பொறித் தொழின்மை பரவுவதால் அநேக நாட்டார் புதிய நாடுகளில் விளையும் உணவுப் பொருள்களுக்குப் போட்டி போடுகிருர்கள். ஆக்கத் தொழில் அதிகமாயுள்ள தேசங்கள் உணவுப் பொருள் சம்பந்தப்பட்டமட்டிலும் அதிக உணவுப் பொருளுற்பத்தியாகும் தேசங்களைச் சார்ந்திருக்கின்றன. இந்தியாவிலும், அமெரிக்கா ஐக்கிய நாடுகளிலும் ஜனுகாரம் அதிகப்படுவதால் அத்தேசங்களின் உணவுப் பொருள்கள் மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதியாகாமல் உள்நாட்டிலேயே செல வழிந்துகொண்டு வருகின்றன. குறைந்த கூலிக்கு விவசாயி கள் நிலத்தில் உழைப்பதால்தான் தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள் அதிகக் கூலியும், மேன்மையான வாழ்க்கை நிலையும் அடைகிருர்கள் அப்படியாகச் செய் தொழிலின் முன்னேற்றத்துக்கு விவசாயிகளே காரணமென்று சொல்லலாம்.

சீனு, ஜப்பான், இந்தியா முதலிய தேசங்களில் ஜனத் தொகை அதிகமாகப் பெருகிக்கொண்டே வருகிறது.

கனடாவிலும், அமெரிக்கா ஐக்கிய நாடுகளிலும் இன்னும் லட்சக் கணக்கான ஜனங்கள் வசிப்பதற்கு இடமிருப் பதாகக் கருதப்படுகிறது. சைபீரியாப் பிரதேசத்தில் இன்றும் 80,000,000 ஜனங்கள் வசிக்க முடியுமென்பது சிலர் கொள்கை. தென் அமெரிக்காவிலுள்ள புல்வெளிப் பிரதேசங்களில் பிளேடா நதியின் கடல்வாய் (Plata estuary) சுற்றுப்புரத்தில் அதிக ஜனங்கள் வசிக்கமுடியுமென்பது சிலர் அபிப்பிராயம். தென் ஆப்பிரிக்காவில் கேப் முதல் ரோடிஸியா வரை ஜனவாச மில்லாத நிலங்களிருக்கின்றன. கிழக்கு ஆபிரிக்காவில் 5,000 அடிகளுக்கு உயரேயுள்ள இடங்கள் ஜனவசதியுள்ளன. ஆஸ்திரேலியாவில் இன்றும் அதிக ஜனங்கள் வசிக்கமுடியு மென்று சிலர் மதிக்கின்றனர். ஆஸ்திரேலியாவின் வெப்ப நிலைப் பிரதேசங்களில் 1,500,000 ஜனங்கள் வசிக்க முடியு மென்று நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

இந்தியாவின் ஜனப் பரப்பைச் சற்றுக் கவனிப்போம். விவசாயமே முக்கியமாயுள்ள தேசமாகிய இந்தியாவில் நில அமைப்பே ஜனத்தொகையின் பரப்புக்கு முக்கியமான காரணம். இடைவிடாமல் பயிர் செய்வதற்குச் சமநிலங்கள் முக்கியம். அந்நிலங்கள் செழிப்பாயும் ஜலவடிவுக்குள்ள வசதியுள்ளதாகவும் இருக்கவேண்டும். ஹிமோத் பர்வதத்தின் சரிவுகளில் சிலர் பயிர் செய்து வருகின்றனர். ஆகிலும் மலைப் பிரதேசங்கள் பயிர்த்தொழிலுக்கு அவ்வளவு சௌகரியமில்லை. ஸிந்து, கங்கை நதிப் பிரதேசங்களில் நிலத்தை ஆழ்ந்து உழுது பயிர் செய்வதற்கு வேண்டிய வசதிகள் நன்ருய் அமைந்திருக்கின்றன. ஆகையால் அப்பிரதேசத்தில் ஜன நெருக்கம் அதிகமாக இருக்கிறது. உதாரணமாக வங்காளத்தில் ஒரு சதுர மைலுக்கு 608 ஜனங்கள் வசிக்கிருர்கள். பீஹாரில் ஒரு சதுர மைலுக்கு 409 ஜனங்கள் வசிக்கின்றனர். இந்தியாவில் நிலஅமைப்பு தவிர மழை பொழிவும் ஜனநெருக்கத்திற்கு மற்றொரு முக்கிய காரணமாகும். வருஷத்தில் 40 அங்குலத்தி லிருந்து 50 அங்குலம் வரை தவருமல் மழை பெய்யக்கூடிய பிரதேசங்கள் விவசாயத்திற்கும் அதனுல் ஜனநெருக்கத்திற்கும் காரணமாயிருக்கிறது. வங்காளத்தில் கீழ்பாகங்களில் வருஷத் திற்கு 100 அங்குலம் மழையிருப்பதால் ஒரு சதுர மைலுக்கு 625

ஜனங்கள் வசிக்கிறார்கள். ஸின்ட் (Sind) மாகாணத்தில் மழை குறைவாயிருப்பதால் அதாவது வருஷத்திற்கு 8 அங்குலம் மழையிருப்பதால் ஒரு சதுர மைலுக்கு 10 ஜனங்களுக்குமேல் இல்லை. மழை தவறாமல் பெய்யக்கூடிய இடங்களில்தான் ஜனநெருக்கம் அதிகமாயிருக்கிறது. சென்னை மாகாணத்தில் கடற்கரைப் பிரதேசங்களில் மழை தவறாமற் பெய்வதால் ஜன நெருக்கம் மற்ற இடங்களைவிட அதிகமாயிருக்கிறது. உதாரண மாக கோதாவரி ஜில்லாவில் ஒரு சதுர மைலுக்கு 518 ஜனங்களைக் காண்கிறோம். கொச்சியில் ஒரு சதுர மைலுக்கு 662 ஜனங்களும், மலபாரில் ஒரு சதுர மைலுக்கு 585 ஜனங்களும் காணப்படுகின்றன.

இந்தியாவில் ஜனநெருக்கத்திற்கு நீர்ப் பாசனம் மற்றொரு காரணம். பஞ்சாபில் கால்வாய் பாசனம் அதிகமாயுள்ள இடங்களில் ஜனநெருக்கமும் அதிகமாயிருக்கிறது. பஞ்சாபில் மழை 20 அங்குலத்திற்குக் குறைவாக உள்ள இடங்களில் ஜனநெருக்கம் நீர்ப் பாய்ச்சல் வசதியைப் பொறுத்திருக்கிறது. ஸின்ட் மாகாணத்தில் நீர்ப் பாய்ச்சல் வசதியுள்ள இடங்களில் ஒரு சதுர மைலுக்கு 225 ஜனங்கள் வசிக்கிறார்கள். இந்தியாவில் ஜனநெருக்கம் விளையும் உணவுப் பொருளையும் பொறுத்திருக்கிறது. ஆனால் நவீனப் போக்குவரவு சாதனங்கள் விருத்தியடைந்திருப்பதாலும் அநேகப் பொருள்கள் விளையுமிடமிருந்து விற்பனையாகு மிடத்திற்கு எளிதாகக் கொண்டுவர முடிவதாலும் வியாபார ஸ்தலங்கள் ஜனநெருக்க மடைகின்றன. கைத்தொழில்கள் விருத்தியடைவதால் தொழிற்சாலைகள் ஏற்படும் இடம் ஜனநெருக்கமாயுள்ளன.

ஜனநெருக்கமுள்ள இருபது தேசங்களின் புள்ளி விவரங்கள் :—

தேசம்		ஒரு சதுர மைலுக்குள்ள நபர்கள்
பெல்ஜியம்	...	704·9
இங்கிலாந்தும் வேல்ஸும்	...	700·0
நெதர்லன்ஸ்	...	674·2
ஜப்பான்	...	469·2

தேசம்		ஒரு சதுர மைலுக்குள்ள நபர்கள்
ஜெர்மனி	...	369·3
இத்தாலி	...	355·2
ஸெகோஸ்வொலேகியா	...	280·0
ஸுவிட்ஜர்லண்ட்	...	261·2
ஹங்கரி	...	250·6
போலண்டு	...	278·1
டென்மார்க்கு	...	224·6
ஆஸ்திரியா	...	208·8
போர்ச்சுகல்	...	205·7
இந்தியா	...	204·8
பிரான்ஸ்	...	197·1
யுகேஸிலேவியா	...	158·8
புல்கேரியா	...	157·0
ருமேனியா	...	153·7
கிரீஸ்	...	136·0
ஸ்பெயன்	...	126·4

மால்தஸ் வரையிட்ட ஜனத்தொகை வளர்ச்சி விதி (Malthusian Law of Population)

பதினெட்டாவது நூற்றுண்டின் கடைசியில் மால்தஸ் (Malthus) என்பவர் ஜனத்தொகை வளர்ச்சி விஷயமாக ஒரு வியாசம் எழுதினர். அவ்வியாசத்தில் ஜனத்தொகை சம்பந்தமாக ஒரு புதுக்கொள்கையை நிருபித்தார். அக்கொள்கையின் முக்கியக் கருத்துக்களைச் சுருக்கமாகக் கூறுவோம்.

(1) ஜனத்தொகையின் வளர்ச்சி பிழைப்பு வழிகளைச் சார்ந்திருக்கிறது. ஒரு தேசத்திலுள்ள ஜனத்தொகை எல்லையில்லாமல் விருத்தியடைய முடியாது. ஜனத்தொகை விருத்தியடையும் எல்லை ஜனங்கள் வாழ்வதற்கு வேண்டிய பிழைப்பு வழிகளால் கட்டுப்பட்டு வருகிறது. ஆனல் தேசத்திற்குத் தேசம் மொத்த ஜனத்தொகை வேறுபட்டு வருகிறது. அவ் வேறுபாட்டிற்குக் காரணம் பல தேசங்களிலுள்ள ஜனங்களின் வாழ்க்கை நிலையேயாம். ஒரு தேசத்து ஜனங்களின் பிழைப்புத்

திட்டம் காலத்திற்குக் காலம் மாறுபடலாம். ஆனால் கடைசியாக ஜனத்தொகையின் வளர்ச்சி குறைந்தபட்சம் வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்களைப் பொருத்திருக்கிறது.

(2) வேறு தடங்கல் ஒன்றுமில்லாவிடில் பிழைப்பு வழிகள் விருத்தியானால் ஜனத்தொகையும் விருத்தியடைகிறது. ஒரு தேசத்தை எடுத்துக்கொள்வோம். பிழைப்பு வழிகள் அதிகரித்தால் அத்தேசத்தில் இப்பொழுது வழங்கிவரும் பிழைப்புத் திட்டத்தில், முன்னைவிட இன்னும் அதிக ஜனங்களைக் காப்பாற்ற முடியும். சாதாரணமாக அனுபவத்திலிருந்து நாம் தெரிந்துகொள்வது என்னவென்றால் பிழைப்பு வழிகள் அதிகரிக்கும்கால் ஜனத்தொகையும் அதிகரிக்கின்றது.

(3) ஜனத்தொகையை அதிகரிக்கவிடாமல் பிழைப்பு வழிகளுக்குச் சமமாக இருப்பதற்குள்ள தடங்கல்களை இருவகையாகப் பிரிக்கலாம். (a) நேராக இறப்பு வீதத்தை அதிகப்படுத்தக் கூடியவை. அதாவது யுத்தங்கள், பிணிகள் முதலியன. (b) பிறப்பு வீதத்தைத் தடுக்கக்கூடிய முறைகளாவன : வயதாகி விவாஹம் செய்தல், பிறப்பைத் தடுக்கும் முறைகளை அனுசரித்தல் முதலியன.

மானிடப் பிழைப்பிற்குப் பூமியில் பொருள் உண்டாக்கும் சக்தியைக் காட்டிலும் மனிதனுடைய பிரஜோத்பத்திச் சக்தி அதிகமாக இருக்கிறது. பிழைப்புக்கு வேண்டிய பொருள்கள் சுலபமாய்க் கிடையாமல் இருப்பது ஜனத்தொகை வளர்ச்சியடையாமல் இருப்பதற்கு ஒரு சாசுவதமான தடங்கலாய் இருக்கிறது. ஆகையால் சமூகவாழ்க்கையானது துன்பத்திற்கும் ஸுகத்திற்கும் ஊசலாடிக் கொண்டிருக்கிறது. ஜனகாரம் அதிகரித்து அதற்கு வேண்டிய பிழைப்புவழிகள் குறைவதால் ஜனங்கள் பிணிகளால் பீடிக்கப்படுகின்றனர். இல்லாவிடில் யுத்தங்கள் ஏற்படுகின்றன. இதனால் அநேக ஜனங்கள் இறந்துபோய் ஜனத்தொகை குறைகின்றது. இத்தகை ஜனக்குறைவால் கொஞ்சகாலம் ஜனங்கள் இன்பநலம் அடைகின்றனர். இந்நிலையின் ஜனகாரம் மறுபடியும் பிழைப்பு வழிகளைவிட அதிகரிக்கின்றது. மறுபடியும் இன்னொரு துன்பகாலம் உண்டா

கின்றது. இன்பகாலத்தை அதிகப்படுத்தலும், துன்ப காலத்தைச் சிறிது காலம் வராமல் தடுத்தலும் சில முறைகளைப் பொருத்திருக்கிறது. அவையாவன :—

1. பொருளாக்கு முறைகளைப் பெருக்கலும் அதன் மூலமாகப் பிழைப்பு வழிகளை அதிகரித்தலும். (2) ஜனத்தொகை அதிகரிக்காமலிருப்பதற்குப் பிரஜோத்பத்தியை அடக்கி நடத்தல். வேண்டிய பொழுது கர்ப்பத் தடைசெய்து ஜன விருத்தியைக் குறைக்க வேண்டுமென்று இக்காலத்தில் சிலர் கருதுகின்றனர்.

இவ்விதமாகப் பொருள் செழிப்பானது பிழைப்பு வழிகள், ஜனத்தொகை இவ்விரண்டும் மாறும் இனத்தில் சார்பலனு யிருக்கிறது. அதாவது பிழைப்பு வழிகளுடன் நேரில் மாறு கிறது ; ஜனத்தொகை பிழைப்பு வழிகளைவிட வேகமாக வளர்ச்சியடைவதால், ஜனவளர்ச்சியை நாம் தடுக்காவிட்டால் ஜனவாழ்க்கையின் செழிப்பு குறைகிறது. இவ்விதக் கொள்கை யுடையவர்கள் பால்ய விவாஹத்தையும், பிரிவினையில்லாக் குடும்பங்களையும் கெடுதலுள்ளவைகளாகப் பாவிக்கின்றனர். இவ்விரண்டு வழக்கங்களும் பணம் சேகரிக்கும் வழிகளுக்கு ஏற்படும் கெடுதலைக் கவனியாமல் பிறப்பு வீதத்தை அதிகப் படுத்துகின்றன. ஜனத்தொகையின் வளர்ச்சி அதிகரிக்காம லிருப்பதற்கு ஒரு உபாயம் என்னவென்றால் ஒவ்வொரு கூட்டத்தாரும் தங்கள் பிழைப்புத் திட்டம் குன்றக்கூடிய காரியங் களைத் தடுக்கவேண்டும். அதாவது பொருட் செழிப்பைக் குறைக்கக்கூடிய வம்சவிருத்தியை அதிகரிக்கக்கூடாது. இப் பேர்ப்பட்ட பொருட் செழிப்பு சம்பந்தமான கொள்கை ஒழுக்க முன்னேற்றத்திற்கு விரோதமாகத் தோன்றலாம். ஆனால் இம்முறையைத் தழுவினாலொழிய இக்காலத்தில் ஒரு தேசத்தாரும் பொருட் செழிப்பு அடைய முடியாது. நெருக்கத் தைவிட அதிகமென்று சொல்ல முடியாது. ஆனால் இந்தியாவில் சில இடங்கள் ஜனங்கள் வசிப்பதற்குள்ள வசதியில்லாமல் இருக்கின்றன. வேறு சில இடங்களில் அதிக ஜனநெருக்கத் தைக் காண்கின்றோம்.

அத்தியாயம் 5

பொருள் மாறுதல்

(Exchange)

இக்காலப் பொருள் வாழ்க்கையில் பொருள் மாற்றுதலினுல் அநேக அனுகூலங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

(1) ஒவ்வொரு தேசத்தாரும் தம்மால் உண்டாக்க முடியாத பொருள்களை மற்ற தேசங்களிலிருந்து பெறுகிறுர்கள். இங்கிலாந்திலிருந்து கரியும், ஆஸ்திரேலியாவிலிருந்து ஆட்டு ரோமமும் இந்தியாவிலிருந்து சணலும் மற்ற தேசங்களுக்கு அனுப்பப்படுகின்றன. இவ்விதமாக இனமாற்றலால் ஒவ்வொரு தேசத்தாரும் தம் பொருள்களைப் பிறதேசங்களுக்கு அனுப்பி அத் தேசங்களிலுள்ள பொருள்களைத் தமக்குப் பயன் படுத்திக் கொள்கின்றனர்.

(2) பொருள் மாற்றுதலினுல் ஒவ்வொரு தேசத்தாரும் தம் திறமைக்குத் தக்கபடியுள்ள பொருள்களை உற்பத்தி செய்கின்றனர். இதனுல் உலகத்தின் மொத்தப் பொருள் உற்பத்தியை அதிகப்படுத்தமுடியும். இவ்வித இனமாற்றுதலில்லாமற்போனுல் ஒவ்வொரு தேசத்தாரும் தமக்கு வேண்டிய பொருள்களைத் தாமே செய்துகொள்ளும்படி ஏற்படும். அவ்வித வாழ்க்கை செழிப்படைவதற்கு விரோதமாயிருக்கிறது.

(3) பொருள் மாற்றுதலினுல் ஒவ்வொரு தேசத்தாரும் தம் திறமைக்குரிய பொருள்களைப் பெருவீத உற்பத்தி பண்ணி உலகத்தின் விற்பனையிடங்களில் விற்கமுடியும்.

பொருள்மாற்று சாதனங்கள்

(1) வியாபாரிகள் உலகத்திலுள்ள பொருள்களை உற்பத்தியாகும் இடங்களிலிருந்து விற்பனைப் பிரதேசங்களுக்குக் கொண்டுவர வேண்டியது அவசியம். இவ்விதத் தொழிலைச் செய்பவர்கள் வியாபாரிகளேயாகும். ஆகையால் வியாபாரிகளும் பொருளுற்பத்தி பண்ணும் தொழிலில் ஈடுபட்டவர்களென்று சொல்லவேண்டும். ஒவ்வொரு தேசத்திலுமுள்ள வணிகர்களைப் பொருளுற்பத்தி பண்ணுவோருக்கும் பொருள் நுகர்வோருக்கும் தரகராகப் பாவிக்கலாம்.

(2) போக்குவரத்துச் சாதனங்கள் :—ரஸ்தாக்கள், ரெயில் பாதைகள், படகோடும் கால்வாய்கள், நதிகள், பெருங்கடற் போக்குவரத்து இவைகள் எல்லாம் ஒவ்வொரு தேசத்திலுள்ள பண்டங்களை மற்ற தேசங்களுக்கு எடுத்துச்செல்ல இன்றியமையாததாகின்றன.

(3) விற்பனைப் பிரதேசங்கள் (Markets) :—பொருள் மாற்றுதல், உள்நாட்டுச் சந்தைகளிலும், வெளிநாட்டுச் சந்தைகளிலும் நடைபெற்று வருகின்றது. பொருள்களின் இருப்புக்கும், தேவைக்கும் தக்கபடி சந்தைகளில் விலை ஏற்படுகிறது. பொருள்களை வாங்குதலும் விற்றலும் சந்தைகள் மூலமாகவே நடைபெற்று வருகின்றது.

(4) பணம் (Money):—பொருள்களை வாங்கவும் விற்கவும் பணமானது பண்டமாற்றுத் துணைக்கருவியாக உபயோகிக்கப்படுகிறது.

சந்தைகள் (Markets)

பொருள்களை வாங்கவும் விற்கவும் ஏற்பட்டுள்ள இடங்களுக்குப் பண்யாகரங்கள் அல்லது சந்தைகள் எனப் பெயர். ஒவ்வொரு ஊரிலும் சந்தைகள் இருக்கின்றன. காய்கறிச் சந்தை, பழச்சந்தை, மளிகைச்சந்தை, பணவியாபாரச் சந்தை முதலியவற்றை எடுத்துக் கூறலாம். சந்தைகளைப் பலவிதமாகப்

பிரிக்கலாம். (1) ஓரிடச் சந்தைகள் (Local Markets), (2) உள்நாட்டுச் சந்தைகள் (National Markets), (3) பன்னாட்டுச் சந்தைகள் (International Markets). காலக்கிரமப்படி சந்தைகளை இருவிதமாகப் பிரிக்கலாம். (1) குறுகியகாலச் சந்தைகள் (Short Period Markets), (2) நீடித்த காலச் சந்தைகள் (Long Period Markets). இக்காலத்தில் சில பொருள்களின் விற்பனைப் பிரதேசங்கள் உலகச் சந்தைகளாக விருக்கின்றன. தங்கம், வெள்ளி, கோதுமை, பருத்தி முதலிய பொருள்களின் சந்தைகள் உலகச் சந்தைகள் எனலாம். இக்காலத்தில் பல பொருள்களின் சந்தைகள் விரிவடைவதற்குப் பல காரணங்களிருக்கின்றன. முதலாவது போக்குவரத்து வசதிகளிருப்பதால் பொருள்கள் உற்பத்தி யாகுமிடங்களிலிருந்து விற்பனைப் பிரதேசங்களுக்கு எளிதாக அனுப்பப்படுகின்றன. தவிரவும் தபால் தந்தி அறிக்கைப் பத்திரிகைகள் மூலமாய் எல்லாப் பிரதேசங்களிலுள்ள பண்ட விலையைத் தெரிந்து கொள்ளமுடியும்.

ஒவ்வொரு பொருளுக்குமுள்ள விற்பனைப் பிரதேசம் விரிவடைவதற்குச் சில நிபந்தனைகளுண்டு :—

(1) ஒரு பொருளின் தேவை அதிகமாயிருக்கவேண்டும். எவ்வளக்கெவ்வளவு ஒரு பொருளின் தேவை வியாபித்திருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அதன் விற்பனைப் பிரதேசம் விரிவடைகிறது.

(2) ஒரு பொருளானது இலகுவாய் அறியத் தக்கதாயிருக்கவேண்டும். அப் பொருளின் மாதிரியிலிருந்தும், தரத்திலிருந்தும், நாம் அதன் தன்மை தெரிந்துகொள்ளும்படியிருந்தால், அப் பொருளை வாங்கவும், விற்கவும் இலகுவாயிருக்கும். உதாரணமாகக் கோதுமை, அரிசி, பருத்தி முதலிய சரக்குகளை வியாபாரிகள் நேரில் பார்க்காமல், அச்சரக்குகளின் மாதிரியிலிருந்தும் தரத்திலிருந்தும் வேண்டியவற்றை வாங்குகின்றனர்.

(3) ஒரு பொருளானது சுமக்கத் தக்கதாயும், உறுதியுள்ளதாயுமிருக்க வேண்டும். இக் குணங்கள் அமைந்த பொருள்

களுக்கு விற்பனைப் பிரதேசம் விரிவாயிருக்கிறது. உதாரணமாகத் தங்கம், வெள்ளி, கோதுமை, சணல், பருத்தி முதலிய விலை உயர்ந்த சாமான்கள் விற்பனையாகும் சந்தை ஓரிடத்திலில்லாமல் பன்னாட்டுச் சந்தையா யிருக்கிறது.

(4) சரக்குகளின் இருப்பு அதிகமாயிருக்க வேண்டும். பன்னாட்டுச் சந்தைகளில் விற்பனையாகும் பொருள்கள் பெருவீத உற்பத்தியுள்ளவைகளா யிருக்கவேண்டும். மேற் கூறிய அம்சங்கள் பொருந்திய பொருள்களுக்குப் பொதுவாக உலகச் சந்தைகளில் வாங்கவும் விற்கவுமுள்ள தன்மை ஏற்பட்டிருக்கிறது.

பொருள்களின் விலை எவ்வாறு தீர்மானிக்கப்படுகிறது? முதலாவது ஒவ்வொரு பொருளின் மதிப்பு அதன் தேவையைப் பொறுத்திருக்கிறது. அதாவது எந்தப் பொருள்கள் பிரயோஜனமுள்ளவையோ அவைகளுக்குத் தேவை அதிகம். ஒவ்வொரு பொருளையும் வாங்குவோர், அப்பொருள் எவ்வாறு பிரயோஜனப் படுகிறதென்பதைப் பொறுத்துத் தமக்கு வேண்டிய அளவைத் தீர்மானிக்கின்றனர். இது நிற்க, ஒரு பொருளின் தேவைக்குத் தக்கபடி அப்பொருளின் இருப்பையும் கவனிக்க வேண்டும். அதாவது நாம் உற்பத்தி பண்ணும் பொருள்களில் சிலவற்றிற்கு ஆக்கச் செலவு அதிகமாயும், சிலவற்றிற்கு ஆக்கச் செலவு குறைவாயுமிருக்கிறது. ஆகையால் இப் பொருள்களின் சந்தை விலை அவைகளின் ஆக்கச் செலவைப் பொறுத்திருக்கிறது. ஒருவன் தன் சரக்குகளை ஆக்கச் செலவுக்குக் குறைத்துக் கொடுப்பது சாத்யமான காரியமன்று. ஆகையால் ஒரு பொருளின் விற்பனை விலை குறைந்தபட்சம் ஆக்கச் செலவைவிட அதிகமாயிருக்கும்.

பொதுவாகப் பண்டங்களின் விலையானது அவைகளின் தேவையையும் இருப்பையும் (Demand and Supply) சார்ந்திருக்கிறது. சந்தையில் ஒரு பண்டத்தின்விலை நாழிகை வட்டத்தை இயக்கும் தூக்குப்போல் மேலும் கீழும் அசைந்து கொண்டிருக்கிறது. ஆனல் ஒவ்வொரு பொருளுக்கும் ஒரு

சமயத்தில் ஒருவிலை ஏற்படுகிறது. அவ்வித விலையானது தேவையையும், இருப்பையும் ஒட்டியிருக்கிறது. விலை, தேவை, இருப்பு (Price, Demand and Supply). இவை ஒன்றை யொன்று அதைக்கின்றன. அவை மூன்றிற்குமுள்ள சம்பந்தம் காரண காரியம் என்று சொல்லாமல் அன்யோன்யமான காரணத்துவம் என்று சொல்லவேண்டும்.

பொருள்களின் சமநிலை விலை (Equilibrium Price) எவ்வாறு ஏற்படுகிறதென்பதைக் கவனிப்போம்.

1. பிரதி தினச் சந்தை (Daily Market)

பிரதிதினச் சந்தையை எல்லா ஊர்களிலும் பார்க்கலாம். ஒரு பிரதிதினச் சந்தையில் அழிபொருள்களின் விலை எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது? பழம், காய்கறி முதலிய அழிபொருள் களின் விலை ஒவ்வொரு நாளும் மாறுபடுகின்றது. ஏனென்ருல் ஒவ்வொரு நாளும் விலையின் நிர்ணயமானது பொருளின் தேவை இருப்பு இவற்றைப் பொருத்திருக்கிறது. ஒரு தினத்தில் பொருளின் தேவை அதிகப்பட்டு இருப்புக் குறைந் திருந்தால் அன்றைத்தினம் விலை ஏற்றமடைகின்றது. இருப்பு அதிகப்பட்டுத் தேவை குறைந்தால் விலை இறங்குகிறது இவ்விதமாகப் பொருள்களின் தேவைக்கும், இருப்புக்கும் தற்காலச் சமநிலை ஏற்பட்டு அதன் மூலமாய்ப் பண்டவிலை ஏற்படுகிறது.

2. வழக்கவிலை (Normal Price)

வழக்கத்தேவை, வழக்கக்கிடைப்பு இவைகளைப் பொருத் திருக்கிறது. குறுகிய காலமாயிருந்தால், பொருளின் விலை பொருளின் வழக்கத் தேவையால் நிர்ணயிக்கப்படுகிறது. வருஷ பரியந்தமாயிருந்தால் வழக்கவிலை வழக்க இருப்பால் நிர்ணயிக்கப்படுகிறது.

பொருள்களின் விலை சம்பந்தமாக இரண்டுவகை விலைகள் கவனிக்கத்தக்கவை. மொத்தவிலை, சில்லறைவிலை. பொதுவாகப் பண்டங்களின் மொத்த விலையானது பண்டங்களின் தேவை கிடைப்பு இவைகளைச் சார்ந்திருக்கிறது. பொருள் நுகர்வோரும், பொருள் உண்டாக்குவோரும் இவர்களுடைய போட்டியினால் மொத்தவிலை நிர்ணயிக்கப்படுகிறது. ஆனால் சில்லரை வாணிபத்தில் பொருள்களின் விலை விதிப்பதில் வழக்கமே பிரதானமாயிருக்கிறது. இக்காலத்தில் சில்லரை விலையும் கூட அதிக மாறுபாடில்லாமல் ஸ்திரமான விலையாக விதிக்கப்பட்டு வருகின்றது. அவ்வித ஸ்திரமானவிலை ஏற்படுத்துவதால் விற்போருக்கும், வாங்குவோருக்கும் அதிக அனுகூலமாயிருக்கிறது. கொள்வன, விற்பனவற்றில் ஏற்படும் அருக்கில்லாமல் விலை கூற முடியும். அதிக நேரத்தை வீணாக்காமல் ஒப்பந்தத்தைத் துரிதமாய் முடித்துக் கொள்ளமுடியும். மேனாடுகளில் இவ்வித ஸ்திரமான விலையுள்ள சில்லறை வியாபாரக்கடைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இந்தியாவில் இவ்வித முறையைச் சில்லறை வியாபாரத்தில் ஏற்படுத்த வேண்டியது மிகவும் அவசியம். சிலபொருள்கள் சம்பந்தமாக ஏற்பட்டிருக்கும் விலையானது அரிய விலையாயிருக்கிறது. அதாவது ஒரு பொருளானது ஆக்கமுடியாததாயும், அரியதாயுமிருக்கும் பட்சத்தில் அப்பொருளுக்கு அதிகவிலை ஏற்படுகிறது. உதாரணமாக ரவிவர்மா எழுதிய பழைய படங்கள், பழைய கால ஸ்டாம்புகள், மறுபடியும் அச்சிடாமலிருக்கிற பழைய புஸ்தகங்கள் இவைகளுக்கு அரியவிலை கொடுத்து வாங்குகிறோம்.

பண்ட மாற்றுமுறை (Exchange by Barter)



பண்டமாற்றுதல் (நாணய முறையில்)

(Exchange by Purchase and Sale)

A யிடம் இருப்பது ஒரு குதிரை. ஆனால் A க்கு சட்டையும் நாற்காலியும் உணவுப் பொருள்களும் தேவை.	குதிரை விற்பதால் கிடைப்பது }	ரூ. 100	{ கிடைத்த ரூபாய்க்கு வாங்குவது	B யிடம் சட்டை ரூ.30க்கும் C யிடம் நாற்காலி ரூ.20க்கும் D யிடம் உணவுப் பொருள் ரூ. 50க்கும் வாங்குகிறான்.

வருமானம் (Income)

பொதுவாக அன்றாட வாழ்க்கையில் மக்கள் தங்களுக்குத் தேவையான பொருள்களை சந்தையில் வாங்கிக்கொள்ளுகின்றனர். ஆனால் மக்களுடைய விலைக்கு வாங்கும் சக்தியானது அவரவர்களுடைய வருமானத்தைப் பொறுத்திருக்கிறது. ஆகையால் பொருளாதார நூலில் வருமானப் பகுதியானது ஒரு முக்கிய அங்கத்தை வகிக்கிறது.

வருமானம் என்றால் என்ன? "ஒரு மனிதனாலோ அல்லது ஒரு சமூகத்தாலோ ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் பெறப்படும் செல்வம் (Wealth)" எனப் பொருளாதாரத்தில் வருமானத்தை (Income) விவரிக்கலாம். இந்த விஷயத்தில் வருமானமானது மூலதனத்திலிருந்து (Capital) வேறுபடுகிறது.

மூலதனமானது ஒரு குறிப்பிட்ட நேரத்தில் கையிலிருக்கும் செல்வத்தைக் குறிக்கிறது. மேலும் மூலதனமானது செல்வத்தைப் பெருக்குவற்கு உபயோகப்படுத்தப்படுகிறது. ஆனால் வருமானமோ மூலதனத்திலிருந்து அடையப்படுகிறது. வருமானத்தை (Income) நீரோடைக்கு ஒப்பிடலாம். ஒரு நீரோடையில் தண்ணீர் பெருகுவதும் குறைவதும்போல் வருமானமும் கூடியும் குறைந்துகொண்டு மிருக்கும் தன்மை உடையதாகும்.

பண வருமானமும், பொருள் வருமானமும் (Money Income and Real Income)

பொருளாதார நிபுணர்கள் வருமானத்தைப் பண வருமான மென்றும், பொருள் வருமான மென்றும் இரண்டு விதமாகப் பிரித்திருக்கிறார்கள்.

பண வருமானமானது (Money Income) ஒரு மனிதனோ அல்லது சமூகமோ ஒரு குறிப்பிட்ட காலத்தில் பெறும் பண வருவாயைக் குறிக்கிறது.

ஆனால் பொருள் வருமானமோ (Real Income) ஒரு மனிதனோ அல்லது சமூகமோ தனது பண வருவாயைக் கொண்டு அடையும் பொருள்களையும் (Commodities), சேவையையும் (Services), அன்றாடத் தேவைகளையும் (Necessaries), ஆடம்பரப் பொருள்களையும் (Luxuries) குறிக்கிறது. உண்மையாகப் பார்ப்போமானால் பொருள் வருவாயானது பிறர் நமக்குச் செய்யும் சேவைகளை மட்டும் குறிப்பிடவில்லை ; அது நாம் நமக்காகச் செய்து கொள்ளும் சேவைகளையும், ஒரு குடும்பத்தைச் சேர்ந்த ஒருவர், அதே குடும்பத்தைச் சேர்ந்த மற்றொருவருக்காகச் செய்யும் சேவையையும் குறிப்பிடுகிறது. விரிவாகக் கூறினால் பொருள் வருமானம் எல்லாவிதப் பயன்களையும் (Utilities) குறிப்பிடுகிறது எனலாம்.

வருமானத்தின் ஆதாரங்கள் (Sources of Income)

வருமானம் பெறுவோர்களை முதலாளிகள், தொழிலாளிகள் என இருவகையாகப் பிரிக்கலாம். ஆகவே முறையே சொத்துக்களும் (Property), வேலையும் (Work) வருமானத்தின் இரு முக்கிய ஆதாரங்களாகும். தொழிலாளிகள் என்று சொல்லும் பொழுது, அந்த சொல்லானது கீழ்த்தரமான வேலைகளைச் செய்து கொண்டு சொற்ப சம்பளம் பெறும் தொழிலாளர்களை மட்டும் குறிப்பதாக நினைத்தல் கூடாது. உண்மையில் தொழிலாளிகள் என்னும் பதம் தினக்கூலி பெற்றுக்கொண்டு வேலை செய்யும் தொழிலாளர்கள் முதல்

நிறைய சம்பளம் பெற்றுக்கொண்டு (மானேஜர் போன்ற) உயர்ந்த பதவிகளை வகிக்கும் உத்யோகஸ்தர்கள் வரை உள்ள சம்பளத்திற்கு வேலை செய்யும் சகலவிதமான தொழிலாளர் களையும் குறிப்பதாகும்.

ஆனால் சமீப காலத்தில் தொழிலாளர்களும் சிறிது சிறிதாக முதலாளிகளாக ஆகிவருகிறார்கள். தங்களுடைய சிக்கனமான வாழ்க்கையின் மூலம் சேமித்த பணத்தைத் தொழிலாளிகள் நிலம், கம்பெனி பங்குத் தொகைகள் போன்ற வைகளில் முதலீடு செய்து அதிலிருந்து வருவாயை அடைகிறார்கள்.

போட்டி வியாபாரம் செய்யும் நோக்கத்துடன் பெருவாரி யான அளவில் பொருள்களை உற்பத்தி செய்து தற்காலத்தில் வியாபாரிகள் நல்ல லாபம் அடைந்திருக்கிறார்கள். அப்படிக் கிடைத்த லாபத்தை அவர்கள் மேலும் மேலும் முதலீடு செய்து தங்களது வருவாயை மேன் மேலும் பெருக்கிக் கொள்கிறார்கள். மற்றும் சிலர் தனி உரிமை வியாபாரத்தின் மூலமாகவும் (Monopoly), வாரிசுரிமை (Inheritance) மூலமாகவும், எதிர்பாராமல் ஏற்படும் லாபம் காரணமாகவும் தங்களது வருவாயைப் பெருக்கிக்கொள்கிறார்கள்.

வருமான ஏற்றத் தாழ்வு
(Inequalities of Income)

நமது சமுதாயத்தில் உள்ள ஒவ்வொரு மனிதனுடைய வருமானங்களைக் கூர்ந்து கவனிப்போமானால் ஒருவருடைய வருமானத்திற்கும், மற்றொருவருடைய வருமானத்திற்கும் மிகுந்த வித்தியாசம் இருப்பது தெரியவரும். இது மாதிரியான வருமானத்திலுள்ள ஏற்றத்தாழ்வுகளைக் கவனிக்கும்பொழுது நாம், ஒருவருக்கும் மற்றொருவருக்கும் வேலை செய்வதற்குத் தேவையான சக்தி, புத்தி கூர்மை, சாமர்த்தியம், ஒரு வேலையில் அனுபவம் முதலிய முக்கியமான குணங்களிலுள்ள வேற்றுமை களைக் கவனித்தல் வேண்டும். தொழிலாளிகளுடைய வருவாயில் வித்தியாசம் இருப்பதும் மேற் கூறிய முக்கிய காரணத்தினாலேயாம்.

முதலாளிகளை எடுத்துக் கொண்டோமானால் அவர் களுடைய வருமானத்திலும் வித்தியாசமிருப்பது தெரியவரும். அதற்குக் காரணம் அவர்களுடைய சொத்துகளிலும், சொத்தின் மதிப்பிலும் வித்யாசமிருப்பது தான். சாதாரணமாகச் சென்னை, பம்பாய், டில்லி போன்ற நகரங்களிலுள்ள சொத்தின் மதிப்பு மற்றப் பிரதேசங்களிலுள்ள சொத்தின் மதிப்பைக் காட்டி லும் நாளுக்கு நாள் அதிகமாகிக்கொண்டு வருவதைக் காணலாம்.

தேசீய வருமானம் (National Income)

தேசீய வருமானம் அந்த தேசத்தில் ஒரு குறிப்பிட்ட காலத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருள்களும், சேவை களுமாகும். தேசீய வருமானமானது ஒரு தேசத்தில் ஒரு குறிப்பிட்ட வருஷத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பொருள் களினுடையவும் அந்தத் தேசத்து மக்களால் செய்யப்பட்ட சேவைகளினுடையவுமான பண மதிப்பைக் குறிப்பிடுவதாகும். எனவே, ஒரு குறிப்பிட்ட காலத்தில், உதாரணமாக ஒரு வருஷத்தில் உற்பத்தி செய்யப்பட்ட எந்தப் பொருளும், வேலை யும் தேசீய வருமானத்தின் ஒரு பகுதியேயாகும்.

ஒரு மனிதன் தனது வருமானத்தைத் தனக்கு வேண்டிய பொருள்களையும் சேவைகளையும் பெறுவதற்கும், தரும காரியங் களுக்கும், வரி செலுத்துவதற்கும், எதிர்காலத்திற்கான சேமிப்புப் போன்ற பல முக்கிய இனங்களுக்கும் செலவிடு கின்றான்.

ஆனால் ஒருவருடைய வருமானத்தின் அளவோ, தேசீய வருமானத்தின் அளவோ, அந்தத் தேசத்தின் உற்பத்தியின் அளவைப் பொறுத்திருக்கிறது. நாட்டின் உற்பத்தி குறைந் தால், தனிப்பட்ட வருமானமும் (Individual Income), தேசீய வருமானமும் குறையும் நாட்டின் உற்பத்தி அதிகரித்தால், தனிப்பட்ட வருமானமும், தேசீய வருமானமும் அதிகரிக்கும். ஒரு நாட்டின் உற்பத்தி அதிகரித்தால் அந்த நாட்டு மக்களின் தேவைகள் முன்னைவிட அதிகமான அளவிலே பூர்த்தி

செய்யப்படும். மேலும், அந்நாட்டு மக்களின் முக்கியமாக தொழிலாளிகளின் வாழ்க்கைத்தரம் உயரும்.

தேசீய வருமானத்தையும், தேசீய செல்வத்தையும் அளவிடும் விதம் : (Measurement of National Income and National Wealth)

தேசீய வருமான வரிக் கணக்குகள் (Income-Tax Returns) ஒரு தேசத்தின் தேசீய வருமானத்தைக் கணக்கிடுவதற்கு வேண்டிய குறிப்புகளைக் கொடுக்கின்றன. வருமான வரிக் கணக்குகளை ஆராய்ந்தால், வருமான வரி செலுத்தும் தனிப்பட்டோர், கம்பெனிகள், கார்ப்பரேஷன்கள் முதலியவைகளின் மொத்த வருமானங்கள் தெரியவரும். வரி கொடாமல் ஏமாற்றுவோரின் வருமானத்தையும் உத்தேசமாக நிர்ணயித்து அதையும் மேற் கண்ட மொத்த வருமானத்துடன் சேர்த்துக்கொள்ளவேண்டும். அவைகளுடன் குறைந்த வருமானமுள்ளவர்களுடைய வருமானம், அரசாங்க வருமானம், தபாலாபீஸ்களின் லாபம் முதலியவைகளைக் கூட்டிக்கொள்ளவேண்டும்.

மேற்கண்டபடி கிடைக்கப்பெற்ற கூட்டுத் தொகையிலிருந்து நம் நாட்டில் வசிக்கும் அயல் நாட்டவருக்குச் சேர வேண்டிய தொகையும், தேசீயக் கடனின் உள்நாட்டுப் பகுதியின் (Internal part of the National Debt) வட்டியையும் கழித்துக்கொள்ளவேண்டும். சில அதிகாரிகள் முதிர்ந்த வயது பென்ஷன், யுத்த பென்ஷன் முதலியவைகளையும் மேற் கண்ட கூட்டுத் தொகையிலிருந்து கழிக்கின்றார்கள்.

ஆனால் மொத்தத் தனிப்பட்டவரின் வருமானமும் (Total Individual Income), மொத்தக் கூட்டு வருமானமும் (Total Corporate Income) ஒன்றாக இருக்கமுடியாது. ஏனென்றால் கூட்டு வருமானத்தில் கம்பெனிகளின் அங்கத்தினர்களுக்கு விபாகிக்கப்படாத லாபமும் (Undistributed Profits of the Joint-Stock Companies) சேர்ந்திருக்கிறது.

தேசீயச் செல்வத்தை (National wealth) அளவிடுவது மிகவும் கடினம். இதற்குக் காரணம் மக்களுடைய (குணாதிசயங்கள் போன்ற) உற்பத்திக்குத் தேவையான சாதனங்களுக்கும் தேசத்தின் இயற்கை வளங்களுக்கும் சரியான விலை மதிக்க முடியாமலிருப்பதுதான்.

இருந்தபோதிலும், தேசீயச் செல்வத்தை இரண்டுவிதமாகக் கணக்கிடலாம். அதில் ஒரு முறைப்படி, முதலில் நமது தேசத்திலுள்ள பிறருக்கு மாற்றக்கூடிய சொத்துக்களையும், அயல்நாட்டில் நமக்குச் சொந்தமாயுள்ள சொத்துக்களையும் கணக்கிடல் வேண்டும். பிறகு அவைகளிலிருந்து தமது நாட்டில் பிற நாட்டினருக்குச் சொந்தமாயுள்ள சொத்துக்களையும், பிற நாட்டினருக்கு நாம் கொடுக்கவேண்டிய கடன்களையும் கழித்துக்கொள்ளல் வேண்டும். இதற்கு ஜாபிதா (Inventory Method) ஆராய்ச்சிமுறை எனப் பெயர்.

இரண்டாவதாக, சொத்தின் வருடாந்திர மதிப்பைக் கணக்கிடுதல் (Capitalisation method) மூலமாகவும், தேசீயச் செல்வத்தின் மதிப்பைக் கண்டுபிடிக்கலாம். சாதாரணமாக ஒரு வியாபாரத்தின் மதிப்பைக் கணக்கிடும்பொழுது, நாம் அந்த வியாபாரத்திற்குச் சொந்தமாயுள்ள சொத்துக்களை (Assets)ப் பற்றி ஆராய்வதில்லை. அதற்குப் பதிலாக அந்த வியாபாரம் ஒரு குறிப்பிட்ட காலத்தில் எவ்வளவு லாபத்தைக் கொடுக்கும் என்பதையே கவனிக்கிறோம். இந்த முறையைக் கீழ்க்கண்டபடி விளக்கலாம்.

ஒரு வியாபாரம் வருடம் ஒன்றுக்கு ரூ. 1000 லாபம் தருகிறதென்றும், அதனால் சராசரி வட்டி விகிதம் 5% கிடைக்கிறதென்றும் வைத்துக்கொள்வோம். இந்த விகிதத்தைக் கொண்டு அந்த வியாபாரத்தைச் சுமார் $1000 \times 100/5 =$ ரூ. 20,000 பெறுமென மதிக்கலாம். பிறகு இந்த மதிப்பிலிருந்து தேய்மானம் (Depreciation) போன்ற சொத்தின் மதிப்பைப் பாதிக்கும் இனங்களுக்காகச் சிறிது தொகையைத் தள்ளுபடி செய்துவிட்டுச் சொத்தின் மதிப்பை நிர்ணயிக்கலாம்.

தேசீயச் செல்வத்தைக் கணக்கிடுவதற்கு வேண்டிய புள்ளி விவரங்கள் வருமானவரிப் புள்ளிக் கணக்குகளிலிருந்து பெறலாம். அவைகளைக் கீழ்க்கண்டவாறு பிரிக்கலாம்.

(1) நிலம், வீடு முதலிய சொத்துக்களின் மேலுள்ள உரிமையால் கிடைக்கும் வருமானம் (Income from the Ownership of Land and Houses)

(2) நிலத்தை ஆக்கிரமித்துக்கொண்டிருப்பதால் கிடைக்கும் வருமானம் (Income from the Occupation of Land)

(3) அரசாங்கப் பத்திரங்கள் மூலம் கிடைக்கும் வருமானம் (Income from Government Securities)

(4) வியாபாரம், பற்றுத்தொழில்கள் மூலம் கிடைக்கும் வருமானம் (Income from Trades and Professions)

(5) அரசாங்கம் மற்றும் இதரப் பொது ஸ்தாபனங்களில் வேலைச் செய்வோரின் சம்பளங்கள் (Salaries of officials in the employ of Government and other Authorities)

தேசீயச் செல்வத்தைக் கணக்கிடுவதில் அநேக சிக்கல்கள் இருக்கின்றன. வருமான வரிப் புள்ளிக் கணக்குகளில், தேசீயச் சொத்துக்கள் (National Assets) எல்லாம் அடங்கியதில்லை. சில சமயங்களில் ஒரே புள்ளி விபரம் இரண்டு இடங்களில் கணக்கிடப்படுகின்றது (Double Counting). முதலீடுகள், மற்றும் உற்பத்திக்கு வேண்டிய சாதனங்களுடைய தேய்மானங்கள் சரிவரக் கணக்கிடமுடிவதில்லை. உற்பத்திக் குறைந்தபோதிலும் விலைவாசிகள் ஏறிக்கொண்டே போனால் தேசீயச் செல்வமும் பெருகிக்கொண்டுவருவதாகத் தோன்றும். இது நமது நாட்டில் தற்சமயம் இருக்கும் விலைவாசிகளுடன் 1939-ம் வருடத்திலிருந்த விலைவாசியை ஒப்பிட்டுப் பார்த்தால் தெரியவரும்.

வருமானப் பிரிவுகள்
(Classification of Income)

முன்காலத்தில் பொருளாதார நிபுணர்கள் பொருளுற்பத்தியின் சாதனங்களை நிலம் (Land), வேலை (Labour), மூலதனம் (Capital) என மூன்றாக வகுத்தனர். மேலும் அவர்கள் வருமானத்தை நிலவருமானம் (Rent from Land), தொழிலாளர் கூலி (Wages of Labour), மூலதன லாபம் (Profits from Capital) என மூன்று விதமாகப் பிரித்தார்கள். ஆனால் இக்காலத்திய பொருளாதார நிபுணர்கள் மேற்கூறிய மூன்று உற்பத்திச் சாதனங்களுடன் நிர்வாகம் (Management) என்ற நான்காவது இனத்தையும் சேர்த்துக்கொண்டார்கள். மேலும், அவர்கள் வருமானத்தில் வட்டியின் மூலமாகக் கிடைக்கும் வருமானத்தையும் சேர்த்துக்கொண்டார்கள்.

ஆனால் அமைப்பாளர் (Organizer) வருமானம் என்ன என்பதைப்பற்றி ஆராய்வோம். அமைப்பாளருடைய வருமானம், அவருடைய வேலைகளைப் பொறுத்திருக்கிறது. அவர் ஒரு சாதாரண நிருவாகியாகவோ அல்லது கம்பெனியின் டைரக்டராகவோ இருந்தால், அவரும் மற்றத் தொழிலாளிகளைப்போல் ஒரு குறிப்பிட்ட சம்பளத்தைப் பெறுவார். ஆனால், அவர் அந்தக் கம்பெனியின் மானேஜராகவிருந்துகொண்டு, அதிலேயே முதலீடுகளும் செய்திருந்தால், அவருக்குச் சம்பளத்துடன் கூட, தம்முடைய முதலுக்கு வட்டியும் கிடைக்கும். மேற்கொண்டு அந்த வியாபாரம் நன்றாக லாபத்துடன் நடந்தால் இன்னும் சிறிது வருமானமும் அமைப்பாளருக்கும் கிடைக்கலாம். உதாரணமாக ஒரு அமைப்பாளர் ஒரு கம்பெனியில் வட்டி விகிதம் 5% ஆக இருக்கும்போது ரூ. 100 முதலீடு செய்திருப்பதாக வைத்துக்கொள்வோம். சிறிதுகாலம் கழித்து வட்டி விகிதம் 7% ஆனால் நாம் அமைப்பாளருக்கு வட்டியுடன் கூட, லாபத்தில் சிறிது பாகமும் கிடைப்பதாகக் கூறலாம்.

அத்தியாயம் 6

விபாகம்

(Distribution)

நாம் எதை விபாகிக்கிறோம் ? ஒரு நாட்டு மக்களின் பல வித முயற்சியால் ஏற்படும் நாட்டுவருமானம் பங்கிடப்படுகிறது. சில தேசங்களில் நாட்டு வருமானம் அதிகமாயும், சில தேசங்களில் குறைவாகவுமிருக்கிறது. ஒரு தேசத்தின் மூலாதாரங்களை எவ்வளவுக் கெவ்வளவு உபயோகப்படுத்துகின்றனரோ அவ்வளவுக்கவ்வளவு அத்தேசத்தின் வருமானத்தை அதிகரிக்கப்பண்ணலாம். ஆகையால் நாட்டு வருமானமானது ஒரு குறிப்பிட்ட நிதியாயில்லாமல் ஆற்றில் ஓடும் ஜலத்தைப் போல் அதிகமாயும், குறைவாயுயிருக்கலாம்.

இவ்வித நாட்டு வருமானமானது பொதுவாக நான்கு பாகங்களாக விபாகிக்கப்படுகிறது. நிலச்சுவான்களுக்கு நில வாரமாகவும், வேலைசெய்து உழைப்போருக்குக் கூலியாகவும் முதலை உபயோகப்படுத்துவோருக்கு வட்டியாகவும் கைத்தொழில்களை அமைத்து இயக்குவோருக்கு முயற்சியின் பலனாகிய இலாபமாகவும் விபாகிக்கப்படுகிறது.

இந்தியாவின் வருமானம் :—முப்பது வருஷங்களுக்கு முன் இந்தியாவில் சராசரி பண்ணைப் பொருளுற்பத்தி ரூ. 40 ஆக கணக்கிடப்பட்டது. சென்ற நூற்றாண்டில் ஸர் எவிலின் பாரிங்கு (Sir Evelyn Baring) என்பவர் இந்தியாவின் சராசரி வருமானத்தைத் தலைக்கு ரூ. 27 ஆக மதித்தார். 1880-ம் வருஷத்தில் பஞ்ச விசாரணைக்காரர்கள் (Famine Commission) சராசரி வருமானத்தை £ 2 ஆகக் கணக்கிட்டனர். 1903-ம் வருஷம் ராபர்ட் ஜிவ்வின் (Robert Giffin) என்பவர் £ 2 அல்லது ரூ. 30 ஆகக் கணக்கிட்டனர் ; கர்ஸான் பிரபு இந்தியா கவர்ன்மென்டார் சார்பாக மேற்கூறிய மதிப்பை ஒப்புக்கொண்டனர். டிக்பியும், தாதாபாய் நௌரோஜியும் இந்தி

யாவின் சராசரி வருமானத்தை இன்னும் குறைவாகவே மதித்தனர். இந்தியாவின் வருமானத்தைக் கணக்கிடுவதற்குத் தகுந்த சாதனங்களில்லை.

சமீபத்தில் இந்தியாவின் வருமானத்தைப் பற்றி நுட்ப விசாரணை செய்தோர் பற்பல இலக்கங்களைக் கொடுத்திருக்கின்றனர். முதலில் விவசாய இலாகாவின் 1921-ம் வருஷத்திய நிர்ணயப்படி சென்னை இராஜதானியில் சராசரி வருமானம் ரூ. 100 ஆகக் கணக்கிடப்பட்டது ; பம்பாயில் தேறின வருஷ வருமானம் நகர்ப்புறங்களுக்கு ரூ. 100-ம், நாட்டுபுறத்திற்கு ரூ. 75-ம் ஆகக் கணக்கிடப்பட்டன. இந்தியாவின் நாட்டு வருமானம் மற்ற தேசங்களுடன் ஒப்பிடுமிடத்து வெகு குறைவாகவே இருக்கிறது. இங்கிலாந்தில் சராசரி வருமானம் £ 50 ஆக மதிக்கின்றனர். அதாவது இந்தியாவின் சராசரி வருமானத்தைவிட 25 மடங்கு அதிகமாகச் சொல்ல வேண்டும் ; வட அமெரிக்க ஐக்கிய நாடுகளின் சராசரி வருமானம் £ 72 பவுன்கள், பிரான்ஸ் £ 38 பவுன்கள், ஜெர்மனி £30 பவுன்கள். மேற்கூறிய தொகைகள் கணக்கிடப்பட்ட காலமுதல் மேற்கூறிய தேசங்களில் சராசரி வருமானம் அதிகரித்திருக்கிறது. உதாரணமாக இங்கிலாந்தில் தற்காலத்தில் சராசரி வருமானம் £ 60 பவுனாகக் கணக்கிட்டிருக்கின்றனர்.

இந்தியாவின் செல்வத்தைப் பற்றியும் தகுந்த புள்ளி விவரங்களில்லை. இந்தியாவில் ஒருவருக்கு இருக்கும் செல்வமானது 1910-ம் வருஷத்தில் £ 10 பவுனாக மதிக்கப்பட்டது ; தற்காலத்தில் £ 20 பவுனாக மதிக்கப்படுகிறது. மற்ற தேசங்களுடன் ஒப்பிட்டால் இங்கிலாந்தின் செல்வம் தலைக்கு £ 334 பவுன்கள் ; பிரான்ஸ் £ 252 பவுன்கள், ஜெர்மனி £ 246 பவுன்கள்.

நில வாரம்
(Rent of Land)

இந்தியாவில் நில வாரமானது பழைய கால வழக்கத்தையும், நிலத்திற்குள்ள போட்டியையும், சட்ட நிரூபணத்தை

யும் பொறுத்திருக்கிறது. பழைய காலத்தில் நிலவாரமானது மாமூல்படி திட்டங் கட்டப்பட்டு வந்தது. கொஞ்ச காலமாக, பழைய கிராம சர்வ ஜனங்களின் கூட்டுறவு குறையவும், குடி ஜனம் அதிகரிக்கவும், நிலவாரமானது பெரும்பாலும் நிலத் திற்குள்ள போட்டியினுலேயே நிர்ணயிக்கப்பட்டு வருகிறது. ஆனுல் இவ்விதப் போட்டியினுல் குடிவாரக்காரருக்கு அதிகக் கஷ்டம் ஏற்பட்டதால் அவர்கள் சம்பந்தமாக கவர்ன்மென்டார் குறுக்கிடும்படியாகிவிட்டது. நிலவாரம் சம்பந்தமான சட்டங் கள் மாகாணத்திற்கு மாகாணம் வித்தியாசப் படுகின்றன. ஆனுல் அச் சட்டங்களின் பொது நோக்கமானது நிலச்சுவான் தன் இஷ்டப்படி நில வாரத்தை அதிகப்படுத்த முடியாம லிருப்பதற்குச் சில தடைகளை விதிப்பதேயாம். நிலவாரம் சம்பந்தமாயுள்ள சட்ட நிரூபணமானது நிலச்சுவானுக்குள்ள உரிமைகளைக் குறைப்பதே முக்கிய கொள்கையாகக் கொள்ளா மல், குடிவாரக்காரர் ஏற்கனவே அனுபவித்துவரும் பாத்தி யதையைக் குறைவுபடாமல் பாதுகாப்பதேயாம். ஆகையால் இந்தியாவில் நிலவாரமானது பழைய வழக்கப்படியே இன்னும் நடந்துவருவதாகச் சொல்லலாம்.

நிலவாரம் சம்பந்தமாக ரிக்கார்டோ (Ricardo) என்னும் பொருள் நூலாளர் ஒரு கொள்கையை நிரூபித்தனர். அதா வது நிலவாரமானது இயற்கைச் செழிப்பினுலும், ஸ்தல சௌகரியங்களினுலும் வாரமில்லாத கடைசி நிலத்திற்கும், அதற்கு உயர்தரமாகவுள்ள நிலத்திற்குமுள்ள வருமானத்தின் வித்தியாசமேயாம். இக் கொள்கையானது பரிச்சேதமாய் உண்மையான கொள்கையென சொல்லமுடியாது. அமெரிக்கா ஐக்கிய நாடுகள், இங்கிலாந்து முதலிய தேசங்களின் நிலவார மானது போட்டிவாரமாயிருக்கிறதென்று சொல்லலாம். ஆனுல் இந்தியாவில் அவ்விதமில்லை.

இந்தியாவில் அயன்பேரிகை மேற்கூறிய மூன்று காரணங் களையும் பொருத்திருக்கிறது. அதிக ஜனநெருக்கமில்லா நாடு களாகிய அஸ்ஸாம், மத்திய மாகாணம், ராஜபுதனம் முதலிய வற்றில் நிலவாரம் குறைவாகவே யிருக்கிறது. ஜன நெருக்க முள்ள பிரதேசங்களில் அதாவது மழை அதிகமாயுள்ள இடங்

களிலும், நதிப் பிரதேசங்களிலும்—நிலம் பயிரிடுவதற்கு அதிக போட்டி யிருப்பதால் நிலவாரம் போட்டிமேல் ஏற்படும் வாரமா யிருக்கிறது. ஆங்கில அரசாட்சியின் ஆரம்பகாலத்தில் இந்தி யாவின் ஜனத்தொகை இங்கிலாந்திலிருப்பதைவிடக் குறைவா யிருந்தது. நிலம் அதிகமாயும், குடிவாரக்காரர் குறைவாயு மிருந்தனர். ஆகையால் வாரம் குறைவாகவே யிருந்தது. சமீபகாலங்களாக ஜனத்தொகை விருத்தியாகிக்கொண்டே வருகிறது. தவிரவும் கைத்தொழில்களும் க்ஷீணமடைந்ததால் அநேக ஜனங்கள் விவசாயத்தையே கைப்பற்றத் தொடங்கி னர். இவ்விதமாக நிலத்திற்குப் பிரியம் ஏற்பட்டது. அதனுல் வாரமும் உயர்ந்தது.

முற்காலத்தில் நிலவாரம் தானியமாகவே கொடுக்கப்பட் டது. மாகூல் காலத்தில் நிலச்சுவானும் குடிவாரக்காரரும் நிலத்தின் விளைவைப் பகுத்துக்கொள்வது வழக்கமாயிருந் தது. ஆனுல் இக்காலத்தில் நிலவாரமானது அநேகமாகப் பணமாகவே செலுத்தப்படுகிறது.

ஒரு தேசத்திலுள்ள நிலத்திற்குச் சொந்தக்காரர் யாரென் பது தர்க்கத்திற்கு ஏதுவான விஷயமாயிக்கிறது. ஐரோப்பா அமெரிக்கா கண்டங்களில் நிலத்தை (தனிச் சொத்து) ஸ்வதனமாயில்லாமல் பொதுதனமாக (பொது சொத்து) பாவிக்க வேண்டுமென்பது சிலர் கொள்கை. இந்தியாவிலும் இவ்விதக் கொள்கை யுடையவர்கள் சிலர் இருக்கின்றனர். அரசியல் அதிகாரிகளின் அபிப்பிராயப்படி நிலம் அடிப்படை யாக அரசியலாரைச் சேர்ந்ததென்றும், நிலவரியானது கவர்ன் மென்டார்க்கு நிலத்திலுள்ள உரிமைக்காகக் கொடுக்கப்படும் வார மென்றும் கருதப்படுகிறது. ஆனுல் இக் கொள்கையை எல்லோரும் ஒப்புக்கொள்ளவில்லை. இவ்விஷயத்தின் சங்கே தத்தைப்பற்றி அதிக சர்ச்சை செய்யாமல் நாம் பொதுவாகச் சில விஷயங்களைக் கூறலாம். குடிவாரக்காரன், நிலச்சுவான், கவர்ன்மென்ட்—இம்மூவருக்கும் நிலத்தில், வரையறுக்கக்கூடிய சுதந்திர மிருப்பதாகச் சொல்லலாம். சாஸ்வதவரி ஏற்பா டுள்ள நிலங்களுக்குக் கவர்மென்டார் சொந்தக்காரரின் உரிமை பாராட்ட முடியாது.

கூலி (Wages)

பொருளுற்பத்திக்குரிய சாதனங்களாகிய நிலம், உழைப்பு, முதல் முதலியவற்றில் உழைப்பே முதன்மையானது. ஏனென்றால் எல்லாப் பொருளுற்பத்தியும் மனிதனின் நுகர்வுக்கேயாம். தவிரவும் உழைப்பை மக்களினின்று பிரிக்கமுடியாது. நிலத்திற்கு வாரமும், முதலுக்கு வட்டியும் கிடைப்பதுபோல உழைப்புக்குக் கூலி கிடைக்கிறது.

பொருளுற்பத்தி சாதனமாகிய உழைப்பின் சில விற்பன்னங்களை கவனிப்போம்.

1. ஒரு கூலிவேலைக்காரன் தன் ஊழியத்தை முதலாளிக்கு விற்கிறான். ஆனால் அவன் முதலாளிக்கு அடிமை என்று நினைக்கக்கூடாது. முதலாளிகளுக்குத் தம் கூலி வேலைக்காரரைப் பொருள் செலவழித்து வேலைகளில் நன்றாகப் பழக்க ஊக்கம் ஏற்படுவதில்லை. ஏனென்றால் நன்றாகப் பழக்கப்பட்ட வேலைக்காரன் வேறு வேலைகளுக்குப் போய்விடலாம். தவிரவும் கூலி வேலைக்காரர் கூடிய சீக்கிரத்தில் கூலி சம்பாதிப்பதே முக்கிய கருத்தாகக்கொண்டு தமக்கும் தம் பரம்பரைக்கும் வேலையில் பழக்கவேண்டிய முறையைக் கவனிப்பதில்லை.

2. கூலி வேலைக்காரன் வேலை கிடைக்கும் இடம் தேடி செல்ல வேண்டியிருக்கிறது. நிலம், முதல், இவைகளை உடையவர்கள் தாம் இருக்கும் இடத்திலேயே இருந்துகொண்டு வெளியிடம் போகாமல் பலன் அடைகின்றனர். ஆனால் கூலி வேலை செய்வோர் வேலை கிடைக்கும் இடம் தேடித்திரிகின்றனர்.

3. கூலிவேலைக்காரர் வேலையில்லாமல் வெகுகாலமிருக்க முடியாது. வேலையில்லா நாட்கள் வீணாட்கள். அந்நாட்களில் சம்பாதிக்கக்கூடிய பணம் மீட்கமுடியாது. வேலையில்லாத் திண்டாட்டத்தில் வாழ்க்கை நிலை குறைந்து வேலைக்காரரின் திறனும் குறைகின்றது.

4. தொழிலாளிகளுக்கும் முதலாளிகளுக்கும் ஏற்படும் ஒப்பந்தத்தில் தொழிலாளிகள் எப்பொழுதும் நஷ்டப்படக்

கூடியவர்களாக இருக்கின்றனர். ஏனென்ருல் எக்காரணத்தினு லாவது தொழிலாளிகள் வேலையில்லாமலிருக்க முடியாது.

5. உழைப்பாளிகள் எப்பொழுதும் வேண்டியவரை கிடைப்பதில்லை. உழைப்பாளிகளை வேலைக்குத்தக்கபடி பழக்க வேண்டியிருக்கிறது. சில வேலைக்கேற்ற உழைப்பாளிகள் தலைமுறை தலைமுறையாகப் பழக்கப்பட்டு வருகின்றனர்.

பழைய காலத்தில் கிராமங்களில் கூலியானது தானிய மாகவே கொடுக்கப்பட்டது. இக் காலத்தில் பணப் பழக்கம் அதிகமாயிருப்பதால் கூலியானது பணமாகவே கொடுக்கப்படு கிறது. இந்தியாவில் அநேக கூலிவேலைகளில் கூலியானது பழைய பழக்கத்தை அனுசரித்து நிர்ணயிக்கப்படுகிறது. மேனுடுகளில் கூலியானது பெரும்பாலும் தொழிலாளர்களுக் கும், முதலாளிகளுக்கும் ஏற்படும் போட்டியினுல் தீர்மானிக்கப் படுகிறது. ஆனுல் அவ்விதப் போட்டியில் தொழிலாளிகள் பலக்குறைவாயிருப்பதால் கூலி அதிகக் குறைவு படாமலிருப்ப தற்குத் தொழிலாளர் சங்கங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. விவசாயத் தொழில்களில் உழைப்போரின் கூலி பொதுவாகக் குறைவாகவே யிருக்கிறது, கைத்தொழில்களில் உழைப்பவர் கூலியானது விவசாயக் கூலியைவிட அதிகமா யிருக்கிறது. பொறிச்சாலைகள் ஏற்பட்டிருக்கும் இடங்களில் கூலிவீதம் அதிகமாயிருக்கிறது. இக்காலத்தில் போக்குவரவு சாதனங்கள் வளர்ச்சியடைந்திருப்பதால் எல்லாவிடங்களிலும் கூலிவேலைக் காரரின் சம்பளம் உழைப்புத் தேவைக்குத் தக்கபடியும், உழைப் பாளி கிடைப்புக்குத் தக்கபடியும் நிர்ணயிக்கப்பட்டு வருகிறது. இக்காலத்தில் கூலிவேலைக்காரர் வேலை கிடைக்குமிடங்களுக்குப் போகத் தயாராயிருக்கிருர்கள். அஸ்ஸாம் தேயிலைத் தோட்டங் களுக்கும் வங்காளத்துச் சணற்றெழில் சாலைகளுக்கும் வேண் டிய கூலிவேலைக்காரர் இதர மாகாணங்களிலிருந்து செல்லு கின்றனர்.

கூலி வேலைக்காரரைக் கைதேர்ந்த உழைப்பாளி, கைதேராத உழைப்பாளி எனப் பிரிக்கலாம். பொறித்தொழில் சாலைகளில் வேலை செய்கின்றவர் பெரும்பாலும் கைதேராத

உழைப்பாளியாயிருக்கின்றனர். அத்தொழில்களிலுள்ள கை தேர்ந்த உழைப்பாளிகள் பெரும்பாலும் அன்னியர்களாயிருக்கின்றனர்.

கூலிவிஷயமாயுள்ள புள்ளி விவரங்கள் பூரணமாய்க் கிடைப்பதில்லை. இந்தியாவில் கூலிவேலைக்காரர் பெரும்பாலும் விவசாயத் தொழிலில் ஈடுபட்டிருக்கின்றனர். விவசாயம் சம்பந்தமாய்க் கூலிவேலை செய்பவர் அடையும் பலன் சரியானபடி கணக்கிடப்படவில்லை. தவிரவும் கூலியானது தொழில்களுக்குத் தக்கபடி வித்தியாசப்படுகிறதோடல்லாமல், ஒரே தொழிலில் வெவ்வேறு இடங்களில் வெவ்வேறு விதமாய் இருக்கிறது. மேலும் தொழில்களில் வேலை ஒழுங்காய்க் கிடைப்பதில்லை. வருஷம் முழுவதும் வேலை கிடைப்பதில்லை. இவ்வித நிலைமையில் சராசரிக் கூலியென்பது ஓர் அர்த்தமில்லாத பதமென்றுதான் சொல்லவேண்டும். ஆனால் இதரதேசங்களுடன் ஒப்பிடுவதற்கு இந்தியாவின் கூலி வேலைக்காரரின் சராசரிக் கூலியானது கைதேரா உழைப்பாளருக்கு ஒரு குறிப்பிட்ட நேரத்திற்கு 6 அணுவாகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

இந்தியாவில் கூலி பலவிதமாகக் கொடுக்கப்படுகிறது. தொழிற்சாலைகளில் கூலியானது காலக் கணக்கின் பேரில் கொடுக்கப்படுகிறது. கைவேலைகளிலும், குடிசைத்தொழில்களிலும் கூலியானது செய்த வேலைக்குத் தக்கபடி கொடுக்கப்படுகிறது. சில இடங்களில் கூலியானது ஒப்பந்தப்படி கொடுக்கப்படுகிறது. சில வேலைகளில் தாழ்ந்த கூலி இவ்வளவென்று ஒப்பந்தம்பண்ணி வேலையின் திறமைக்குத் தக்கபடி கூலியை உயர்த்துகின்றனர்.

சென்ற ஐம்பது வருஷ காலங்களாக விலைவாசி உயர்ந்ததினால் கூலிவேலைக்காரரின் சம்பளங்களும் உயர்ந்தன. 1920-21 வரை விலைவாசி உயர்ந்ததற்குத் தக்கபடி கூலி உயரவில்லை. சமீப காலங்களில் எல்லாக் கூலிவேலைக்காரர்களுக்கும் கூலி உயர்ந்திருக்கிறது. பம்பாய் மாகாணத்தில் கூலிவேலைக்காரரின் கூலி இரண்டு மடங்கு உயர்ந்திருக்கிறது. அதாவது வெளிவேலை செய்வோருக்கு நாலு அணுவிலிருந்து 9 அணு

வரையிலும், நகரங்களிலுள்ள கைதேரா உழைப்பினருக்கு 6 அணுவிலிருந்து 9 அணுவரையிலும், கைதேர்ந்த உழைப்பினருக்கு 13 அணுவிலிருந்து 1 ரூபாய் வரையிலும் உயர்ந்திருக்கிறது. தற்காலத்தின் விலை மட்டத்தை 1914-ம் வருஷத்துடன் ஒப்பிடுமிடத்து தற்கால வாழ்க்கைநிலை குறைவாகவே யிருக்கிறது. 1914-ம் வருஷத்திய விலைமட்டத்தை 100 என்று வைத்துக்கொண்டால், இக்கால விலை மட்டம் சுமார் இருமடங்காகக் கணக்கிடப்பட்டிருக்கிறது.

வட்டியும் இலாபமும்

(Interest and Profits)

ஒரு முதலாளியின் வருமானத்தை இரண்டு பாகமாகப் பிரிக்கலாம் :—1. அவனுடைய முதலுக்குக் கிடைக்கும் வட்டி. 2. அவனுடைய முயற்சிக்குக் கிடைக்கும் இலாபம். வட்டியானது முதலுக்கு ஏற்படும் தேவையையும், தேவைக்குத் தக்கபடியுள்ள முதலின் இருப்பையும் பொருத்திருக்கிறது. ஒரு கூட்டுப்பங்குக் கழகத்தை (Joint Stock Company) எடுத்துக் கொண்டோமானல், அதில் பலவிதமாக மூலதனம் திரட்டப்படுகிறது. (Debenture) என்று சொல்லப்படும் இருணச் சீட்டுகள் மூலமாய் ஏற்படும் முதலுக்குள்ள வருமானம் கழகத்தின் இலாப நஷ்டங்களுக்குச் சம்பந்தமில்லாமல் ஒரே விகிதத்தில் கொடுக்கப்படுகிறது. ஆனல் சாதாரண பங்குகளுக்கு (Ordinary Shares) கிடைக்கும் வருமானம் கழகத்தின் இலாபநஷ்டப்படி மாறுபாடு அடைகின்றது. ஆகையால் சாதாரண பங்குடையவரின் வருமானத்தில் ஒரு பகுதி முதலின் வட்டியென்றும் மற்ருெரு பகுதி இலாபமென்றும் சொல்லலாம். அதாவது ஒரு கழகத்தின் "டிவிடென்டு" என்று சொல்லும் வருமானம் முழுவதும் முதலின் தேறின வட்டியென்று சொல்ல முடியாது.

வட்டி விகிதத்தைப்பற்றித் தற்காலத்தில் அதிகச் சர்ச்சை ஏற்பட்டிருக்கிறது. வட்டி விகிதம் எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது? பொதுவாக வட்டிவிகிதம் முதலின் தேவையையும்,

முதலின் இருப்பையும் பொறுத்திருக்கிறது, மூலதனத்தை சரியான தொழில்களில் அமைத்து இலாபமடையக்கூடுமாகில் மூலதனத்துக்கு அதிகத் தேவை ஏற்படுகிறது. வேண்டிய முதல் கிடைக்க வேண்டுமானால், முதலாளிகள் தமக்குக் கிடைக்கும் வட்டியையும் தம் முதலுக்குக் கூடியவரை விபத்து ஒன்றும் ஏற்படாமல் இருக்கக்கூடிய நிலைமையையும் கவனிக்கின்றனர். பொதுவாகக் கவர்ன்மெண்டாருக்குக் குறைந்த வட்டிக்கு ஜனங்கள் பணம் கடன் கொடுக்கத் தயாராயிருப்பதற்கு ஒரு முக்கிய காரணமென்னவென்றால் தம் விடுமுதலுக்குக் கூடியவரை விபத்து ஏற்படாதென்ற நோக்கமேயாம்.

இந்தியாவிலுள்ள பெரிய தொழில்களுக்கு வேண்டிய முதலானது வெளி தேசங்களிலிருந்து வாங்கப்படுகிறது. ஆகையால் தொழில்களின் இலாபமும், முதலின் வட்டியும் வெளிதேசங்களுக்குப் போகின்றன. ஒரு கூட்டுக் கடையின் முதலானது அத்தொழில் நடத்தப்போதாது. ஆகையால் அதிக முதல் கடன்வாங்க வேண்டியிருக்கிறது. பொதுவாகப் பெரிய தொழில்கள் பாங்குகளிலிருந்து கடன் வாங்குகின்றன.

வட்டிவீதமானது கோட்பாட்டிற்குரிய முறையில் ஓரிடத்தில் கடன் வாங்குவோருக்கு ஒன்றாகவேதான் இருக்கவேண்டுமென்றாலும், கடன் வாங்குவோர் அந்தஸ்தையும், கடனின் தவணையையும் பொறுத்திருக்கிறது, வட்டி வீதமானது பல இடங்களில் பலவிதமாயிருக்கிறது. நாட்டுப்புறத்திலுள்ள வட்டிவீதம் நகரப்புறத்திலுள்ள வட்டிவீதத்தைவிட அதிகமாயிருக்கிறது. தவிரவும் வ்ட்டிவீதம் காலத்திற்குத் தக்கபடி மாறுபாடு அடைகின்றது. விவசாயப் பொருள்கள் ஏற்றுமதிக்குத் தயாரயிருக்கும் காலத்தில் பணத்திற்கு அதிகதேவையிருப்பதால் அக்காலத்தில் வட்டிவீதம் அதிகமாயிருக்கிறது. பொதுவாக ஜூலை, ஆகஸ்டு மாதங்களில் பாங்கு வட்டி வீதம் 3% அல்லது 4% ஆக இருக்கிறது. செப்டம்பர், அக்டோபர் மாதங்களில் வட்டிவீதம் அதிகரித்து வருகின்றது. இவ்வித ஏற்றம் மார்ச்சு மாதம் வரை நிலைக்கின்றது. ஏப்ரல் மாதம் முதல் மறுபடியும் வட்டிவீதம் குறைந்து தாழ்வு வீதம் அடைகின்றது. இந்தியாவில் சராசரி வட்டிவீதம் ஐரோப்பா தேசங்

களிலுள்ள வட்டிவீதத்தைவிட அதிகமாயிருப்பதாகச் சொல்லலாம். சமீப காலங்களில் இந்திய கவர்ன்மெண்டார் வாங்கும் கடன்களுக்கு வட்டிவீதம் 3% அல்லது 4%க்கு மேலிருப்பதில்லை.

விவசாயிகள் கிராம சராப்புகளிடமிருந்து கடன் வாங்குகின்றனர். வாங்கும் கடனுக்கு அதிக வட்டி கொடுக்கின்றனர். விளைச்சலில் ஒரு பாகத்தை கடனுக்காகக் கொடுக்கின்றனர். கல்யாணத்திற்கும், வியாச்சியத்திற்கும், இதர செலவுகளுக்கும் விவசாயிகள் அதிக வட்டிக்குக் கடன் வாங்குவது சகஜமாயிருக்கிறது.

விவசாயிகளின் கடன்பட்ட நிலைமையை நீக்குவதற்கு அநேக உபாயங்கள் செய்யப்பட்டு வருகின்றன. கவர்ன்மெண்டார் சில சட்டங்களை நிரூபித்திருக்கின்றனர். பஞ்சாபில் நிலம் பராதீனமடையாமலிருப்பதற்குச் சட்ட நிருபணம் செய்திருக்கின்றனர். கூட்டுறவுச் சங்கங்கள் ஏற்படுத்தி அவை மூலமாய் சொற்ப வட்டிக்குக் கடன் கொடுப்பதால் விவசாயிகள் அவைமூலமாய் முன்னேற்ற மடையலாம். தவிரவும் கடும் வட்டி வாங்காமலிருப்பதற்குக் கடும் வட்டிச் சட்டங்கள் ஏற்பட்டிருக்கின்றன. 1910-ம் வருஷம் கடும் வட்டிச் சட்டம், (Usurious Loans Act) நிருபணம் செய்யப்பட்டது. சமீப காலத்தில் சென்னை சர்க்கார் விவசாயக் கடனுக்கு வட்டி வீதத்தைச் சட்ட மூலமாய் விதித்திருக்கின்றனர்.

இலாபம் (Profits)

கீழ்க்குறிப்பிட்ட ஒரு வியாபாரியின் வரவு செலவு கணக்கைக் கவனிப்போம்.

வரவு-செலவு கணக்கு

	ரூ.	அ.	பை.		ரூ.	அ.	பை.
மாதத்தில் வாங்கிய சரக்குகள்	3000	0	0	மாதத்தில் விற்றது	2500	0	0
மொத்த இலாபம்	1000	0	0	மாதக் கடைசியில் கையிருப்புச் சரக்குகளின் மதிப்பு	1500	0	0
	4000	0	0		4000	0	0

மாதக் கடைசியில் சரக்குகளின் அடக்கவிலைக்கும் (Cost price) விற்கும் விலைக்கும் உள்ள வித்தியாசம் ரூ. 1,000. இத்தொகை வியாபாரியின் மொத்த இலாபமாகக் (Gross Profit) கருதப்படுகிறது. மொத்த விற்பனையில் மொத்த இலாபத்தின் நூற்று வீதம் எவ்வளவென்று கவனிப்போம். இதை பின் வருமாறு விளக்கலாம்.

மொத்த இலாபம்=ரூ. 1000 : மொத்த விற்பனை=ரூ.2500 ஆகையால் நூற்று வீதம்

$$=\frac{\text{மொத்த லாபம்}\times 100}{\text{மொத்த விற்பனை}}=\frac{1000\times 100}{2500}=40.$$

அடக்கவிலையில் மொத்த இலாபத்தின் நூற்றுவீதம்—அதாவது வாங்கின சரக்குகளின் விலையிலிருந்து கையிலிருக்கும் சரக்கின் விலையைக் கழித்தபிறகு உள்ள வீதம் பின்வருமாறு கணக்கிடப்படுகிறது.

$$=\frac{\text{மொத்த இலாபம்}\times 100}{\text{அடக்கவிலை}}=\frac{1000\times 100}{1500}=66\tfrac{2}{3}$$

செலவுகளும் நிகர இலாபமும் (Expenses and Net Profit) :—மேற்குறிப்பிட்ட 40% மொத்த இலாபம் வியாபாரியின் இலாபமாகக் கணக்கிடக்கூடாது. வியாபார விஷயமாய் ஏற்படுகிற செலவுகளை (கட்டிட வாடகை, விளக்குச் செலவு, வேலையாட்கள் கூலி முதலியன) கழித்த பிறகு மீதியுள்ள தொகையே தேறின அல்லது நிகர இலாபமாகக் கருதப்படுகிறது. வியாபார சம்பந்தமான செலவுகளை ரூ. 150 என்றும், வேலையாட்கள் சம்பளம் ரூ. 100 என்றும் வைத்துக்கொள்வோம். பிறகு நிகர இலாபத்தைப் பின் வருமாறு எடுத்துக் காட்டலாம்.

இலாப நஷ்டக் கணக்கு

(Profit and Loss Account)

	ரூ.	அ.	பை.		ரூ.	அ.	பை
கூலி	100	0	0	மொத்த இலாபம்	1000	0	0
வியாபாரச் செலவு	150	0	0				
நிகர இலாபம்	750	0	0				
	1000	0	0		1000	0	0

நிகர இலாபம் ரூ. 750 ஆகக் கணக்கிடப்பட்டிருக்கிறது. மொத்த விற்பனையில் (Turnover) நிகர இலாபத்தின் நூற்று வீதத்தைப் பின்வருமாறு கணக்கிடாலம்.

$$\frac{\text{நிகர இலாபம்} \times 100}{\text{மொத்த விற்பனை}} = \frac{750 \times 100}{2500}$$

$$= 30$$

அடக்கவிலையில் நிகர இலாபத்தின் நூற்று வீதத்தைப் பின்வருமாறு விளக்கலாம்.

$$\frac{\text{நிகர இலாபம்} \times 100}{\text{அடக்கவிலை}} = \frac{750 \times 100}{1500} = 50$$

மொத்த விற்பனையில் வியாபாரச் செலவின் நூற்று வீதத்தை (Percentage of Expenses on Turn-over) பின்வருமாறு விளக்கலாம்.

$$\frac{\text{வியாபாரச் செலவுகள்} \times 100}{\text{மொத்த விற்பனை}} = \frac{250 \times 100}{2500}$$

$$= 10$$

இலாபப் பிரிவினை (Division of Profits)

மேற்கூறிய ஒரு வியாபாரத்தின் கணக்குப்படி மொத்த இலாபம் ரூ. 1000. இந்த மொத்த இலாபத்திலிருந்து தொழில் சம்பந்தமான செலவுகளைக் கழிக்கவேண்டும். வாடகைக்கு ரூ. 10ம், வேலையாட்களுக்கு ரூ. 100ம், முதலின் வட்டிக்கு ரூ. 5 ம் கழிக்கும்படி வைத்துக்கொள்வோம். இவைகளெல்லாம் கழித்தபிற்கு ரூ. 750 மீதமிருக்கிறது. இத்தொகையே நிகர இலாபமாகச் சொல்லவேண்டும். மேற்கூறிய வியாபாரம் ஒருவர் மூலதனத்தினுல் நடைபெற்ருல் இந்த இலாபம் முழுவதும் அவரைச் சேருகிறது. மேற்கூறிய வியாபாரம் கூட்டுப் பங்குக் கழகமாக நடைபெற்ருல் இலாபமானது கழகத்தில் பங்குள்ளவர்களுக்குப் பிரிவினையாகிறது. ஒரு தொழிலின் மூலதனம் ரூ. 3000 என்று வைத்துக்கொள்வோம். இம் முதலின்பேரிலுள்ள நிகர இலாபத்தின் நூற்றுவீதம் பின் வருமாறு கணக்கிடலாம்.

$$\frac{\text{நிகர இலாபம்} \times 100}{\text{முதல்}} = \frac{750 \times 100}{3000} = 25$$

பொதுவாகச் சிப்பந்திச் செலவுகளைக் (Overhead charges) குறைத்தும், மொத்த விற்பனையை (Turnover) அதிகப்படுத்தியும் வந்தால் நிகர இலாபம் அதிகப்படும்.

வியாபாரத்தில் நேர்மையான முறை என்னவென்ருல் அதிக விற்பனையும், குறைந்த இலாபமும் (Small Profits and Quick returns) எதிர்பார்க்கவேண்டும். இம் முறையை அநுசரித்தால் வியாபாரம் மேன்மையடையும், உதாரணமாக ஒரு கம்பெனியின் தொழில் முறையைக் கீழ்க்கண்டபடி விளக்கலாம்.

	ரூ.
மூலதனம். (Capital)	4,000
வாங்கிய சரக்குகள் (Purchases)	8,000
விற்பனை (Sales)	10,000
சிப்பந்திச் செலவு. (Working expenses)	1,000
மொத்த இலாபம்	2,000
நிகர இலாபம்	1,000

மொத்த விற்பனையில் மொத்த இலாபம் 20% ஆகின்றது. நிகர இலாபம் 25% ஆகின்றது. மேற்குறிப்பிட்ட வியாபாரி மொத்த விற்பனையை 10% அதிகப்படுத்தினல் அதாவது ரூ. 11,000 வரை விற்பனை செய்தால், அவனுடைய மொத்த இலாபம் 19% அதிகப்படுகிறது. அதாவது மொத்த இலாபத் தொகை ரூ. 2200; சிப்பந்திச் செலவும் கொஞ்சம் அதிகப்படும். 3% அதிகப்படுவதாக வைத்துக்கொள்வோம்; அதாவது 1030 ஆகிவிடும். நிகர இலாபம் 1000த்திலிருந்து 1170க்கு அதிகரிக்கிறது. தேறின அதிகம் ரூ. 170; முதலின் மேலுள்ள நிகர இலாபம் 25% விருந்து 29·25க்கு ஏற்றமடைகிறது.

மேற்கூறிய உதாரணங்களிலிருந்து நாம் தெரிந்துகொள்ளும் முக்கிய விஷயம் என்னவென்ருல் விலை (Price) தேவை (Demand) இருப்பு (Supply) மொத்த விற்பனை (Turn over) மதிப்பு (Value) இவைகளெல்லாம் ஒன்றையொன்று பொறுத்திருக்கிறது என்பதே.

இதுவரை வியாபார முறையில் இலாபம் எவ்வாறு கணக்கிடப்படுகிறதென்பதைக் கவனித்தோம். பொருளாதார நூலில் "தனி இலாபம்" (Pure Profit) என்று சொல்லப்படுவது என்னவென்று கவனிப்போம். A. B. C. D. என்று நான்கு நபர்கள் தனித்தனியே ஒரு பொருளை விற்பனைக்காக உண்டாக்குவதாக வைத்துக் கொள்வோம். A என்பவர் B யைவிடக் குறைந்த செலவிலும் B என்பவர் Cயை விடக் குறைந்த செலவிலும் C என்பவர் Dயை விடக் குறைந்த செலவிலும் அதே பொருளை உண்டாக்குவதாக வைத்துக்கொள்வோம். A. B. C. ஆகிய மூவரும், Dயைவிடக் குறைந்த விலைக்கு விற்க முடிந்தபோதிலும் D என்பவர் ஏற்படுத்தும் விலைக்கே தம் பொருளை விற்பார்கள். இதனுல் Dயை விட அதிக இலாபமடைகின்றனர். கிரமமான போட்டியினுல் ஒரு பொருளை விற்பதற்கு முடிவாக ஏற்படும் விலையானது இலாபமுள்ள கடைசி நபராகிய D வைக்கும் விலையைப் பொறுத்திருக்கிறது. A. B. C. ஆகிய மூவருக்கும் Dயை விட அதிகமாகக் கிடைக்கும் இலாபத்தை தனி இலாபம் (Pure Profit) எனலாம்.

இலாபக் கொள்கை
(Theory of profit)

பொருளுற்பத்திக்கு முக்கிய ஊக்கத்தைக் கொடுப்பது இலாபமே. எந்தத் தொழிலிலும் இலாபமில்லாமல் நீடித்து நடப்பது துர்லபம். சில தொழில்களில் மட்டுக்கு மிஞ்சி இலாபமும் சிலவற்றில் குறைந்த இலாபமும் காணப்படலாம். தொழில் அபிவிருத்திக்கு இலாபமானது ஒரு தூண்டு கோலாகும். பாங்குகள், இன்ஷூரன்ஸ் கம்பெனிகள், வியாபாரம் முதலியவற்றின் வரவு செலவு கணக்கைப் பார்ப்போமாகில் அவைகளின் அபிவிருத்திக்கு அவைகள் அடையும் இலாபமே ஒரு முக்கிய சாதனமாகும்.

ஒரு தொழிலை அமைத்துச் சிறந்த முறையில் நடத்துவதற்கு வேண்டிய அறிவு, ஊக்கம், முதலியன சிலரிடமேதான் காணப்படுகிறது. அவர்களின் தொண்டுகளுக்குக் கிடைப்பதே இலாபமென்று கூறலாம். சில சமயம் இலாபமும் சில சமயம் நஷ்டமும் தொழில்களில் ஏற்படுவது சகஜமாயிருக்கிறது. நஷ்டமில்லாமல் இலாபமே அதிகப்படச் செய்ய வேண்டியதற்கு வேண்டிய துணிவும் தொழில் அமைக்கும் சக்தியுமுடையோர் அதிக ஊதியம் பெறுவது நியாயமென்றே கருதவேண்டும். அதிகமாக இலாபம் பெறுவதில் விந்தையில்லை. இந்தக் கருத்தைக்கொண்டு தான் வாக்கர் (Walker) என்பார் இலாபமானது ரிகார்டோவின் (Ricardo) நில வார விதி போன்றுள்ளது என்றார்.

தொழில் நடத்தும் பொறுப்பும் துணிவும், ஊக்கமும் ஏற்படக்காரணமாக இருப்பது இலாபமே. இலாபத்தை அதிகமாக்க வேண்டும் என்ற உணர்வு இருப்பதால் தான் விஞ்ஞான முறையில் தொழில் அமைப்பு ஏற்படுகின்றது. பொருளுற்பத்தியில் தடங்கலின்றி நடக்கக் காரணமாய் இருப்பது இலாபமே. ஆனால் இவ்வளவு முக்கிய பகுதியான இலாபத்தை முழுமையாக விளக்கும் விதிகள் இல்லாமை கண்டு நாம் வருந்தவேண்டியதாயிருக்கிறது. மொத்த இலாபம், நிகர இலாபம், சுத்த இலாபம் என நாம் இலாபத்தைப் பிரித்துப் பார்ப்போமாகில் சுத்த இலாபம் (Pure Profit) எதிர்பாராமல் நமக்குக் கிடைக்கக்கூடிய தன்மை உடையதாக இருக்கிறது.

அரும்பத விளக்கம் (Glossary)

தேவை (Wants)
முயற்சி (Effort)
குறைபயன் விதி (Law of Diminishing Utility)
குறைந்துசெல் பயன் விதி (Law of Diminishing Return)
விரிந்துசெல் பயன் விதி (Law of Increasing Return)
மாறாப்பயன் விதி (Law of Constant Return)
தடையில்லாப் போட்டி (Free Competition)
அறநூல் (Ethics)
வேதிநூல் (Chemistry)
அரசியல் (Politics)
உளநூல் (Psychology)
சரித்திரம் (History)
கூலி நிதிக் கொள்கை (Wages Fund Theory)
பொருளாதாரப் பொது நலன் (Economic Welfare)
புள்ளி விவரங்கள் (Statistics)
பொருள் நுகர்வு (Consumption)
பொருளியல் தேவை (Demand)
கூட்டுத் தேவை (Joint demand)
கிளைத் தேவை (Composite demand)
பயன் (Utility)
கடை நிலைப்பயன் (Marginal utility)
பொருளுற்பத்தி (Production)
பெருவாரிப் பொருளுற்பத்தி (Large scale Production)
ஓரிடத்தொழிற் செறிவு (Localization of Industry)
தொழிலமைப்பிடம் (Location of Industry)
விவசாயம் (Agriculture)
ஜனத்தொகை (Population)
உழைப்புப் பகுப்பு (Division of Labour)
முதல் (Capital)
சேமிப்பு (Savings)

செலவிடுதல் (Spending)
பொருள் மாற்றுதல் (Exchange)
வட்டி (Interest)
*இலாபம் (Profit)
கூலி (Wages)
நிலவருமானம் (Rent)
குடிசைத் தொழில் (Cottage Industry)
வருமானம் (Income)
பண வருமானம் (Money Income)
பொருள் வருமானம் (Real Income)
தனி நபர் வருமானம் (Individual Income)
தேசிய வருமானம் (National Income)
வருமான ஏற்றத்தாழ்வு (Inequalities of Income)
செல்வம் (Wealth)
விபாகம் (Distribution)
சந்தை (Market)
ஓரிடச் சந்தை (Local Market)
தேசீயச் சந்தை (National Market)
பன்னாட்டுச் சந்தை (International Market)
சமநிலை (Equilibrium)
வழக்க விலை (Normal Price)
கிட்டங்கி (Warehouse)
கூட்டுறவு (Co-operation)
சிறிய பண்ணை (Small Farm)
பெரிய பண்ணை (Large Farm)
விலை மட்டம் (Price level)
வாழ்க்கைச் செலவு (Cost of living)
வாழ்க்கைத்தரம் (Standard of living)
ஜனத்தொகை (Population)
மதிப்பு (Value)
குறைந்தகால மதிப்பு (Short Term Value)
நீண்டகால மதிப்பு (Long Term Value)
தடையில்லாப் போட்டி (Perfect Competition)

---

*சுத்த இலாபம் (Pure Profit) நிகர இலாபம் (Net Profiit)

ஜனன விகிதம் (Birth Rate)
மரண விகிதம் (Death Rate)
துணைத் தொழில்கள் (உபத் தொழில்கள்) (Subsidiary Industries)
பிரதி கரண விதி (Law of Substitution)
பிரதானத் தொழில்கள் (Key Industries)
முதலீடு (Investment)
கர்ப்பத் தடை (Birth Control)
அதிகபட்சக் கூலி (Maximum Wage)
குறைந்தபட்சக் கூலி (Minimum Wage)
உற்பத்திக்குரிய சாதனங்கள் (Factors of Production)
வியாபாரச் சமநிலை (Balance of Trade)
கணக்குச் சமநிலை (Balance of Accounts)

—

Decennial growth of Population*

Population			Decennial growth		
Millions			Millions		%
1901	...	238	—	...	—
1911	...	252	14	...	6
1921	...	252	—	...	—
1931	...	279	27	...	11
1941	...	319	40	...	14
1951	...	361	42	...	13

Classification of Land Area Surveyed

Average for five Years (1945—50)

	'000 acres	%
Cultivated area	327,800	52·5
Fallow land	59,370	9·5
Sown area	268,430	43 0
Area under forest	93,390	15·0
Land not available for cultivation	99,570	16·0
Other cultivated land	102,660	16·5
Unclassified	60	—
Total area surveyed	623,480	100·0
Irrigated area	47,860 (or 14·6% of cultivated area)	

*Including Jammu and Kashmir.

Vittal Statistics

Comparative 1951

	Population estimates	Birth rate	Death rate	Infant mortality
	('000s)	(Per 1,000)	(Per 1,000)	(Per 1,000) (live births)
India	356,800	25	14	137*
Australia	8,400	23	10	25
Canada	14,000	27	9	38
France	42,000	19	13	52*
Japan	84,300	26	10	57
Sweden	7,100	16	10	21
U. K.	50,300	16	13	31
U. S. A.	154,400	25	10	29

*1950

Mineral Production

	1948	1949	1950	1951
		'000 tons		
Coal	29,800	31,500	32,000	34,300
Iron	2,285	2,819	2,965	3,657
Manganese ore	526	646	883	12,84
Copper ore	322	329	360	369
Ilmenite	229	308	213	220
Mica	8	8	8	10
Bauxite	22	43	64	67
Chromite	23	19	17	16
Gypsum	78	140	206	204
Magnesite	48	91	53	117
Petroleum (mn. Gal)	66	67	n.a.	n. a.
Gold ('000 oz)	180	164	197	226

Production and Sale of Coal and Electricity

	Coal		Electricity*	
	Raisings	Despatches	Generated	Sold
	'000 tons		Million Kwh	
1948	29,800	25,900	4,600	3,700
1949	31,500	28,100	4,900	4,000
1950	32,000	28,800	5,100	4,200
1951	34,300	29,100	5,900	4,800
1952	36,200	31,100	6,200	5,000

*Public Supply Undertaking only.

இந்திய தேசிய வருமானம்

Net National Income of India. (1948—49)

	Rs. Crores.
உள்நாட்டு வருமானம் அல்லது விளைவு (Domestic Income or product at factor cost)	8730
வெளி நாட்டிற்கு அனுப்பியது (கழிவு) (Less remitted abroad)	20
தேசிய வருமானம் அல்லது விளைவு (National Income product at factor cost)	8710
மேல்படி தொகையுடன் கூட்டிக்கொள்ள வேண்டியது—மறைமுகவரிகள் உப வரிகள் அல்லாமல் (Add indirect taxies less subsidies)	460
தேசிய வருமானம் சந்தை விலைக்கு (National Income at market prices)	9170
ஜனத்தொகை (1948-ம் வருஷத்திய உத்தேசம்) (Population estimate for 1948)	millions 341
ஒரு மனிதனின் தேசிய வருமானம் (National Income per capita)	Rs. 255

II. தேசீய வருமானம் உற்பத்தியிடும் வகையில்

(Analysis of National Income by Source)

வருமானம் (Income)	Rs. Crores	%	Income per engaged person Rs.
விவசாயம் (Agriculture)	4150	47·4	500
பெருவீதத் தொழில் (Large Scale Industry and mining)	640	7·3	1700

வருமானம் (Income)	Rs. Crores	%	Income per engaged person Rs.
சிறிய தொழில் (Small Scale Industry)	860	9·8	600
ரெயிலும் போக்குவரத்து சாதனங்களும் (Railways and Communications)	230	2·7	1900
பாங்குகள், இன்ஷூரன்ஸ் போக்குவரத்து (Banking Insurance and Transport)	1470	16·8	1500
தொழில்கள் (Professions and Liberal Arts)	320	3·7	600
அரசியல் (Government administration)	1060	5·3	1300
இதர சேவைகள் (Other Services)	600	6·8	400
உள்நாட்டு மொத்த வருமானம் (Total domestic Income)	8730	100·0	660

III. தேசீய வருமானத்தில் சிறிய பெரிய தொழில்களின் பங்கு

(Shares of small and large Enterprises in National Income)

(1948—1949)

	Rs. Crores	%
சிறிய தொழில்கள் (Small enterprises	5350	61·3
பெரிய தொழில்கள் (Large enterprises)	1050	12·0
வகுக்கப்படாதவை (Unclassified)	2330	26 7
உள்நாட்டு வருமானம் (Domestic Income)	8730	100·0

IV. Shares of Private and Public Sectors in National Income and Expenditure

(1948—1949)

	National Income at factor cost		National Expenditure at Market Prices	
	Rs. Crores	%	Rs. Crores	%
Private Sector	7970	91·3	8330	90·8
Public Sector	760	80·7	840	9·7
Domestic Income or Expenditure	8730	100·0	9170	100·0

V. Government's Draft on National Income

1948–49

	Rs. Crores	%
Direct Taxes	200	2·3
Indirect Taxes	420	4·8
Miscellanous	70	0·8
Total Draft	690	7·9
Domestic Income	8730	100·0

VI. National Income per capita comparative statistics

	Rs.
India (1948–49)	255
Australia	3070
Canada	4210
France	2280
Japan	480
Pakistan	240
Sweden	3520
United Kingdom	2700
United States of America	6970
Union of Soviet Socialist Republics	1500